விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை (15.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 332

## கல்வியங்காட்டில் ஒருவருக்கு கொரோனா

### தனிமைப்படுத்தலை முடித்து சுயதனிமையில் இருந்தவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட் 15

## சுழிபுரம் இரட்டைக்கொலை; ஒரே குடும்பத்தில் 4 பேர் கைது

### பிரதான சந்தேக நபர் உட்பட 15 பேருக்கு பொலிஸார் வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுழிபுரம் இரட்டைக் கொலைச் சம்பவம் தொடர்பில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட பதினைந்து பேர் தலைமறைவாகியுள்ளனர் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இரு குடும்பங்களுக்கு இடையில் நீண்ட காலமாக நிலவி வந்த முரண்பாடு நேற்று முன்தினம வாய்த்தர்க்கமாக மாறியது.

பின்னர், நேற்று முன்தினம் இரவு ஒரு தரப்பினர் மீது கூரிய



ஆயுதங்களால் தாக்கியுள்ளனர்.

அதில் சின்னவன் செல்வம் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 15

## ஊர்காவற்றுறை புளியங்கூடலில் கிணற்றில் தவறிவிழுந்த மாற்றுத் திறனாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை புளியங்கூடலில் மூன்று பிள்ளைகளின் தந்தையான மாற்றுத் திறனாளி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுற்கலஇடம பெற்ற இந்தச் சம்பவத் 15

## தீபாவளி தினமான நேற்று வடக்கின் பல்வேறு பகுதிகளில் வன்முறைச் சம்பவங்கள்

(யாழ்ப்பாணம்)

- கோப்பாய் மாட்டிறைச்சிக் கடையில் கத்திக்குத்து. இறைச்சி வாங்கச் சென்றவர் படுகாயம்.
- குடும்பத் தகராறு காரணமாக வயோதிபர் மீது யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் கத்திக்குத்து.
- துன்னாலை தக்குசம்பாதி பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் இருவர் படுகாயம்.
- அல்வாய்ப் பகுதியில் வாள்வெட்டுக்கு இலக்கான ஒருவர் படுகாயம்.
- துன்னாலையில் மோதல்; இருவர் படுகாயம்.
- விசுவமடுவில் தேநீர் கடையில் உணவருந்திய இளைஞன் மீது வாள்வெட்டு.

**கோப்பாய்**

கோப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து, இறைச்சி வாங்கச் சென்றவர் கத்திக்குத்தில் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 8 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாட்டிறைச்சி வாங்கச் சென்ற கோப்பாயை சேர்ந்த 40 வயதுடைய ஒருவர் கத்திக்குத்துக்கு இலக்காகி கோப்பாய் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

புத்தளத்தைச் சேர்ந்த சுன்னாகத்தில் வசிக்கும் இறைச்சிக் கடை உரிமையாளர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறைச்சி வாங்கச் சென்றவர் இறைச்சி பசு மாடு போல் உள்ளது என்று தெரிவித்ததால் உரிமையாளர் கோபமடைந்து கத்தியால் குத்தி தாக்கியுள்ளார் என்று பொலி 15

## நாட்டில் நேற்றும் +389 தொற்றாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நேற்றும் +389 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித் 15

## புங்குடுதீவில் வெடிபொருட்கள் இராணுவத்தால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு பகுதியில் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்.புங்குடுதீவு பகுதியில் 15

## குருநகரில் வசித்தவருக்கு கொழும்பில் தொற்று உறுதி

### 12 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், குருநகர் பாண்டியன்தாழ்வு பகுதியில் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை தொடர்ந்து குருநகர் 15

## வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மீது தாக்குதல்

### பாதுகாப்பு உத்தியோகத்தர் துப்பாக்கிச் சூடு

(வவுனியா)

வவுனியா கற்பகபுரம் 4ஆம் கட்டை பகுதியில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் மீது இளைஞர் குழு தாக்குதல் மேற்கொண்டதுடன் அவரின் வாகனத்தினையும் சேதப்படுத்தியுள்ளது.

இதனை அவ 15

## வீடுகளில் உயிரிழப்போருக்கு கொரோனா பரிசோதனை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மத்தியில் வீடுகளில் உயிரிழப்பவர்களிடம் அந்தப் பகுதி சுகாதார அதிகாரிகள் அல்லது நீதவான் உத்தரவின் பேரில் பி.சி.ஆர் பரிசோதனைகள் நடத்தப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. 15

## அல்வாயில் மோதல் சம்பவம்

### 10க்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில்

(கரணவாய்)

அல்வாய் நக்கீரன் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதல் 15

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் பதவி நீக்கம்

### கொரோனா தொடர்பான உண்மை தகவலை வெளியிட்டாரா?

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் பேச்சாளர் பதவியில் இருந்து மருத்துவர் ஜய 15

# வீட்டு முற்றத்து தென்னை விசமிகளால் அரிந்து வீழ்த்தப்பட்டது

## கொக்குவில் பூநாறிமடத்தில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் - பூநாறிமடம் பகுதியில் உள்ள வீட்டு முற்றத்தில் நின்ற தென்னை மரம் ஒன்றை விசமிகள் இயந்திர வாளினால் அரிந்து வீழ்த்திவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். பூநாறிமடம் 3ஆவது ஒழுங்கையில் வீதியோரம் வீட்டு வளவிற்குள் நின்ற தென்னையே நேற்று முன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் அரிந்து வீழ்த்தப்பட்டுள்ளது.

இவ்வாறு வீழ்த்தப்பட்ட தென்னை மரம் அருகில் இருந்த மின் கம்பம் மீது சாய்ந்து மின் கம்பமும் உடைந்து வீழ்ந்ததோடு பிரதான மின் இணைப்புக் கம்பிகள் யாவும் அறுந்து வீழ்ந்துள்ளன. இதன்போது குறித்த நாசகாரச் செயலை செய்த கும்பல் அங்கிருந்து தப்பியோடியுள்ளது. இதன்போது விழுந்த தென்னை மரம் வீதியோரம் இருந்த ஒரு மாதா சொரூபத்தையும் சேதப்படுத்தியது.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சேதங்களின்போது அப் பகுதி முழுமையாக மின்சாரம் துண்டிக்கப்பட்டதோடு 10 மணி நேரத்தின் பின்பு 3 வீடுகள் தவிர்ந்த ஏனைய வீடுகளிற்கான மின் இணைப்பு மின்சார சபையின் நீண்ட முயற்சியினால் ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும் இணைப்பு வழங்காத 3 வீடுகளிற்கும் பொலிஸாரின் முறைப்பாட்டுப் பிரதி கிடைத்த பின்பே வழங்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இதேநேரம் குறித்த வீட்டில் கடந்த யூன் 14ஆம் திகதியும் இதேபோன்று ஒரு தென்னை விசமிகளால் இரவோடு இரவாக வீழ்த்தப்பட்டமை தொடர்பில் பொலிசாரின் விசாரணை இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-03)

# போகம்பரைச் சிறையில் 80 கைதிகளுக்கு கொரோனா

கண்டி பழைய போகம்பரை சிறைச்சாலையில் மேலும் 80 கைதிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குருவிட்ட சிறைச்சாலையில் 14 பெண் கைதிகளுக்கும் கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ம-03)


அன்பு வாசகர்களே!

கடல்புறா தொடர்

ஞாயிறுதோறும் வெளிவரும் என்பதனை அறியத் தருகின்றோம்.

கோவிட் - 19 அசாதாரண நிலைமை நாட்டில் தணியும் போது **கடல்புறா** தொடர் தினசரி வெளிவரும்.


# பாடசாலைகள் ஆரம்பிப்பதில் மாற்றங்கள் ஏற்படலாம்

## கல்வியமைச்சின் செயலாளர்

(கொழும்பு)

சாதாரண தர பரீட்சைக்கு முகம் கொடுக்கும் மாணவர்களின் பாடத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை அறிய கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. அதற்காக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இணையத்தளம் ஊடாக தகவல் பெறப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபலி பெரேரா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை க.பொ.த சாதாரண தர பரீட்சை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் 23ஆம் திகதி பாடசாலைகளை மூன்றாம் தவணைக்காக மீண்டும் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

பாடசாலை ஆரம்பித்தல் மற்றும் எதிர்வரும் நடவடிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பாடசாலைகளை ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரிகளிடம் கலந்துரையாடல் மேற்கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தீவிரம் அடைந்துள்ள நிலையில், பாடசாலைகளை திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

# கொரோனா தொடர்பில் போலிச் செய்தியை சமூக வலைத்தளத்தில் வெளியிட்டவர்

## கைதாகி விளக்கமறியலில்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பலர் உயிரிழந்த நிலையில் வீதியோரங்களில் இருந்து மீட்கப்பட்டதாக போலிச் செய்தியை சமூகவலைத்தளத்தில் வெளியிட்ட சந்தேக நபரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு ஒலிப்பதிவொன்றை வெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியதாவது,

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகிய பலர் வீதியோரங்களில் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக சமூகவலைத்தளத்தில் போலிச் செய்தியொன்று வெளியிடப்பட்டுள்ளதாக தெரியவந்ததையடுத்து குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கணினி குற்றவியல் விசாரணை பிரிவினரும் அது தொடர்பில் விசாரணைகளை நடத்தி வந்தனர்.

இந்த போலிச் செய்தியை பதிவிட்டமை தொடர்பில் கடுகண்ணாவ - ஹெகொட ஹேணகல பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரொருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சந்தேக நபர் நேற்று சனிக்கிழமை கண்டி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டு, எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். வைரஸ் தொற்று காரணமாக இதுவரையில் 53 பேர் உயிரிழந்துள்ளதுடன், யாசகர் ஒருவர் மாத்திரமே வீதியோரத்தில் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தார். இந்நிலையில் இந்த போலிச் செய்தியை வெளியிட்ட சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த செய்தியை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்தமை தொடர்பில் மேலும் நான்கு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களை கைது செய்வதற்காக குற்றப் புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கணனி குற்றவியல் விசாரணை பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். அதற்கமைய இவ்வாறான போலிச் செய்திகளை பதிவிடுவதையும், அவற்றை பகிர்வதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

(ம-03)

# தொற்றாளருடன் தொடர்பு கூட்டமைப்பின் பிரமுகர் சுயதனிமைக்குள்ளானார்

(யாழ்ப்பாணம்)

கொரோனா தொற்றாளர் ஒருவருடன் தொடர்பில் இருந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர் சுயதனிமைப்படுத்தலுக்குள்ளானார்.

கடந்த 10ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்கு சென்ற தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரமுகர் ஒருவர், கொழும்பில் பலரையும் சந்தித்து பேசியுள்ளார். அவர் சந்தித்து பேசிய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, யாழ்ப்பாணத்தில் நேற்று அந்த பிரமுகர் சுயதனிமைக்குள்ளானார். (ம-3)

# பலூன் வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் சுகாதாரப் பிரிவினரால் வெளியேற்றம்

## நெல்லியடிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலிருந்து வந்து யாழ். பருத்தித்துறை - நெல்லியடி பகுதியில் பலூன் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் சுகாதார பிரிவினால் வெளியேற்றப்பட்டதுடன், பலூன் வாங்க கூடியிருந்தவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ்பரவலையடுத்து தனிமைப்படுத்தல் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. அதனால் நடைபாதை வியாபாரங்களுக்கும் மக்கள் ஒன்று கூடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீறியமையால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நேற்றுச் சனிக்கிழமை நண்பகல் நெல்லியடியில் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் வாயு சிலிண்டர் பயன்படுத்தி பலூன்கள் மற்றும் காற்றடைக்கப்பட்ட பொம்மைகள் விற்பனையில் ஈடுபட்டிருந்தனர். அதனை அறிந்த கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்படி நடவடிக்கையை எடுத்தார். (ம-03)


உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?; மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு

கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (4648)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (4620)

077 340 5951

e-mail : engchelvam@gmail.com

காணி விற்பனைக்கு

மல்லாகம் சந்தி K.K.S வீதிக்கும் - நீதிமன்ற வீதிக்கும் மிக அண்மையில் கோவைப்புலம் என்னும் இடத்தில் 14 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உள்ளது.


துண்டுகளாகப் பிரிக்கவும் முடியும். (C-692)

தொடர்பு : 077 087 1396

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

# வடமாகாணத்தில் பிரதான வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைக்காக தொற்றாளர்கள் அனுமதிக்கப்படுவது வழமையாகி விடக்கூடாது

## துறைசார் நிபுணர்கள் எச்சரிக்கை




**(கிளிநொச்சி) வடமாகாணத்திற்கான சேவையை வழங்கிவரும் பிரதான வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளிகள் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவது வழமையான செயற்பாடாக இருந்து விடக்கூடாது என்பதே துறைசார் நிபுணர்களின் கருத்தாகும்.**

கொரோனா தொற்றாளர்களுக்கு அவசர சிகிச்சை தேவைப்படுமிடத்து யாழ்.போதனா வைத்தியசாலை, கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலை இரண்டையும் தயார் நிலையில் வைக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 200 கட்டில்கள் வசதி கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இச்சிகிச்சை நிலையத்திற்கு அனுமதிக்கப்படுகின்ற கொரோனா நோயாளிகளுக்கான அவசர மருத்துவ தேவைகள் ஏற்படுமிடத்து அதி தீவிர சிகிச்சை மற்றும் பராமரிப்பிற்காக அவர்கள் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

மேலும், மாங்குளம் வைத்தியசாலையும் கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டு கொரோனா நோயாளிகளுக்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. எனவே தொற்று உறுதியான ஒருவருக்கு மூச்சுத்திணறலோ அவசர இதய நோய் அல்லது இரத்த அழுத்தம், சிறுநீரக நோய் ஏதாவது ஏற்படுமிடத்து அருகிலுள்ள கிளிநொச்சி பொது வைத்தியசாலையை நாடவேண்டிய தேவையுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சிவைத்தியசாலையில் ஆளணிப்பற்றாக்குறை **(Human resource)** மற்றும் இடப்பற்றாக்குறை **(infra structure)** பெரும் பிரச்சினையாக உள்ளதுடன் குறைந்த வளங்களைக் கொண்டு நோயாளர் சேவையை வழங்கி வருகின்றனர்.

மேலும், கொரோனாத் தொற்றுக்குளளான நபர் ஒருவர் அவசர சிகிச்சை பெற வருமிடத்து மற்றைய நோயாளர்களுக்கான வழமையான சேவைகள் தடைப்படுவதுடன் வைத்தியசாலைக்கு வருகை தரும் ஏனைய நோயாளர்கள் அச்சப்படும் நிலையும் காணப்படுகின்றது.

வடமாகாணத்திற்கான 200 கட்டில் வசதிகள் கொண்ட தொற்று நோய் வைத்தியசாலை ஒன்றைத் திட்டமிடும் போது அவசரசிகிச்சை பிரிவு, அதி தீவிர சிகிச்சை பிரிவு, ஆய்வுகூட வசதிகள், எக்ஸ்ரே பரிசோதனை என்பன அத்தியாவசிய தேவையாகவுள்ள போதும் அவை கருத்தில் கொள்ளப்படாமை தொடர்பாக சுகாதார துறைசார் நிபுணர்கள் விசனம் தெரிவித்தனர்.

தொழில்நுட்பகுழு மற்றும் துறைசார் நிபுணர்களின் ஆலோசனைகள் பெறப்பட்டிருந்தால் இத்தவறுகள் சீர் செய்யப்பட்டிருக்கும் என்பதுடன் அவசரகால தேவை என்பது அரைகுறையாக ஓர் வைத்தியசாலையை திறப்பதை நியாயப்படுத்திவிட முடியாது என மாகாணத்தின் மூத்த வைத்திய நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர். அத்துடன் கொரோனா நோயாளர்களுக்கான த்னியான அதி தீவிர சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு, சிறு சத்திர சிகிச்சை கூடம் போன்ற வசதிகள் விரைவாக ஏற்படுத்தப்பட வேண்டும்.

தற்போதைய கொரோனா நோய்த்தாக்கத்திலும், கூடிய நிலை எதிர்வரும் காலங்களில் ஏற்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ள நிலையில் வட மாகாணத்திற்கான சேவையை வழங்கிவரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கோ, 250,000 மக்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கும் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கோ கொரோனா நோயாளிகள் அனுமதிக்கப்படுவது வழமையான ஓர் செயற்பாடாக இருந்துவிடக் கூடாது என்பதே துறைசார் நிபுணர்கள் பலரதும் எண்ணமாகும். (நி-4)

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07 • 02 • 1944

மறைவு 31 • 10 • 2016

அமரர். **சின்னப்பு பத்மநாதன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**திதி: வளர்பிறையில் பிரதமை 15.11.2020**

**நீங்கள் மறைந்து நான்காண்டுகள் சென்றாலும்<br>என்றும் மறவாது உங்கள் நினைவுகள் என்றென்றும்<br>உங்கள் நினைவலைகளுடன் எங்கள்<br>வாழ்க்கைப் பயணங்கள் தொடரும்**

(4647)

**"மிதிலா"<br>கூவில்<br>புலோலி தெற்கு புலோலி.**

**உங்கள் நினைவுகளுடன்<br>மனைவி, பிள்ளைகள்,<br>மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

---

# அடுத்த ஆண்டிற்கான பாடசாலை தவணை அட்டவணை

2021 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணை அட்டவணை சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

### சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகள் முதலாம் தவணை

**முதல் கட்டம்**

2021 ஜனவரி 04 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

(க.பொ.த.சாதாரண தர பரீட்சைக்காக 16.01.2021 தொடக்கம் 31.01. 2021 வரை விடுமுறை வழங்கப்படும்)

**இரண்டாம் கட்டம்**

2021 பெப்ரவரி 01 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஏப்ரல் 9 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**இரண்டாம் தவணை**

2021 ஏப்ரல் 19 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஜூலை 30 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**மூன்றாம் தவணை**

2021 ஒகஸ்ட் 30 திங்கட்கிழமை தொடக்கம் 2021 டிசெம்பர் 03 வெள்ளிக்கிழமை வரை

### முஸ்லிம் பாடசாலைகள் முதலாம் தவணை

**முதல் கட்டம்**

2021 ஜனவரி 04 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஜனவரி 15 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

(க.பொ.த சாதாரண தர பரீட்சைக்காக 16.01.2021 தொடக்கம் 31.01. 2021 வரை விடுமுறை வழங்கப்படும்)

**இரண்டாம் கட்டம்**

2021 பெப்ரவரி 01 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஏப்ரல் 09 வெள்ளிக்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

**இரண்டாம் தவணை**

2021 மே 17 திங்கட்கிழமை தொடக்கம் 2021 ஒகஸ்ட் 25 புதன்கிழமை வரை (இரண்டு நாட்களும் உட்பட)

(2021 ஒகஸ்ட் 26,27 இரண்டு நாட்களும் விடுமுறை வழங்கப்படும்)

**மூன்றாம் தவணை**

2021 ஒகஸ்ட் 30 திங்கட்கிழமை தொடக்கம் 2021 டிசெம்பர் 03 வெள்ளிக்கிழமை வரை என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-4)

# ஹிஸ்புல்லாவின் ஹிரா அமைப்பு முறையாகப் பதியப்படவில்லை

## சாட்சியம் வழங்கினார் சமூக சேவை அதிகாரி

(கொழும்பு)

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாவின் ஹிரா அறக்கட்டளை அமைப்பு, சமூக சேவைகள் திணைக்களத்தில் முறையாக பதிவு செய்யப்படவில்லை.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் அளிக்கப்பட்ட சாட்சியத்தின்போது இந்த விடயம் வெளியானது.

ஆணைக்குழுவின் சமூக சேவை அதிகாரி தம்மிகா வசலா பண்டார, தமது சாட்சியத்தை வழங்கினார்.

சமூக சேவை அமைப்புக்களின் பதிவுப்பட்டியலில், ஹிரா அறக்கட்டளை தொடர்பான எந்த ஆவணங்களும் திணைக்களத்தில் இல்லை என்று அவர் குறிப்பிட்டார். எனினும் 2011 ஜூலை 20 ஆம் திகதியன்று ஹிரா அறக்கட்டளைக்கு, சமூக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழ் குறித்து ஆணைக்குழு, சாட்சியிடம் கேள்வி எழுப்பியது.

ஆவணத்தை பார்வையிட்ட சாட்சி, ஹிரா அறக்கட்டளையின் பதிவு தொடர்பாக திணைக்களத்தில் அத்தகைய ஆவணம் எதுவும் இல்லை என்று கூறினார். "ஹிரா" அறக்கட்டளை சமர்ப்பித்த இந்த ஆவணம் முரண்பாடானது. , ஏனெனில் இந்த ஆவணம் திணைக்களத்தில் இல்லை என்று சாட்சி தெரிவித்தார்.

இந்த அறக்கட்டளை சமூக சேவைத் துறையில் பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் காலப்பகுதியில் முன்னாள் மேலதிக பணிப்பாளர் முகமது ஹனிபா முகமது சமீல், சமூக சேவை திணைக்களத்தின் பணிப்பாளராக கடமையில் இருக்கவில்லை என்றும் சாட்சி குறிப்பிட்டார்.

ஹிரா அறக்கட்டளை பதிவு செய்யப்பட்டதாக கூறப்படும் 2013 ஆம் ஆண்டு காலத்தில் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் முகமது சமீல் முஸ்லிம் கலாசார விவகாரத் துறை இயக்குநராக பணியாற்றியதாகவும் சாட்சி தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், சமூக சேவைத் துறையின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் முகமது ஹனிபா முகமது சமீல் தமது சாட்சியத்தின்போது அத்தகைய பதிவு ஆவணத்தை ஹிரா அறக்கட்டளைக்கு வழங்கியது தவறு என்ற உண்மையை ஏற்றுக்கொண்டார்.

இதேவேளை முஸ்லிம் அமைச்சர்களுக்கு முஸ்லிம் விவகாரத் திணைக்களத்துடன் உள்ள தொடர்பு குறித்து இதன்போது ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் சாட்சியை விசாரித்தனர். இதன்போது அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் நாட்டின் பள்ளிவாசல்களை பதிவு செய்வது குறித்து தம்முடன் விவாதித்ததாக அவர் தெரிவித்தார்.

மத இடங்களை பதிவு செய்யும் நடிக்கைகளில் ஏன் முஸ்லிம் அமைச்சர்கள் ஈடுபட்டனர்? அவர்கள் சாட்சியின் மீது ஏதேனும் அழுத்தம் கொடுக்கிறார்களா? என்று ஆணைக் குழு உறுப்பினர்கள், சாட்சியிடம் கேள்வி எழுப்பினர்.

இந்தக் கேள்வி சாட்சிக்கு பதிலளித்த அவர், தாம் நடைமுறைக்கு அப்பால் செயற்படவில்லை. பல அமைச்சர்கள் பள்ளிவாசல்களை பதிவு செய்வதில் கோரிக்கைகளை விடுத்திருந்தாலும், ஒரு பள்ளிவாசலை பதிவு செய்யும் போது அறங்காவலர் சபையான வக்ஃபு சபையின் முடிவை திணைக்களம் எப்போதும் பரிசீலித்து வந்ததாக குறிப்பிட்டார். (நி-4)

# கொரோனா கட்டுப்பாட்டில் இலங்கை முதன்மை இடம்

(கொழும்பு)

உலகின் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கையில் இலங்கை முதன்மை வகிப்பதாக இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றுகையில் அவர் இதனை கூறியுள்ளார். உலகின் பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் கொரோனா வைரஸ் தொற்று கட்டுப்பாட்டு நடவடிக்கையில் இலங்கை முதன்மை வகிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# கந்தசஷ்டி ஆரம்பம்

(குப்பிழான்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய வருடாந்த கந்தசஷ்டி உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 5.30 மணியளவில் அபிஷேகம் மற்றும் விசேட பூசைகளுடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்களுக்குப் பவித்திரம் (தர்ப்பை) அணிவிக்கப்படும்.

இதே தினம் அடியவர்கள் காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளிலும் பவித்திரம் அணிந்து கொள்ள முடியும்.

இவ்வாலய கந்தசஷ்டி வழிபாட்டில் கலந்து கொள்ளும் அடியவர்களின் நெருக்கத்தினைக் குறைப்பதற்காக ஆலயமானது காலையிலிருந்து மாலை வரை திறந்திருக்கும்.

ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்கள் வழிபாடுகளை முடித்தவுடன் வீடு செல்வது விரும்பத்தக்கது.

இதேவேளை, நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அனைத்து முருகன் அடியவர்களும் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி முகக் கவசமணிந்து ஆலய வழிபாட்டில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (நி-18)

# நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அமையவே முடிவு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக எவராவது இறக்கும் சந்தர்ப்பத்தில் இறந்தவரின் உடலை அடக்கம் செய்ய கோரிக்கை விடுத்தால், அதற்கு அனுமதி வழங்குவதா, இல்லையா என்பது குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசேட நிபுணர் குழுவின் இறுதி அறிக்கைக்கு அமையவே முடிவு செய்யப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது சம்பந்தமாக பல்வேறு நபர்களிடம் இருந்து கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த விடயம் சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்டுள்ள விசேட நிபுணர் குழுவின் அறிக்கைகள் கிடைக்க உள்ளன.

அத்துடன் அண்மையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

அமைச்சரவையில் இந்த விடயம் முன்வைக்கப்பட்ட போது, விசேட நிபுணர் குழுவின் அறிக்கைக்கு அமையவே தீர்மானிக்கப்படும் என நான் அமைச்சரவைக்கு அறிவித்தேன்.

இதனால், அந்த அறிக்கை கிடைத்ததும் இறுதி தீர்மானத்தை எடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார். (ஜ-4)

# வெளிநாட்டு அமைச்சின் எச்சரிக்கை

(கொழும்பு)

கட்டணம் அல்லது எந்தவொரு நிதிக் கொடுப்பனவையும் கோரும் தனிநபர்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எதிர்காலத்தில் உள்நுழையும் மற்றும் வெளிச் செல்லும் அனைத்து இலங்கைப் பிரயாணிகளையும் இலங்கை வெளிநாட்டு அமைச்சு எச்சரித்துள்ளது.

இலங்கைக்குள் நுழைவதற்கோ அல்லது வெளியேறுவதற்கோ உரிய அங்கீகாரத்தை சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் தவிர எந்தவொரு நபருக்கும் அல்லது நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கம் அளிக்கவில்லை என வெளிநாட்டு அமைச்சு இதன்மூலம் அறிவித்துள்ளது. (ஜ-4)

# இலங்கையர்களை அழைத்துவர 5 விமானங்கள்

(கொழும்பு)

கொரோனா நோய்த்தொற்று நிலைமையின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை ஐந்து விமானங்கள் மூலம் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் 18 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 290 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்படவுள்ளதுடன் எதிர்வரும் 20 ஆம் திகதி இத்தாலியிலிருந்து 100 இலங்கையர்கள் திருப்பி அழைத்து வரப்படவுள்ளனர்.

அத்துடன், 297 இலங்கையர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி கட்டாரிலிருந்து அழைத்து வரப்படவுள்ளதுடன் மேலும் 297 இலங்கையர்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி குவைத்திலிருந்து அழைத்து வரப்படவுள்ளனர்.

எதிர்வரும் 26 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானில் இருந்து அழைக்கப்படுவார்கள் என்றும் வெளிநாட்டு அமைச்சின் கிழக்கு ஆசியாவுக்கான பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# விபத்தில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பிளாந்துறையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் மட்டக்களப்பு, மண்டூர் பலாச்சோலை, மயான வீதியை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சு.பரணிதரன் என்னும் 37 வயதுடைய குடும்பஸ்தர் இவ்வாறு உயிரிழந்தார்.

வெலிக்கந்தையில் இருக்கும் வயலுக்கு சென்று கொண்டிருக்கும் போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.


மோட்டார் சைக்கிளில் வேகமாக சென்றபோது வேகத்தினை கட்டுப்படுத்த முடியாமல் மின்சார தூணில் மோதி இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# 45ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்

புங்குடுதீவு பாணாவிடை சிவன் ஆலய பிரதமகுரு

## இராசையா இராசரூபசர்மா

அன்னை மடியில்
13 - 07 - 1987



ஆண்டவன் மலரடியில்
02 - 10 - 2020

திதி:- பௌர்ணமி பிரதமை

"தோன்றில் புகழுடன் தோன்றுக - அஃதில்லையேல் தோன்றலில் தோன்றாமை நன்று"

13.07.1987 அன்று அவிட்டத்தில் பிறந்த நீ
02.10.2020 ரேவதியில் சென்றதெங்கே?
அன்னை மடியில் தொடங்கும் வாழ்க்கைப் பயணம்
ஆண்டவன் மலரடியில் சேரும் வரை போராட்டம்
பொருள் பண்டம் பெரிதென வாழும் நிகழ்கால உலகம்
நித்திய புன்னகை உன் உலகம் பெரிதென வாழ்ந்தாய்
பெற்றவர், உடன் பிறந்தோர்,உற்றவர் கிளிநொச்சியிலிருக்க
பேறு பரமசிவன் பணியென பற்றினாய் பாணாவிடைசிவனை
2009 முதல் 02.10.2020 வரை உன் பிரார்த்தனை
இவ்வளவு விருப்பமோ சிவனுக்கு
வேகமாய் உனை அழைத்த காரணம்
யதார்த்தவாதி வெகுசன விரோதி" இதுதான் உலகம்
உண்மையை உரக்க கூறினாய்
உன்னையே சரித்தார்கள் பொய்யினால்
போக்கும் வரவும் புணர்வும் இல்லாப் புண்ணியனே!
எங்கே எம் குடும்பத்தைக் காக்கும் இராசையா இராசரூபசர்மா
புரட்டாதி பௌர்ணமியில் பிரதமை உன் திதி
நிச்சயம் புரட்டிப்போடும் சதிகார கும்பலை
அமைதியாய் உறங்கையா உன் மரணம் என்றாலும்
புங்குடு தீவுக்கு விடுதலை கொடுக்கட்டும்
ஊரைதீவு பாணாவிடை சிவனே அமைதி கொடு
அடைக இராசரூப சர்மாவின் ஆத்ம சாந்தி.

14.11.2020 நேற்று சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் ஐயாவின் அஸ்தி கரைக்கப்பட்டது. இன்று 15.11.2020 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும் என்பதனை அறியத் தருவதுடன்

எங்கள் தெய்வ மகனின் பிரிவுச் செய்தி கேட்டு ஓடிவந்து எமக்கு ஆறுதல் கூறி பல வழிகளில் உதவிகள் புரிந்த மற்றும் தொலைபேசி மூலம் தொடர்பினை ஏற்படுத்தி எமது துயரினை பகிர்ந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள், புங்குடுதீவு வாழ் மக்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களிற்கும் எமது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

கனகாம்பிகைக்குளம்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(4626)

# சுரேன் ராகவனின் ஆலோசனையில் கொரோனா விழிப்புணர்வு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனின் ஆலோசனையின் கீழ், அவரின் தனிப்பட்ட பணிக்குழாமினர், யாழ்ப்பாணம், சுன்னாகம் பிரதேச பொலிஸாருடன் இணைந்து, யாழ்ப்பாணத்தின் பாசையூர், குருநகர், நாவாந்துறை திருநெல்வேலி, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கைகளை நேற்று முன்தினம் ஆரம்பித்துள்ளனர்.

இந்த விழிப்புணர்வு செயற்பாட்டின் போது, பொதுமக்களுக்கு தேவையான முகக்கவசங்களும், கொரோனா பரவலை தடுப்பது தொடர்பாக, அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (நி-4)




வளர்ந்து வரும் நாட்டுக்கு வளரும் ஒரு மரம் என்ற எண்ணக்கருவின் கீழ் "துருலிய லங்கா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். மாநகர சபையின் மர நடுகை நிகழ்வு யாழ்.மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் தலைமையில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் அமைந்துள்ள யாழ்.மாநகரக் காணியில் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் யாழ் மாநகர பிரதிமுதல்வர், மாநகர ஆணையாளர், மாநகர பொறியியலாளர், துறைசார் அதிகாரிகள், மாநகர தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், வேலைப்பகுதி உத்தியோகத்தர்கள், மாநகர உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நான்காயிரத்திற்கும் மேற்பட்ட காணி விண்ணப்பங்கள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் மாத்திரம் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட இளம் தொழில் முயற்சியாளர்களுக்கான காணி விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருப்பதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

காணி முகாமைத்துவ அலுவல்கள்,அரச தொழில் முயற்சிக் காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டில் இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அரச காணிகளில் முதலீட்டு வாய்ப்புகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-30)



நல்லூர் கமலாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி திருக்கோயிலில் ஐப்பசி கடைசி வெள்ளியை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலை கால(இயம) சம்ஹார உற்சவம் இடம்பெற்றது.மார்க்கண்டேயர் பொருட்டு இறைவன் மரணத்தின் அதிபதியான இயமனை சம்ஹரித்து பின் உயிர்ப்பித்தருளிய நிகழ்ச்சி உற்சவமாக நடத்தப்பட்டது. நல்லூர் சிவன் கோயிலில் பல்லாண்டுகளாக வெகுசிறப்பாக நடைபெறும் இந்நிகழ்வு தற்போதைய சுகாதார நிலைமை காரணமாக உள்வீதியில் இடம்பெற்றது.ஆலய பரிபாலகர், அர்ச்சகர்கள், உபயகாரர்கள் போன்றவர்களின் பங்கேற்புடன் நிகழ்ந்த இந்நிகழ்வில் நாட்டின் இன்றைய சூழல் கருதி பொதுமக்கள் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (படங்கள் - ஐ.சிவசாந்தன்)

# திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழில் சைக்கிள் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடைத்தொகுதியில் சைக்கிளை நிறுத்தி விட்டு பொருட்களை வாங்கச் சென்று திரும்பி வந்து பார்த்த போது சைக்கிள் திருடப்பட்டிருந்தது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இது தொடர்பில் சைக்கிள் உரிமையாளர் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ஜ-110)

# பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தினால் முகாமைத்துவப் பட்டக் கற்கைநெறி **(Bachclor of Management Studies (Honors) Degree Programme - BMS)** 2020 ஆம் ஆண்டிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில் முடிவுத் திகதியாக 10.11.2020 என அறிவிக்கப்பட்ட போதும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக விண்ணப்ப முடிவுத் திகதி 30.11.2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது என இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களை அறிய விரும்பின் இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தினை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். (5)

# 25 பேர் கைது




(கொழும்பு)

சமூக இடைவெளியை பேணாமை மற்றும் முகக் கவசங்கள் அணியாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளில் நேற்று முன்தினம் மாத்திரம் 25 பேர் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித்ரோஹண இதனைத் தெரிவித்தார்.

இதன்படி இதுவரையில் இந்த குற்றச்சாட்டுக்களின் கீழ் 201 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் மன்னார் மாவட்ட குற்றபுலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 4 கிலோ 345 கிராம் கேரளக் கஞ்சா பொதிகளை தன் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கடந்த வியாழக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுல வீரசிங்கவின் பணிப் பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்சி, மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரி குமார பள்ளேவலவின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் சஞ்சீவ ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கேரளக் கஞ்சா பொதியினையும், குறித்த நபரையும் கைது செய்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஜ-4-285)

# 'கர்மா' குறுந்திரைப்படம் வெளியீடு



(மன்னார்)

மன்னார் ஊடகவியலாளர் எஸ். ஜெகனின் இயக்கத்தில், மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தின் தயாரிப்பில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட "கர்மா" குறுந்திரைப்படம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை மன்னார் நகர மண்டபத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

குறித்த வெளியீட்டு நிகழ்வில் மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன், மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி. வினோதன்,மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுலவீரசிங்க, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த படம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனையை மையப்படுத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4-285)

# தொற்றா நோயாளர்களுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

தொற்றா நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அந்த நோய்கள் தொடர்பான பாதிப்புகள் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தொற்று நோய் அல்லாத நோய்கள் தொடர்பான விசேட மருத்துவர் சம்பிகா விக்ரமசிங்க கோரிக்கை விடுத்தார்.

சுகாதார கல்வி பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு தொற்றா நோய் பாதிப்புகள் ஏற்பட்டால் அது குறித்து பொது சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரிக்கு அறிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனிமைப்படுத்தப்படாது சாதாரணமாக வீட்டில் இருக்கும் நபருக்கு இப்படியான பாதிப்புகள் ஏற்பட்டால், 1990 நோயாளர் காவு வண்டி சேவையின் ஊடாக வைத்தியசாலையில் அனுமதிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மேலும் சுகாதார கல்வி பணியகத்தின் 1999 மற்றும் 011-3422558 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார். (ஐ-4)


## சேவை

நீங்கள் அடகு வைத்து மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும் நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை AAA Gold Center.

0765684346 (C-1174)



## N.K.Sales & Service Centre

சகல விதமான தையல் இயந்திரங்கள் திருத்துநரும் உதிரிப்பாகங்கள் விற்பனையாளரும்.



35/2 A, பிள்ளையார் கோவில் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.
(அத்தியடி பிள்ளையார் கோவில் பின் வீதி)
077 967 1932


# தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்

(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை பேணியவர்களுக்காக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை புதிய தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

கொரோனா பரவலுக்கு மத்தியில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக 1927 என்ற தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக குறித்த கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்களும் இந்த தொலைபேசி எண்ணுக்கு அழைப்பு விடுத்து ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணின் ஊடாக 24 மணித்தியாலங்களும் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளின் ஊடாக சேவைகளை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# 72 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா அச்சுறுத்தலான சூழ்நிலையில் வெளிநாடுகளில் சிக்கியிருந்த 72 இலங்கையர்கள், நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைகளுக்காக கொழும்பிலுள்ள ஆஸ்த்திரி, நவலோகா மற்றும் லங்கா தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (ஐ-4)

# கொவிட்டை கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் சரியான முகாமைத்துவம் இல்லை-சாடுகிறார் மரிக்கார்



(கொழும்பு)

கொவிட் 19 வைரஸை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முடியாமல் போயுள்ளது. ஜனாதிபதியும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளார்.

அரசாங்கத்திடம் சரியான முகாமைத்துவம் இன்மையால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது என எதிர்க்கட்சி உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொவிட் காரணமாக நாட்டின் நிகழ்கால நிலைமை தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், கொழும்பு நகரில் மக்கள் வீடுகளுக்குள்ளேயே இறக்கின்றனர்.

ஆனால் மரணப்பத்திரத்தில் கொவிட் என்றே எழுதப்படுகின்றது. ஆனால் அது சுகாதார அமைச்சின் ஆவணத்தில் பதிவாவதில்லை. அதன் பின்னர் நாட்டின் மரணவீதம் குறைவு என அறிக்கை விடுகின்றனர்.

ஆரம்பத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்தியபோது, வெளிநாடுகளை உதாரணம் காட்டினார்கள்.

ஆனால் நாங்கள் செய்ததை யாரும் கதைப்பதில்லை என தெரிவித்த ஜனாதிபதி, இரண்டாவது அலை வந்தபோது, யுத்தத்தைக் கட்டுப்படுத்தியதுபோல் வைரஸை கட்டுப்படுத்த முடியாது என்கிறார் என அவர் தெரிவித்தார். (நி-4)


## காணி விற்பனைக்கு

K.K.S சந்தி. பலாலி விமான நிலையம் என்பவற்றிற்கு 1Km தூரத்தில் 14 பரப்பு. 8 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0761724033 (C-1173)



## பணிப்பெண் தேவை

கொழும்பில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு 50 வயதிற்குட்பட்ட பணிப்பெண் தேவை. யாழ்ப்பாண சமையல் தெரிந்திருப்பது நல்லது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை அல்லது வன்னி. திருமலை. மட்டக்களப்பு போன்ற இடங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :071 735 5607 (C-1172)


# 20 ஐ ஆதரித்தவர்களை ஆளும் தரப்புடன் இணையுங்கள் சபாநாயகரிடம் லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கை

(கொழும்பு)

20 ஆம் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 9 பேரவையும் ஆளும் தரப்புடன் இணைத்துவிடுமாறு எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஸ்மன் கிரியெல்ல சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிபேசிய அவர், 'அரசாங்கம் கொண்டுவந்த 20 ஆம் திருத்த சட்டத்தை ஆதரித்து வாக்களித்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் 9 பேரையும் எதிர்க் கட்சியுடன் அமர வைக்க வேண்டாம் என கடிதம் மூலம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளேன்.

எனவே நீங்கள் அதனை கருத்தில் கொண்டு அவர்கள் 9 பேருக்கும் ஆளும் தரப்பின் பக்கம் ஆசனங்களை ஒதுக்கிக் கொடுக்க வேண்டும். 17 ஆம் திகதி வரவு-செலவு திட்ட விவாதங்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இது மிகப்பெரிய பிரச்சினையாக மாறும். ஆகவே இவர்கள் 9 பேரவை யும் ஆளும்கட்சியின்பக்கமோ ஆளும்கட்சியின் கும்பலிலோ ஆசனங்களை ஒதுக்கிக் கொடுங்கள்' என்றார். இதற்கு பதிலளித்த சபாநாயகர், 'இந்த காரணிகள் குறித்து நான் ஆராய்ந்து முடிவு ஒன்றினை வழங்குகின்றேன்' எனத் தெரிவித்துள்ளார். (நி-4)


## வேலணை பிரதேசசபை பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

வேலணை பிரதேச சபையினால் பிடிக்கப்பட்டு உரிமை கோரப்படாத நாம்பன் கட்டாக்காலி கால்நடையொன்று பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

**இடம்:- வேலணை பிரதேச சபை தலைமை அலுவலகம்**

**காலம்:- 16.11.2020 திங்கட்கிழமை மு.ப 11.00 மணி**

❖ ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புவோர் குறித்த இடத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

❖ பகிரங்க ஏலத்தில் சித்தியடைவோர் உடனடியாக பணத்தினை செலுத்தி உரிய பட்டியிலிருந்து உரிய அனுமதியுடன் அன்றைய தினமே ஏற்றிச்செல்லல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: 0212211505

நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

(C-682)



## பிறந்த தின வாழ்த்துக்கள்



திருமதி. தயாநிதி சிறிகந்தராஜா (B.Com)

15.11.2020 இன்று தனது 57 ஆவது அகவை காணும் எமது பாடசாலையின் ஓய்வு நிலை சிரேஷ்ட ஆசிரியர் அவர்களை அவருடைய ஓய்வு நிலைக் காலம் அன்பான துணையோடும் அருமையான புத்திரர்களுடனும் வளமாகவும் நலமாகவும் ஐஸ்வர்யம் பெற்று அமைய வாழ்த்துகின்றோம்.

(4692)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்.

# அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள கொழும்பு நகரம்

(கொழும்பு)

**கொவிட் 19 பரவலால் கொழும்பு நகரம் பாரிய அச்சுறுத்தலை எதிர்க்கொண்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் டொக்டர் ஹரித அளுத்கே இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த 5 நாட்களில் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 1083 கொவிட் நோயாளிகள் பதிவாகியுள்ள நிலையில் இந்த ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

முன்னர் கம்பஹா மாவட்டத்தில் காணப்பட்ட அச்சுறுத்தல் மிகுந்த அவதான நிலைமை தற்போது கொழும்பு மாவட்டத்தில் காணப்படுகின்றது. விசேடமாக அண்மைய நாட்களுக்குள் கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் மாத்திரம் 200 க்கும் அதிகமான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் புதிய அவதான வலயங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. கட்டட நிர்மாண பணிகள் இடம்பெறும் இடங்கள் தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இது மிகவும் அவதான நிலைமையாகும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# வயோதிபர்களை தொற்றிலிருந்து பாதுகாக்க விசேட கவனம் தேவை

(கொழும்பு)

நாட்டில் உள்ள வயோதிபர்களை கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டும் என சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நீண்ட நாள் நோயாளர்கள் போன்றவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அபாய நிலை ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை கொரோனாத் தொற்றாளர்கள் 468 பேர் நேற்று முன்தினம் அடையாளங் காணப்பட்ட நிலையில் அவர்களுள் பெருமளவிலானவர்கள் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# எமது வீரர்களின் தியாகங்களால் நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கு நன்றிகள்

## பிரதமர் நெகிழ்ச்சி

(கொழும்பு)

எங்கள் ஆயுதப் படைகளில் உள்ள துணிச்சலான ஆண்கள் மற்றும் பெண்களின் தியாகங்களால் நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கு நன்றி செலுத்துகின்றோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

உலக பொப்பி தினத்தை முன்னிட்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு இலங்கைப் படைவீரர்கள் சங்கம் பொப்பி மலரை அணிவித்துள்ளது.

இதனையடுத்து பிரதமர் விடுத்துள்ள டுவிட்டர் பதிவில்,

ஒருபோதும் திருப்பிச் செலுத்த முடியாத வகையில் அனைத்து வீரர்களுக்கும் நாங்கள் கடன்பட்டிருக்கிறோம். எங்கள் ஆயுதப் படைகளில் உள்ள துணிச்சலான ஆண்கள் மற்றும் பெண்களின் தியாகங்களால் நாம் அனுபவிக்கும் சுதந்திரத்திற்கு நன்றி செலுத்துகின்றோம்.

**# Lka's Ex Servicemen Assn இன் உறுப்பினர்கள்.**



தேசத்திற்கான சேவையில் தியாகம் செய்யப்பட்ட உயிர்களை நினைவுகூரும் வகையில், பொப்பி மலரை எனக்கு அணிவித்துள்ளனர் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளிலேயே பரீட்சை

## கல்வி அமைச்சு தகவல்

(கொழும்பு)

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள திகதிகளிலேயே பரீட்சையை நடத்த திட்டமிட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா கூறினார்.

இதனடிப்படையில், எதிர்வரும் ஜனவரி 18 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இதேவேளை கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பாடவிதானங்கள் முழுமைப்படுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் ஆய்வு செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்கள், மாணவர்களிடமிருந்து இணையத்தளம் ஊடாகவும் வலயக் கல்வி அதிகாரிகளிடமிருந்தும் தகவல்களை பெற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். (நி-4)

# 8 இலட்சத்து 17 ஆயிரம் ஹெக்டயரில் நெற்செய்கை

(கொழும்பு)

பெரும்போகத்தில் 8 இலட்சத்து 17 ஆயிரம் ஹெக்டயர் பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் வீரகோன் தெரிவித்தார்.

சிறுபோகத்தில் சிறந்த அறுவடை கிடைத்ததால் விவசாயிகள் பெரும்போகச் செய்கையில் ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே நெற்செய்கைக்குத் தேவையான உரத்தை விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# போலி அமெரிக்க டொலர்கள் அச்சிட்ட குழு கைது

(கொழும்பு)

அமெரிக்க டொலர்களைப் போன்று போலி நாணயத்தாள்களை அச்சடித்து இந்நாட்டு பணக்காரர்களிடம் அவற்றை வழங்கி, அவற்றை இலங்கை நாணயத்திற்கு மாற்றிவந்த குழுவொன்றின் மோசடி செயல் அம்பலமானது.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பேர் நேற்று முன்தினம் சாலியபுர இராணுவ முகாமுக்கு அருகில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இந்த மோசடிக் கும்பலைச் சேர்ந்தவர்கள் பொலிஸ் அதிகாரி, வர்த்தகர்கள் போன்று தங்களை காட்டிக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில், போலியான முறையில் அச்சிடப்பட்ட 753 நாணயத்தாள்களையும் அநுராதபுரம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (நி-4)

# கரந்தெனிய மற்றும் காலி தனிமைப்படுத்தப்பட்டன!

(காலி)

கரந்தெனிய மற்றும் காலி ஆகிய இடங்கள் தற்காலிகமாக தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றின் பரவல் அதிகரித்துள்ள நிலையில் 07 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து தென் மாகாண ஆளுநர் வில்லி கமகே இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

இதனை அடுத்து கரந்தெனிய பகுதியில் வசிப்பவர்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸை கண்டறியும் பி.சி.ஆர் சோதனை முடிவுகள் கிடைக்கும் வரை சில பகுதிகளை தற்காலிகமாக தனிமைப்படுத்த முடிவு செய்யப்பட்டது என்றும் ஆளுநர் வில்லி கமகே குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 120 |
| தக்காளி | 80 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 60 |
| கோவா | 80 | 100 | 120 |
| கரட் | 120 | 200 | 200 |
| பூசணி | 60 | 50 | 80 |
| புடோல் | 80 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 280 | 220-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 200 |
| பாகற்காய் | 300 | 300 | 280 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 80 | 90 | 100 |
| பீற்றூட் | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 180 | 200 |
| போஞ்சி | 180 | 160 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 220 | 250 |
| வெங்காயப்பூ | 250 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | -- | 120 |

## இராசிபலன்

15.11.2020
ஐப்பசி 30, ஞாயிற்றுக்கிழமை
அமாவாசை முற்பகல் 11.50 மணிவரை
விசாகம் முன்னிரவு 7.12 மணிவரை
சுபநேரம் 9.07-10.37 மணிவரை
இராகுகாலம் 4.37-6.07 மணிவரை
சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி
ஸ்கந்த சஷ்டி விரதாரம்பம்

வளவன்

**மேஷம்** – இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம்.

**ரிஷபம்** – அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – ஆரோக்கியத்தில் இருந்த குழப்பங்கள் தீரும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், வீட்டை பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள்.

**கடகம்** – பிள்ளைகளின் கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், மனதிற்கினிய சம்பவ ங்கள் இடம்பெறலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கன்னி** – ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், கொடுக்கல்:-வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்** – பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு, எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** – குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பிய படியே நிறைவேறலாம், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**தனுசு** – ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம், குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**மகரம்** – இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கும்பம்** – தொழில் நலன்கருதிய திட்டங்கள் வெற்றி பெறும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்** – அன்பால் சாதித்துக் காட்டும் நாள், உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும்.

உன் மீது நம்பிக்கை வைப்பவர் நடுவில் அதிக நேரத்தைச் செலவிடு

# தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலுள்ளவர்கள் மருந்துப் பொருட்களைப் பெற விசேட ஏற்பாடுகள்

(கொழும்பு)

**கொழும்பு மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் தொடர் மாடிக் குடியிருப்புக்களில் வசிப்பவர்களில் நீண்டகால மற்றும் தொற்றாநோய் நிலைமைகளை உடையவர்கள் தமக்கான மருந்துப் பொருட்களை வீடுகளுக்கே வரவழைத்துக் கொள்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சு அறிவித்திருக்கிறது.**

அவ்வாறான நோயாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு உயர்வாக இருப்பதனால் அதிலிருந்து அவர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சு தெளிவுபடுத்தியிருக்கிறது.

உயர் இரத்த அழுத்தம், இருதயநோய், நீரிழிவு, வலிப்பு, சிறுநீரகநோய், புற்றுநோய் போன்ற நீண்டகால நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலகுவாக கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியப்பாடு உயர்வாக இருப்பதுடன், அதனால் ஏற்படக்கூடிய தாக்கமும் உயர்வாகும்.

அதனால் மேற்படி நோய் நிலைமைகளைக் கொண்டவர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவதிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கு தொடர்ந்து தமது நோய்களுக்கான மருந்துகளை எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

எனவே அத்தகைய நீண்டகால அல்லது தொற்றாநோய்களுக்கு மருந்துகளைப் பயன்படுத்துபவர்கள் தமது தொடர்மாடிக்குடியிருப்பிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரிக்கு உரிய விபரங்களை வழங்குவதன் ஊடாக மருந்துப்பொருட்களை வீடுகளுக்கே வரவழைத்துக்கொள்ள முடியும்.

தமது பெயர், வயது, முகவரி மற்றும் வழமையாக மருந்துப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் மருந்தகத்தின் அல்லது வைத்தியசாலையின் பெயர் ஆகியவற்றை மேற்கூறப்பட்டவாறு உரிய பொலிஸ் அதிகாரியிடம் கையளிக்க வேண்டும். அதனூடாக நீண்டகால நோய் நிலைமைகளினால் பாதிக்கப்பட்டவர்கள் வீடுகளிலிருந்தவாறே தமக்கு அவசியமான மருந்துப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதேவேளை மேற்படி தொடர்மாடிக்குடியிருப்புக்களில் வசிப்பவர்களில் எவருக்கேனும் காய்ச்சல், தொண்டை வலி, உடற்சோர்வு, சுவாசப் பிரச்சினை போன்ற அறிகுறிகள் காணப்படுமாக இருந்தால் தமது தொடர்மாடிக்குடியிருப்பிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பொலிஸ் அதிகாரியிடம் அறிவிக்குமாறும் சுகாதார அமைச்சின் அறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக தகவல்களை 1999 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்வதன் ஊடாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

ஓம் ஸ்ரீ சாயிராம்

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி நேசமலர் சின்னத்துரை

(மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை வதிவிடமாகவும் கொண்டவர்)

திதி: பூர்வபட்ச ஏகாதசி



மலர்வு 17.08.1949

உதிர்வு 15.11.2006

தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி தரணியில் தலைநிமிர வைத்த தங்க அம்மாவே, கண்ணெனக் காத்த கண்மணியே ஆண்டு பதின்நான்கு ஆனாலும் உங்கள் அன்பு முகத்தை மறக்க முடியவில்லையே அம்மா. உங்கள் நினைவுகள் எம் மனதைவிட்டு என்றும் அகலாது நிறைந்திருக்கும். உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கரைப்பிரான் ஆதி விநாயகர் பெருமானை வேண்டுகிறோம்.

என்றும் உம் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(4639)

021 221 3058

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## ஜென்ம இராசியில் குரு பகவான்; சிந்தித்து செயற்பட்டால் வெற்றியுண்டு!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



மகர இராசி வாசகர்களே!

இதுவரை உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். அதிலும் நீச்சம் அடைகின்றார். சகாய ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியான குரு பகவான் ஜென்ம இராசியில் சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகளாலும் விரயம், உடனிருப்பவர்களாலும் விரயம், உடல்நிலைத் தொல்லையாலும் விரயம் என்ற நிலை ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றங்கள், ஊர்மாற்றங்கள், இலாகா மாற்றங்கள் போன்றவை திடீரென வந்து சேரலாம். 'ஜென்ம ராமர் வனத்திலே' என்பது ஒரு பழைய பாடல். ஆனால் அதை எண்ணி நீங்கள் கவலைப்பட வேண்டாம். உங்கள் சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றிருக்குமேயானால் நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும். சில மாதங்கள் குரு பகவான் 2ஆம் இடத்திற்கும் சென்று சஞ்சரிக்கின்றார்.

சில நாட்கள் வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். அதற்கேற்ப உங்களுக்குப் பலன்கள் அமையும். முன்னேற்றப் பாதையில் ஏதேனும் குறுக்கீடுகள் வருமேயானால், வியாழக்கிழமைதோறும் குரு பகவானை வழிபடுவதன் மூலம் துயரங்களில் இருந்து விடுபட இயலும்.

### குருவின் பார்வை பலன்

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களைப் பார்க்கின்றார். குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைகின்றது. மேலும் புத்திர ஸ்தானமாகவும், 5-ம் இடம் கருதப்படுவதால் தெய்வபலம் உங்களை வழிநடத்திச் செல்லும். திடீர் திருப்பங்கள் ஏற்பட்டு அதன் மூலம் நன்மைகளும் கிடைக்கும்.

முன்னோர்கள் கட்டி வைத்த கோவில் திருப்பணிகளை தொடர்ந்து செய்ய முன்வருவீர்கள். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகள் நனவாகப் போகின்றது. அவர்களின் மேற்படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும்.

குருவின் பார்வை ஏழாமிடத்தில் பதிவதால் அந்த இடம் புனிதமடைகின்றது. வாழ்க்கைத் துணையைப் பற்றி அறிந்து கொள்ளும் இடத்தைக் குரு பார்ப்பதால் திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்ப ஒற்றுமை பலப்படும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை மாறும். கூட்டுத்தொழிலில் இலாபம் கிடைக்கும். வெளிநாடு முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வீடு, இடம் வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். மூத்த சகோதரத்தால் முன்னேற்றங்கள் அதிகரிக்கும்.

குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் நூதனப் பொருள் சேர்க்கை ஏற்படும். பாக்கிய ஸ்தானம் பலம் பெறுவதால் பெரிய மனிதர்களின் நட்பு கிடைக்கும். பெற்றோர்கள் உங்கள் தொழிலுக்குத் தேவையான உதவியை செய்து கொடுக்க முன்வருவர். ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் அலைச்சலைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வது நல்லது. ஒவ்வாத உணவுகளை உட்கொண்டு பாதிப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும் வாய்ப்பு உண்டு.

### நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்

### உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11 .2020 முதல் 04.01.2021 வரை)

உங்கள் ராசிக்கு அஷ்டமாதிபதியாக விளங்குபவர் சூரியன். எனவே அவரது சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. குடும்ப ஒற்றுமை குறையும்.

தேவையில்லாத வீண் வாக்குவாதங்கள் வந்து கொண்டே இருக்கும். எதிர்பாராத வகையில் பணவரவுகள் வந்தாலும், திடீர் விரயங்களால் சேமிக்க இயலாது. அடிக்கடி ஆரோக்கியத் தொல்லைகளும், மருத்துவச் செலவுகளும் உண்டு. மாற்றுக் கருத்துடையோர் எண்ணிக்கையை உயரவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டில் இருப்பவர்கள் சொந்த ஊர் திரும்ப முடியாமல் தடைகள் வரலாம்.

### திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (05.01.2021 முதல் 01.03.2021 வரை)

உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்திற்கு அதிபதியானவர், சந்திரன். சப்தமாதிபதியான சந்திரன் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதாரத் தட்டுப்பாடுகள் அகலும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமைக்கு குந்தகம் விளைவித்தவர்கள் விலகுவர். பிள்ளைகளின் கல்யாணம் கைகூடும். வியாபாரப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். வீடு மாற்றங்கள் உறுதியாகலாம். வாகனம் வாங்கி மகிழும் யோகம் உண்டு. மனதுகாரகன் சந்திரன் என்பதால் எதையும் நீங்கள் நேர்மறையாகச் சிந்திப்பது நல்லது. உத்தியோகத்தில் உங்கள் திறமை வெளிப்படும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். சலுகைகளும்,




சம்பள உயர்வும் தர முன்வருவர்.

### அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ் வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (02.03.2021 முதல் 04.04.2021 வரை, மீண்டும் 14.09.2021 முதல் 13.11.2021 வரை)

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், செவ்வாய். சுக ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திற்கு அதிபதியான செவ்வாயின் சாரத்தில் குரு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, மிகுந்த நற்பலன்கள் உங்களுக்கு கிடைக்கும். தாய்வழி ஆதரவு திருப்தி தரும். 'இடம் வாங்கி வீடு கட்ட வேண்டும் அல்லது கட்டிய வீட்டைப் பழுது பார்க்கவேண்டும்' என்று நினைத்தவர்களுக்கு, அந்த வாய்ப்புக் கைகூடும். சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும் நேரமிது. போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். 'வெளிநாட்டில் பணிபுரிய வேண்டும்' என்று காத்திருப்பவர்களுக்கு இப்பொழுது அழைப்புகளும் வரலாம்.

சுயஜாதகம் பலம் பெற்றிருந்தால் அதை ஏற்றுக்கொள்வதில் தவறில்லை. 'உறவினர்களிடம் கொடுத்த கடன் வசூலாகவில்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, இப்பொழுது தானாகவே வசூலாகும். மூத்த சகோதரர்கள் மட்டுமல்லாமல் முன்னேற்றப் பாதைக்கு மற்ற சகோதரர்களும் வழிகாட்டுவர்.

### அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (05.04.2021 முதல் 13.09.2021 வரை)

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அவர் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. அப்பொழுது அந்த மூன்று ஸ்தானங்களும் புனிதமடைகின்றன. சகாய ஸ்தானாதிபதியான குரு 2-ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, பணப்புழக்கம் நன்றாக இருக்கும். மனக்கலக்கம் அகலும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த நல்ல மாற்றம் கிடைக்கும். அதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவிசாய்ப்பர். ஆதாயம் தரும் தகவல்கள் உங்களைத் தேடிவரும். எந்தக் காரியத்தையும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள். பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் பணியில் சேரும் வாய்ப்பு கிடைக்கும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சிக்கு நண்பர்கள் மூலதனம் போட முன்வருவர்.

### குருவின் வக்கிர இயக்கம்

16.06.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் ஆகிய இரண்டு ராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை உண்டு. உடல் ஆரோக்கியம் சீராக ஒரு தொகையைச் செலவிட நேரிடும். இடமாற்றம், வீடு மாற்றங்கள் எதிர்பாராமல் வரலாம். 'பக்கபலமாக இருப்பவர்களை நம்பி எதையும் செய்ய முடியவில்லையே' என்று கவலைப்படுவீர்கள். சேமிப்பு கரையாமல் இருக்க எந்த நேரமும் விழிப்புணர்ச்சி தேவைப்படும். எந்தவொரு காரியத்தையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசனை செய்து செய்யுங்கள். மேலும் இறைவழிபாடு உங்களை நல்ல பாதையில் வழிநடத்தும்.

### செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு

இல்லத்துப் பூஜை அறையில் சனிக்கிழமை தோறும் அனுமன் கவசம்பாடி வழிபடுவது நல்லது. மேலும் வியாழக்கிழமைதோறும் விரதமிருந்து குரு பகவானை வழிபட்டால் துன்பங்கள் அகலும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். குலதெய்வ வழிபாடும், இஷ்ட தெய்வ வழிபாடும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.

### பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

மகர இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி விரயங்களை அதிகரிக்கச் செய்யும். வீடு மாற்றங்களாலும், உத்தியோக மாற்றங்களாலும் மன அமைதி குறையும். கணவன்-மனைவிக்குள் விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலமே அமைதி காண இயலும். உடன்பிறப்புகளுக்கு கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும்.

வெளியூரில் இருந்து படிக்கும் பிள்ளைகளாகவோ அல்லது வேலை பார்க்கும் பிள்ளை களாகவோ இருந்தால், அடிக்கடி தொலை பேசி மூலம் தொடர்புகொண்டு அவர்கள் நிலைமையை அறிந்துகொள்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு வேலைப் பளு கூடும். திடீர் மாற்றங்கள் வந்து சேரும்.

(தொடரும்)

# மேல் மாகாணத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் குறைவடையும் தொற்றாளர்கள்

## தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு தகவல்

(கொழும்பு)

மேல் மாகாணத்தை தவிர ஏனைய மாவட்டங்களில் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் அளவு குறைவடைந்துள்ளதாக தொற்றுநோய் விஞ்ஞான பிரிவின் விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் சில பிரதேசங்களில் தொடர்ந்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும்.

அத்துடன் மேல் மாகாணத்தில்மேற்கொள்ளப்படும்பி.சி.ஆர். பரிசோதனைகள் காரணமாக



அந்த பிரதேசங்களில் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் என எதிர்பார்ப்பதாக வைத்தியர் தெரிவித்துள்ளார்.

குறிப்பிடத்தக்க அளவு கொரோனாத் தொற்றாளர்கள் மேல் மாகாணத்தில்விசேடமாக கொழும்பு நகர பிரதேசங்களிலேயே அடையாளம் காணப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# சிறையில் தொற்றாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கண்டி பழைய போகம்பறை சிறைச்சாலையில் மேலும் 80 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், குருவிட்ட சிறைச்சாலையில் 14 பெண் கைதிகளுக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான கைதிகளின் மொத்த எண்ணிக்கை 285 ஆக உயர்வடைந்துள்ளது.

வெலிக்கடை மற்றும் பூசா ஆகிய சிறைச்சாலைகளிலும்கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மேல் மாகாண பயணக்கட்டுப்பாடுகள் இறுதி முடிவு அடுத்த வாரம்

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் பகுதிகள் மற்றும் மேல் மாகாண பயணக் கட்டுப்பாடுகள் குறித்த இறுதி முடிவு அடுத்த வாரம் வெளியிடப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றின் தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை முடிவு எடுக்கப்படும் என சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் கலந்துரையாடல் இடம்



பெறும் என்றும் அதனை அடுத்து முடிவு அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் அறிவுறுத்தப்பட்டபடி சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொதுமக்களை அவர் கேட்டுக்கொண்டார். (நி-4)

# சிரேஷ்ட ஊடகவியலாளர் காலமானார்



(கொழும்பு)

சிரேஷ்ட ஊடகவியலாளரும் கலைஞருமான சிட்னி சந்திரசேகர காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரும் சிங்கள சினிமாத் துறையின் சிரேஷ்ட பாடலாசிரியரும், கலைஞருமான சிட்னி சந்திரசேகர தனது 61 ஆவது வயதில் காலமானார்.

வைத்தியசாலையொன்றில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் நேற்று உயிரிழந்துள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (ஜ-4)

# பொய்ப்பிரசாரம் ஒருவர் கைது

(கொழும்பு)

வீதிகளில் கிடக்கும் சடலங்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் என சமூக ஊடகங்களில் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்த ஒருவர் கைது செய்யப்பட்டார். நேற்று சனிக்கிழமை குறித்த சம்பவம் தொடர்பாக கடுகண்ணாவ பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவர் சி.ஐ.டி.யினரால் கைது செய்யப்பட்டார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவங்கள் தொடர்பாக குற்றவியல் விசாரணை திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித்ரோஹண நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்என்பதுகுறிப்பிடத்தக்கது.(ஜ-4)

# பெருந்தோட்டங்களில் கொத்தணி தொற்றுகள் ஏற்பட வாய்ப்பு அதிகம்

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா போன்று தோட்ட பகுதிகளிலும் கொரோனாத் தொற்று பரவும் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. அதனால் மக்களை பாதுகாக்க தேவையான சுகாதார ஏற்பாடுகளை இந்த பகுதிகளில் அரசாங்கம் விரைவாக மேற்கொள்ள வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ப.திகாம்பரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நாட்டின் நிகழ்கால நிலைமை தொடர்பில் எதிர்க் கட்சியினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றின் அச்சுறுத்தல் தொடர்பில் எதிர்க்



கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ முன் னெச்சரிக்கை விடுத்தபோதும் அரசாங்கம் சிறிதளவும் இதனைக் கண்டுகொள்ளவில்லை.

இதன் விளைவையே நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ளது. நாம் முன்னெச்சரிக்கை செய்தபோதே விமான நிலையத்தை மூடியிருந்தால் பரவலைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும்.

எனினும் அரசாங்கம் தான்தோன்றித் தனமாகச் செயற்பட்டதாலும் அசமந்தப் போக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தமையாலும் தற்பொழுது 25 மாவட்டங்களிலும் வைரஸ் பரவியுள்ளது.

கொழும்பு, கம்பஹா போன்று கொரோனா வேகமாகப் பரவும் அச்சுறுத்தல் காணப்படும் பகுதியாக பெருந்தோட்டப் பகுதிகள் காணப்படுகின்றன. இங்குள்ள மக்கள் லயன்களில் நெருக்கமாக வாழ்கின்றனர். இங்கு கொத்தணியாக தொற்றுக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

இதிலிருந்து அம்மக்களைப் பாதுகாக்க பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மக்களை தனிமைப்படுத்தி வைப்பதற்கான மையங்களை அமைப்பதற்கும் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய வசதிகளுடன் வைத்தியசாலைகளைத் தயார்ப்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் மீண்டும் சூடு பிடிக்கிறது

## மனோ சாடல்

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விவகாரம் மீண்டும் சூடு பிடிப்பதாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் சுட்டிக்காட்டினார். தனது அதிகாரபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

மறக்கப்பட்ட தமிழ் கைதிகளை விடுதலை செய்யும் விவகாரம் தொடர்பில் அமைச்சர்களான நாமல் ராஜபக்ஷவிடம் யாழ்ப்பாணத்திலும், டக்ளஸ் தேவானந்தாவிடம் மட்டக்களப்பிலும் ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ளதாகத் சுட்டிக்காட்டிய அவர், பாராளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் நீதி அமைச்சர் அலி சப்ரிக்கு கடிதம் எழுதியுள்ளதன் மூலமாகவும் தற்பொழுது அரசியல் கைதிகளை விடுதலை செய்வது சூடு பிடிக்கிறது என்றும் சுட்டிக்காட்டினார். (ஜ-4)


கண்ணீர் அஞ்சலி

அமரர்.சுவாம்பிள்ளை எட்வேட் கிறிஸ்ரி

எமது பாடசாலை ஆசிரியர் திருமதி
C.J.R.றெறின் டெஸ்மன்
அவர்களின் அன்பு மாமனார்
சுவாம்பிள்ளை எட்வேட்
கிறிஸ்ரி அவர்கள் காலமான
செய்தி கேட்டு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



(4645)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.

## கொரோனா விழிப்புணர்வு வீதி நாடகம்



(மன்னார்)

நாடளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்றானது அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து நிலையம் மற்றும் வைத்திய சாலை ஆகிய பொது இடங்களில் கொரோனா விழிப்புணர்வு குறியீட்டு நாடகம் நடைபெற்றது.

குறித்த குறியீட்டு நாடகத்தின் போது பார்வையாளர்களுக்கு முகக்கவசங்கள், கொவிட் -19 தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் என்பன வழங்கப்பட்டதுடன் பேருந்துகள் மற்றும் கடைகள் பொது இடங்களில் கொவிட் - 19 தொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன.

இந்நிகழ்வில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பொலிஸ் உத்தியோகத்தர், ஊடகவியலாளர்கள் மற்றும் மன்னார் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தில் பணியாற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4-285)

## உடல் ரீதியான அழுத்தங்களால் பாதிக்கப்பட்டோர் மன ரீதியான அழுத்தங்களில் இருந்து வெளிவரவேண்டும்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் **A-9** வீதி மாங்குளத்தில் இயங்கி வருகின்ற உயிரிழை முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோர் அமைப்பினுடைய ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது

இதன்போது உயிரிழை அமைப்பின் தலைவர் லோ.சிறீகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

மாங்குளத்தினை தளமாக கொண்ட முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட உயிரிழை அமைப்பின் கீழ் 210 பேர் அங்கம் வகிக்கின்றார்கள். இதில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களையும் பராமரித்து வருகின்றோம்

கடந்த போருக்கு பின்னர் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட பலபேர் சரியான பராமரிப்பு வசதிகள், மருத்துவ வசதிகள் இன்றி இறந்த நிலை காணப்பட்ட போதுதான் உயிரிழை அமைப்பு தொடங்கப்பட்டது.

வடக்கு-கிழக்கினை சேர்ந்த அனைத்து முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டவர்களையும் இணைந்து அவர்களுக்கான மருத்துவ வசதிகள், மாதாந்த உதவிகள், வாழ்வாதாரம் போன்றனவற்றை முடிந்த வரையில் பாராபட்சம் இன்றி மேற்கொண்டு வருகின்றோம்.

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நபர் பாதிக்கப்பட்ட காலத்தில் இருந்து மனரீதியான தாக்கத்தினை அடைகின்றார்கள் இதில் இருந்து மீட்பது கடினமான செயல்.

ஒதுங்கி வாழும் தன்மையினை அவர்களுக்குள் வளர்த்துக்கொள்கின்றார்கள் இதில் இருந்து அவர்களை மீடக வேண்டும்.

விளையாட்டுப்போட்டிகள் உடல் ரீதியான உற்சாகத்தினையும் மனரீதியான தன்னம்பிக்கையினையும் ஏற்படுத்தும் மாற்றுத்திறனாளிகள் பலர் விளையாட்டு ஊடாகவே வெளியுலகத்தினை தொட்டு நிற்கின்றார்கள். எங்கள் தேசத்திலும் திறமையுடையவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்களுக்கான அடித்தளம், பயிற்சிகள், ஊக்குவிக்கும் செயற்பாடுகள் எங்கள் இடத்தில் இன்னும் இல்லை. இந்த நிலையினை மாற்றி எதிர்காலத்தில் சர்வதேச விளையாட்டுக்களிலும் எங்கள் வீரர்களும் கலந்து கொள்ளவைக்கவேண்டும்.

இந்த சமூகத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் விடயங்கள் நிறைய இருக்கின்றன.

அவர்களின் தேவைகளும் தடைகளும் பாரதூரமானதாகக் காணப்படுகின்றது. அதனை நீக்க அனைவரும் ஒன்றிணைவோம் என அவர் தெரிவித்தார். (நி-4-281)

## தீபாவளி விசேட வழிபாடுகள்



(நெளுக்குளம்)

வவுனியாவில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி நேற்று தீபாவளி வழிபாடுகள் ஆலயங்களில் இடம்பெற்றன.

சுகாதார திணைக்களத்தின் பணிப்பின் பெயரில் குறிப்பிடத்தக்க அளவான பக்தர்கள் மாத்திரமே ஆலயத்தில் அனுமதிக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்றன. வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்திலும் பிரதம குரு க.கணேஸ் குருக்கள் தலைமையில் விசேட வழிபாடுகள் இடம்பெற்றதுடன் கௌரி விரத பூஜைகளும் இடம்பெற்றன. (ஜ-4-299)

## கூட்டம் அதிகமானதால் விரைந்த பொலிஸார்



(தருமபுரம்)

வடமாகாணத்தில் பல இடங்களில் கௌரி அம்மாளினது காப்புகட்டும் வைபவம் சுகாதார முறைப்படி சில ஆலயங்களில் நடைபெற்றதும் சில ஆலயங்களில் அனுமதிக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கையை விட அதிகமாக சில ஆலயங்களில் மக்கள் திரண்டது அதிர்ச்சியை எற்படுத்தியது.

இதனால் பொலிஸார் அங்கு விரைந்தனர். (ஜ-316)

## மூன்று வருடங்களாக புனரமைக்கப்படாத பாலம்



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கோயில்குடியிருப்பு ஏ-35 பிரதான வீதி பாலம் முழுமையாக திருத்தப்படாமையால் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

முல்லைத்தீவு - கோயில் குடியிருப்பு ஏ-35 பிரதான வீதியில் காணப்படும் பாலம் மிகவும் சேதமடைந்திருந்த நிலையில் கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வீதி திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிலையில், மூன்று வருடங்களை கடந்த நிலையிலும் இன்னும் அவ்வீதி புனரமைக்கப்படவில்லை.

இதனால் மழைக்காலங்களில் அவ்வீதியால் பயணிப்போர்ப் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

எனினும் பாலத்தை புனரமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மூன்று வருடங்களை கடந்தும் மீள் புனரமைப்பு வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என அப் பகுதி மக்கள் கவலை வெளியிட்டிருப்பதுடன் குறித்த பாலத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து சீரான போக்குவரத்திற்கு வழியேற்படுத்தி தருமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-4-299)



**மன்னார் கட்டுக்கரை குளத்தின் கீழ் 2020, 2021 ஆம் ஆண்டுக்கான கால போக விவசாய நெற் செய்கைக்கான நீர் திறந்து விடும் நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 9.45 மணியளவில் இடம் பெற்றது.**

**குறித்த நிகழ்வானது சர்வமத தலைவர்களின் ஆசியோடு, மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம் பெற்றது. குறித்த நிகழ்வில் விவசாயிகள், கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர், நானாட்டான பிரதேச சபையின் உப தவிசாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.**

வாழ்க்கை ஒரு போர்க்களம். நம்பிக்கைதான் ஆயுதம். அறிவே கேடயம்.

– மகாவீரர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பின்தங்கிய கிராமங்களை இலக்கு வைத்து முன்னேற்றுங்கள்

அரச சேவையில் தண்டனைக் கோவை என்ற பகுதியை எவரும் சிரத்தை எடுப்பதில்லை.

அதனால் அரச சேவை என்பது பிறழ்வுபட்டுப் போகிறது என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதில் அரச பணி புரிகின்ற ஒருவர் குற்றம் இழைத்தால் அவருக்குத் தண்டனை வழங்குவதற்காக பின்தங்கிய – தூர இடங்களுக்கு இடமாற்றம் வழங்குகின்ற நடைமுறையொன்று உள்ளது.

இதனை தண்ணீர் இல்லாத காட்டுக்கு அனுப்புதல் என்று கூறிக் கொள்வர்.

இங்கு குற்றம் இழைத்த அரச சேவையாளரை பின்தங்கிய – தூர தேசத்துக்கு அனுப்புவது அவர் இழைத்த குற்றத்துக்கான தண்டனை என்று கருதப்படுகின்றதே தவிர,

குறித்த அரச சேவையாளர் பின்தங்கிய இடத்துக்குச் செல்வதால் அங்குள்ள மக்கள் அல்லது அந்த இடத்தைச் சேர்ந்த மாணவர்கள் பாதிக்கப்படுவர் என்ற நினைப்பு அறவே இல்லை.

இங்குதான் அரச நிர்வாகத்தில் இருக்கக் கூடிய சமத்துவமின்மை என்ற விடயம் முன்னெழுகிறது.

உண்மையில் குற்றம் இழைத்த அரச சேவையாளரைத் தண்டிப்பதாக இருந்தால் அவருக்கு சேவை நிலையம் வழங்காமல், மீள் பயிற்சி வழங்குவதே பொருத்துடையது.

என்ன செய்வது கஷ்ரப் பிரதேசங்களில் இருக்கக்கூடிய மக்களை மக்களாகப் பார்க்கின்ற பண்புடைமை இல்லாத நிலையில் மேற்போந்த தண்டனை வழங்குதல் நடந்தாகிறது.

இது ஒருபுறமிருக்க பின்தங்கிய இடங்களை, கஷ்டப் பிரதேசங்களை, அடிப்படை வசதிகளற்ற ஊர்களைக் கவனிக்காமல் விடுகின்ற ஒரு நடைமுறையும் அரச நிர்வாகத்தில் இருப்பதுதான் வேதனையிலும் வேதனை.

அதாவது வளமான இடங்களுக்கே வள ஒதுக்கீடு என்ற மிகமோசமான செயற்பாடு நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அமுலாகி வருகிறது.

உண்மையில் அடிப்படை வசதிகளற்ற கிராமங்களிலேயே வீதி அமைத்தலும் குடிநீர் மற்றும் மின்சார வசதிகளை வழங்குவதும் வீடற்றவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுமான பணிகள் இடம்பெற வேண்டும்.

ஆனால், அவ்வாறான நடைமுறைகள் இல்லாமல் வசதியான இடங்களுக்கே திரும்பத் திரும்ப உட்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

இதன் காரணமாக அடிப்படை வசதிகளற்ற சில ஊர்கள் மிகமோசமான நிலைக்கு ஆளாகி அந்த மக்களின் வாழ்வியல் என்பது படுபாதாளத்துக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வருமானமின்மை, ஏழ்மை, பிள்ளைகள் படிக்க முடியாத குடும்ப சூழ்நிலை, மதுப்பாவனை, சண்டை சச்சரவு, கொலை என ஏகப்பட்ட அக்கிரமங்கள் பின்தங்கிய இடங்களில் நடந்தாவதை அவதானிக்க முடியும்.

இவ்வாறான இடங்களை இங்கு பட்டியல்படுத்த முடியமாயினும் நயத்தக்க நாகரிகம் கருதி அவை தவிர்க்கப்படுகின்றன.

எதுவாயினும் பின்தங்கிய கிராமங்களை இலக்கு வைத்து அவற்றை முன்னேற்றுகின்ற விசேடதிட்டங்களை அரச அதிகாரிகளும் நம் அரசியல்வாதிகளும் பொது அமைப்புகளும் இணைந்து முன்னெடுக்க வேண்டும்.

இல்லையேல் வெட்டும் கொத்தும் கொலையும் சர்வசாதாரணமாய் நடந்தாகும்.

இவை கோரத்தாண்டவம் ஆடத் தலைப்பட்டால் வளத்தால் முன்னேற்றம் அடைந்தவர்களும் வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதைவிட வேறுவழியில்லை.

ஆகையால் இவை பற்றி ஆழ்ந்து சிந்திப்பது காலத்தின் கட்டாய தேவை.

# தமிழர்களின் பிரச்சினையை தீர்க்க உதயமாகிறது தமிழர் தேசிய சபை

## தமிழரசின் தலைவர் மாவை தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் ஒன்றுபட்டு உழைப்பதற்காகவும், துறைசார் ஆலோசனைகள், நிபுணத்துவ உதவிகளை வினைத்திறன் மிக்கதாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் தேசிய சபை ஒன்றை அமைக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

"தமிழ் மக்களின் அரசியல் தீர்வு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் ஒன்றுபட்டு செயற்படுவதற்காக இப்போது தமிழ்த் தேசியம் சார்ந்து செயற்படும் கட்சிகளை ஒன்றிணைத்துப் பயணிக்க ஆரம்பித்துள்ளோம்.

இது தொடர்பில் நான் விடுத்த கோரிக்கைக்கு அனைத்து தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சித் தலைவர்களும் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கியிருக்கின்றார்கள். காலத்தின் தேவை அறிந்து ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த கூட்டு முயற்சி எதிர்காலத்தில் மேலும் பலப்படுத்தப்படவுள்ளது.

அதாவது எதிர்காலத்தில் தமிழர் தீர்வு விடயத்திலும் ஏனைய விடயங்களிலும் ஒன்றாக சேர்ந்து செயற்படுவதற்காக தேசிய சபை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கின்றோம்.

இந்தத் தேசிய சபையில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள், துறைசார் நிபுணர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், புலம்பெயர் பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள், அறிஞர்கள், பொருளாதார வல்லுநர்கள் மற்றும் ஜஸ்மின் சூகா, நவநீதம்பிள்ளை போன்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்குவதற்குத் தீர்மானித்திருக்கின்றோம்.

இதற்கான ஆரம்பகட்ட முயற்சிகள் இப்போது தொடங்கியிருக்கின்றன. விரைவில் தேசிய சபை ஒன்று உருவாக்கப்படும். இந்த முயற்சி மாவை சேனாதிராஜாவினால் முன்னெடுக்கப்படும் தேர்தலை ' இலக்காகக் கொண்ட நட்வடிக்கை அல்ல. இது இன்றைய காலத்தின் கட்டாய தேவை" என்றார். (ம-3)

# அரிசோனா- ஜோர்ஜியா மாநிலங்கள் ஜோ பிடன் வசம்

## வாக்கு எண்ணிக்கை 306 ஆக உயர்வு

(வோஷிங்டன்)

**அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பிடன், அரிசோனா மற்றும் ஜோர்ஜியா மாநிலங்களை வென்று தன்வசப்படுத்தியுள்ளார்.**

இது அமெரிக்கத் தேர்தலின் இறுதி தேர்தல் எண்ணிக்கையை பொறுத்தவரை ஜனநாயகக் கட்சியினருக்கு வாக்கு எண்ணிக்கை 306 ஆகவும், வட கரோலினாவைவென்ற குடியரசுக் கட்சி டொனால்ட் ட்ரம்பிற்கு 232 வாக்கு எண்ணிக்கையாகவும் உயர்ந்துள்ளது.

இரண்டு இறுதி மாநிலங்களும் தேர்தல் தினத்திற்கு ஒன்றரை வாரங்களுக்குப் பிறகு தேர்தல் முடிவுகளை வெளியிட்டுள்ளன. இந்த முடிவுகளை அமெரிக்காவின் முன்னணி ஊடகங்கள் அறிவித்துள்ளன.

ஜோர்ஜியாவில் பிடனின் வெற்றி அவரது வாக்கு எண்ணிக்கையில் 16ஐக் கூடுதலாக சேர்த்தது. 2016 தேர்தல்களில் டொனால்ட் ட்ரம்ப் 306 தேர்தல் வாக்குகளைப் பெற்றபோது, அப்போதைய ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன் 232 வென்றிருந்தார். 2016இல் ட்ரம்ப் வென்ற ஜோர்ஜியா, அரிசோனா, மிச்சிகன், பென்சில்வேனியா மற்றும் விஸ்கான்சின் ஆகிய ஐந்து மாநிலங்கள் இந்த ஆண்டு பிடனை நோக்கி திரும்பியுள்ளன.

நீண்ட இடைவெளிக்கு பிறகு ஜோ பிடன் ஜோர்ஜியாவில் வெற்றி பெற்ற முதல் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஆவார். 1992ஆம் ஆண்டில் பில் கிளிண்டன் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

"மரம்தான் மரம்தான் எல்லாம் மரம்தான்
மறந்தான் மறந்தான் மனிதன் மறந்தான்
மனிதன் மனிதனாகவேண்டுமா மரத்திடம் வா-
ஒவ்வொருமரமும் போதிமரம்!"


-கவிஞர் வைரமுத்து

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

வவுனியா பிரதேசத்தில் புளிதறித்த புளியங்குளம், செக்கட்டிப் பிலவு, வாரிக்குட்டியூர் ஆகிய பிரதேசங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ உன் சகோதரன் உனக்கு எதிராக ஏதாவது செய்திருப்பானேயானால், நீ போய் அவன் தனித்திருக்கையில் அவனுடைய தவறைக் கண்டித் துச் சொல்.

❖ புரிந்து கொள்பவனுக்கு ஞானம் என்பது அவன் எதிரேயே இருக்கிறது. முட்டாளின் கண்களோ உலகின் கடைசிக் கோடி வரை தேடியலையும்.

❖ உன்னுடைய கண் தீமையானதாயிருந்தாலோ, உன் உடல் முழுதும் இருள் உள்ளதாயிருக்கும். ஆதலின், உன்னுள்ளே இருக்கும் ஒளியே இருளாயிருந்தால் இருட்டு எவ்வளவு பெரியதாயிருக்கும்?

❖ நிலைத்து நிற்பதாக நினைப்பவன், கீழே விழாதபடி கவனமாயிருக்கட்டும்.

❖ உடைந்த உள்ளம் உடையவர்களுக்குக் கர்த்தர் வெகு சமீபத்தில் இருக்கிறார்.

❖ கணவர்களே மனைவியைக் காதலியுங்கள். அவர்களுக்கு மாறாகக் கசப்பாயிராதீர்கள்.

# லிபியாவில் இருவேறு விபத்துக்கள்
# 94 அகதிகள் பரிதாபமாகப் பலி



(திரிபோலி)
லிபியாவின் மத்திய தரைக் கடல் பகுதியில் நேற்று ஒரே நாளில் இடம்பெற்ற இரு படகு விபத்துக்களில் 94 குடியேற்றவாசிகள் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லிபியா நாட்டின் திரிபோலியிலிருந்து 120 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஹாம்ஸ் என்ற நகரின் பகுதிக்குள் அமைந்துள்ள மத்திய தரைக் கடல் பகுதியில் சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளில் குடியேறும் நோக்கில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 120 இற்கும் மேற்பட்ட குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற படகு ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட குறித்த விபத்தில் படகு கவிழ்ந்து 74 குடியேற்றவாசிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதேபோன்று 50 இற்கும் அதிகமான குடியேற்றவாசிகளுடன் ஐரோப்பாவிற்கு பயணம் மேற்கொண்ட மற்றுமொரு படகு, தலைநகர் திரிபோலியில் இருந்து வடகிழக்கு பதியில் அமைந்துள்ள சோரமன் என்ற நகரின் கரையில் அமைந்துள்ள மத்திய தரைக் கடல் பகுதியில் நடுக் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 20 பேர் உயிரிழந்துள்ளதுடன் எஞ்சியோர் அப்பகுதி மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளனர்.

வட ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான லிபியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கடாபியின் ஆட்சி வீழ்த்தப்பட்ட பிறகு அங்கு அதிகாரப் போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. போராளிக் குழுக்கள்-அரசுப்படையினர் இடையேயான மோதலில் பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதலில் இருந்து தப்பித்து உயிரை பாதுகாத்துக் கொள்ள லிபியாவில் வாழும் மக்கள் பலர் ஜேர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் புகலிடம் தேடி சட்டவிரோதமாக கடல் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர்.

எனினும் இந்த ஆண்டு இது வரை, மத்தியதரைக் கடல் வழியாக ஐரோப்பாவுக்குச் செல்ல முயன்றனர்.800 இற்கும்மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வறுமையின் கோரப்பிடியில் மக்கள்;
# நாய்க்கு தங்கத்தில் சிலை வைத்த ஜனாதிபதி



(அஷ்கபாத்)
துர்க்மெனிஸ்தான் நாட்டு மக்கள் மிக மோசமான வறுமையில் வாடி வருகின்ற நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி செல்லப்பிராணியான நாய் ஒன்றுக்கு 19 அடி தங்க சிலையை வடிவமைத்து திறந்து வைத்துள்ளார்.

துர்க்மெனிஸ்தானின் தலைநகர் அஷ்காபாத்தில் அலபாய் நாயின் 19 அடி சிலையை குர்பங்குலிபெர்டிமுகமடோவ் அண்மையில் திறந்து வைத்துள்ளார்.

துர்க்மெனிஸ்தான் நாட்டின் பாரம்பரிய சின்னமாக விளங்கும் அலாபை எனும் இனத்தை சேர்ந்த இந்த நாய் துர்க்மெனிஸ்தான் ஜனாதிபதி குர்பங்குலிக்கு மிகவும் விருப்பமான நாய் இனமாக இருந்துள்ளது.

இது மட்டுமின்றி கடந்த ஆண்டு அந்த நாய் இனத்திற்காக ஒரு புத்தகத்தை அர்ப்பணித்துள்ளார் குர்பங்குலி.

அதேவேளை அந்நாட்டின் அரசு ஊடகம், இந்த நாய் சிலை நாட்டின் தன்னம்பிக்கையையும் பெருமையையும் வெளிப்படுத்துவதாக தெரிவித்துள்ளது.

அகல்தெக குதிரை இனத்தின்மீதும்பெரும்காதல்கொண்ட இவர் 2015 ஆம் ஆண்டு தாம் இந்த குதிரையை ஓட்டுவது போல தங்க சிலை ஒன்று திறந்து வைத்துள்ளார்.

குர்பங்குலிபெர்டிமுகமடோவ் 2017 ஆம் ஆண்டு இந்த நாயை புடினுக்கு அன்பளிப்பாக வழங்கினார். அப்போது அவர் நாயைக் கழுத்தைப் பிடித்து தூக்கிய காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகியதுடன் பலரின் விமர்சனத்துக்கு உள்ளானது குறிப்பிடத்தக்கது.

ஊடக சுதந்திரத்தில் கிட்டத்தட்ட வடகொரியாவின் நிலைமையில் மிக மோசமான நிலையில் துர்மெனிக்ஸ்தான் உள்ளது. அந்த நாட்டு ஜனாதிபதியின் உத்தரவிற்கமைய, கொரோனா வைரஸ் என்ற சொல் தேசிய சொற்களஞ்சியத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக தன்னார்வ அமைப்புகள் அறிக்கையிட்டுள்ளன.

இதேவேளை, 2018 அளவில் 58 சதவீத மக்கள் உத்தியோகபூர்வமாக குறைந்தபட்ச ஊதியத்திற்கு கீழே வருமானத்தைப் பெறுகிறார்கள் என்று உலக வங்கி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மௌனம் காத்த சீனாவும்
## பிடனுக்கு வாழ்த்து தெரிவித்தது



(பீஜிங்)
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் ஜோ பிடனுக்கு சீனா வாழ்த்துத் தெரிவிக்காத நிலையில், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற ஜோ பிடன் மற்றும் கமலா ஹரிஸிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாங்கள் அமெரிக்க மக்களின் தெரிவை மதிக்கிறோம் எனவும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் சட்டத்துக்கு உட்பட்டே உறுதி செய்யப்படும் என்று நாங்கள் புரிந்துகொள்கிறோம் என்றும் சீனா தெரிவித்துள்ளது.

2020 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு அமெரிக்க வரலாற்றில் மிகவும் பாதுகாப்பானது என அமெரிக்க கூட்டாட்சி தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், தேர்தல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், எந்தவொரு வாக்களிப்பு முறையிலும் முறைகேடுகள் இடம்பெறுவதற்கான எந்த ஆதாரமும் இல்லையென கூட்டாட்சித் தேர்தல் அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்த சூழலிலேயே சீனா தனது வாழ்த்துக்களை அமெரிக்காவின் புதிய ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளது. (நி-4)



**ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பாரிஸில் பேரக்குன மிக்க ஜிஹாதிகளால் கொல்லப்பட்ட 130 பேரின் நினைவுதினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. தாக்குதல் நடத்தப்பட்ட இடங்களில் கொல்லப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி பூங்கொத்து வைத்து உறவுகளை இழந்தவர்கள் அஞ்சலி செலுத்தினர். அத்துடன் பிரான்ஸின் அடையாளம் என வர்ணிக்கப்படும் ஈபிள் கோபுரம் தனது விளக்குகளை அணைத்து இருளில் மூழ்கி அஞ்சலி செலுத்தியது.**

# ஈரானிடம் அதிக யுரேனியம்

(டெஹ்ரான்)
ஈரான் குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை அணுசக்தி ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்டதைப் போல் 12 மடங்கு கையிருப்பு வைத்துள்ளதாக ஐ.நாவின் சர்வதேச அணுசக்தி கண்காணிப்பு அமைப்பு (IV,V) தெரிவித்துள்ளது.




அணுசக்தி ஒப்பந்தத்தின் கீழ், குறைந்த அளவில் செறிவூட்டப்பட்ட 202.8 கிலோ யுரேனியத்தை மட்டுமே ஈரான் கையிருப்பு வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அத்தகைய யுரேனியக் கையிருப்பை ஈரான் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த 2 ஆம் திகதி நிலவரப்படி ஈரானிடம் 2,442.9 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பு உள்ளது. இது கடந்த ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி இருந்ததைவிட அதிகமாகும். அப்போது ஈரானிடம் 2,105.4 கிலோ செறிவூட்டப்பட்ட யுரேனியம் கையிருப்பு இருந்தது.

இதுமட்டுமில்லாமல், அணுசக்தி ஒப்பந்தத்தில் அனுமதிக்கப்பட்ட வீதத்தைவிட அதிகமாக ஈரான் யுரேனியத்தை செறிவூட்டி வருகிறது.

அந்த ஒப்பந்தத்தில் யுரேனியத்தை 3.67 சதவீதத்துக்கு மேல் ஈரான் செறிவூட்டக்கூடாது என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த நாடு 4.5 சதவீதம் வரை யுரேனியத்தை செறிவூட்டி வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

### கிணற்றில் தவறி...

தில் புளியங்கூடலைச் சேர்ந்த நவரத்தினம் ஜெயசீலன் (வயது-54) என்பவரே உயிரிழந்துள்ளார்.

காணியில் மாடு பார்ப்பதற்காகச் சென்ற அவர் நீண்ட நேரமாகியும் திரும்பி வராத நிலையில் தேடிச் சென்றபோதே கிணற்றில் படுகாயம் அடைந்த நிலையில் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட அவர் ஊர்காவற்றுறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

நீா வற்றியிருந்த கிணற்றில் விழுந்தே, அவரின் தலை கல்லுடன் மோதுண்டு படுகாயம் அடைந்திருந்தார் என்று அவரை மீட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

மாற்று வலுவுள்ளவரான அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவருடைய துணைவியாரும் மாற்றுவலுவுள்ளவர் என்றும் தெரிய வந்துள்ளது. (ம-3)

### கல்வியங்காட்டில்...

பட்ட கல்வியங்காடு பகுதியில் 25 வயதுடைய ஆண் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

பேலியகொட மீன் சந்தைக்கு கூலர் வாகனம் கொண்டு சென்ற நிலையில் சந்தை மூடப்பட்டதால் அவரை மட்டக்களப்பு தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டிருந்தார்.

அங்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவரது மாதிரி பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. அவருக்கு தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த முதலாம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வீடு திரும்பிய அவர் நல்லூர் மருத்துவ சுகாதார அதிகாரியின் அறிவுறுத்தலில் தொடர்ந்து சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

அவரிடம் பெறப்பட்ட மாதிரியின் அடிப்படையில் நேற்று முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறிப்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாதங்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்ட அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மேலும் இருவருக்கு இன்று பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படவுள்ளது. மினுவாங்கொட பகுதியில் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி கொரோனா வைரஸ் தொற்று கொத்தணி கண்டறியப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அடையாளம் காணப்படும் 11ஆவது நபர் இவராவார். (ம-3,18)

### குருநகரில்...

பாண்டியன்தாழ்வு சுண்டிகுளி பகுதியை சேர்ந்த 12 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் கனடாவில் இருந்து வருகைதந்த இந்த நபர் பாண்டியன்தாழ்வு பகுதியில் தங்கி இருந்துள்ளார்.

இவர் கடந்த மாதம் கொழும்பு சென்றிருந்த நிலையில் நேற்று கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, அப்பகுதியை சேர்ந்த 12 குடும்பங்கள் உட்பட கொரோனாத் தொற்றுக்குள்ளான இந்த நபரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (ம-3,101)

### சுழிபுரம்...

மற்றையவரான இராசன் தேவராசா (வயது-31) சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

### வடக்கின்...

ஸார் தெரிவித்தனர்.

**அரியாலை**

யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் குடும்பத் தகராறு காரணமாக வயோதிபர் மீது கத்திக்குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது. கத்தியால் குத்தியவரை யாழ்ப்பாணம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று மாலை இரு குடும்பங்களுக்கு இடையே இடம்பெற்ற தகராறு காரணமாக இந்த கத்திக்குத்து இடம்பெற்றுள்ளது

கத்திக்குத்துக்கு இலக்கான நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**துன்னாலை, அல்வாய்**

துன்னாலை தக்குசம்பாதி பகுதியில் நேற்று இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாயம் அடைந்த நிலையிலும், அல்வாய் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இது தவிர துன்னாலை தக்குசம்பாதிப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்த இருவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**விசுவமடு**

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் தேநீர் கடை ஒன்றில் உணவருந்திக் கொண்டிருந்த இளைஞன் மீது இனந்தெரியாத நபர் ஒருவர் வாள்வெட்டு தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தத் தாக்குதலில் பலத்த காயங்களுக்கு உள்ளான இளைஞன் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மயில்வாகனபுரம் பிரமந்தனாறு பகுதியைச் சேர்ந்த சிவகுமார் சுலக்சன் (வயது-20) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார்.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,60,101,316)

### வீடுகளில்...

கொரோனா வைரஸ் தொற்று அதிக ஆபத்து உள்ள மற்றும் ஆபத்து இல்லாத பகுதிகளிலும் இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் அசெல குணவர்தன தெரிவித்தார்.

### வன்னி பாராளு...

தானித்த பாராளு மன்ற உறுப்பின ரின் பிரத்தியேக பாதுகாப்பு உத்தி யோகத்தர் மேல் நோக்கி துப்பாக்கி சூடு நடத்தியமையினையடுத்து அவ் இளைஞர்கள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று இரவு 7.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பூவரசங்குளம் பொலிஸார் சம்பவம் இடம்பெற்ற இடத்தின் சிசிரிவி காணொளி உதவியுடன் சந்தேகத்தின் பேரில் இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர். (ம-3,250)

### அல்வா...

சம்பவத்தில் படுகாயங்களுக்கு உள்ளான பத்துக்கும் அதிகமானோர் நேற்றிரவு 10.00 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

தீபாவளி தினமான நேற்று சனிக்கிழமை இரவு அப்பகுதியில் உள்ள விளையாட்டுக் கழகத்தினருக்கு இடையில் ஏற்பட்ட தகராறு அடிதடியில் முடிந்ததாக கூறப்படுகிறது.

இதில் படுகாயமடைந்த பத்திற்கும் அதிகமானோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் (ம-3,60)

### புங்குடுதீவில்...

பற்றைக்காட்டுக்குள் வெடிபொருட்கள் காணப்படுவதாக இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அவை நேற்று நண்பகல் அளவில் மீட்கப்பட்டுள்ளதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட பொதியில் நான்கு டைனமற் வெடித்தொகுதி கல்லுடன் இணைத்து கட்டப்பட்டு காணப்பட்டதுடன் ரிக்னேட்டர் இரண்டும் இருந்துள்ளதாக இராணுவத் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

### +389...

துள்ளார்.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 583ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

### சுகாதார அமைச்..

ருவான் பண்டார உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக கொரோனா தொடர்பில் வெளியிட்ட கருத்தால் தேசிய மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, சுகாதார அமைச்சின் பேச்சாளராக நியமிக்கப்பட்டு இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 14-11-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1072
S 8 4 2 7 2 1
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 14/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0673
E 09 37 56 65 66

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 14-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2601
X 03 33 58 64
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 14/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 4306
J 8 3 2 4 0 2
தேசிய லொத்தர் சபை

சம்வர்தன வாசனாவ — அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 384 திகதி 14.11.2020 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து L வெற்றி இலக்கங்கள் 02 10 43 விதி எண் 5
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 10,726,880
Web: www.dlb.lk

அத கோடிபதி — ADA KOTIPATHI
சனிக்கிழமை சீட்டிழுப்பு இல: 1102 வர்ணம் : மஞ்சள் சீட்டிழுப்பு திகதி 2020.11.14
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 83,905,075/-
வெற்றி இலக்கங்கள் 02 45 55 74 Y
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
சனிக்கிழமை சீட்டிழுப்பு திகதி: 2020.11.14 சீட்டிழுப்பு இல.: 3432 வர்ணம் : பச்சை
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 32,113,998.30
வெற்றி இலக்கங்கள் 38 44 45 72 F
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4354
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் 20,00,000/=
திகதி : 14.11.2020 வெற்றி வாரம் : 2983 வர்ணம் : இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 02 24 51 61 தனுசு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,017,340

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1276 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 14.11.2020 தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் N 09 55 68 75
SUPER 500 8 8 5 6
அபிவிருத்தி லொத்தர் சபை

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 26 சீட்டிழுப்பு திகதி 14/11/2020 சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 26 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,604,220/=
அபிவிருத்தி லொத்தர் சபை

## ஆச்சிரமம் தனிமைப்படுத்தப்பட்டமையால்
# பாதிக்கப்பட்ட அடியவர்களுக்கு மூன்று வேளை உணவளிக்க ஏற்பாடு

(குப்பிழான்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக மேற்படி ஆச்சிரமத்தை உணவுக்காக நம்பியிருந்த அடியவர்கள் பெரும் அவலநிலையை எதிர்நோக்கியுள்ளனர்.

குறித்த அவலநிலையைக் கருத்திற் கொண்டு லண்டன் மற்றும் கிளிநொச்சி கந்தன் குளம் செல்வாநகர் ஓம்சக்தி வேலன் ஆலயங்களின் பிரதம சிவாச்சாரியார் ஓம்சக்தி வேலன் ஐயா வேண்டிக் கொண்டதற்கிணங்க அவரது நிதிப் பங்களிப்பில் 14 நாட்களும் உணவுப் பொதிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில் சந்நிதியான் ஆச்சிரமம் முன்பாகவும், ஆலயச் சூழலிலும் தங்கியிருந்த 70 வரையான அடியவர்களுக்கு நேற்றுச் சனிக்கிழமை மதிய, இரவு வேளைகளுக்கான சமைத்த உணவுப் பொதிகளை ஓம் சக்திவேலன் தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கி உதவியுள்ளனர்.

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படும் வரை காலை, மாலை, இரவு ஆகிய மூன்று வேளைகளுக்கும் மேற்படி அடியவர்களுக்கான சமைத்த உணவுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03.18)

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து டயானா எம். பி. உடன் நீக்கம்
## எதிர்க்கட்சி தலைவர் சஜித் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேயை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அந்த கட்சியில் இருந்து நீக்குவது என அதன் தலைவர் சஜித் பிரேமதாச தீர்மானித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட 20ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு கடந்த வியாழக்கிழமை கூடிய போது இந்த தீர்மானத்தை எடுக்கும் அதிகாரத்தை கட்சியினர், கட்சியின் தலைவரான சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து டயானா கமகேயை கட்சியில் இருந்து நீக்க அவர் தீர்மானித்துள்ளார். அத்துடன் 20ஆவது திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த ஏனைய 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம், அவர்கள் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக எடுக்கும் இறுதி முடிவு குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழுவிற்கு அறிவிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டயானா கமகே பிரித்தானிய குடியுரிமை பெற்றவர் எனவும் அவர் வேறு ஒரு பெயரில் பிரித்தானிய கடவுச்சீட்டை கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது (ம-03)

## நாளை அதிகாலை 5 மணி முதல்
# கொழும்பில் மேலும் 5 பகுதிகளை தனிமைப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கொழும்பில் மேலும் 5 பகுதிகள் திங்கட்கிழமை அதிகாலை 5 மணி முதல் தனிமைப்படுத்தப்படும் என்று இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மருதானை, கோட்டை, புறக்கோட்டை, கொம்பனித் தெரு, டாம் வீதி பகுதிகள் திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணி முதல் தனிமைப்படுத்தப்படும்.

தற்போது கொழும்பு மாவட்டத்தில் 17 தனிமைப்படுத்தப்பட்ட பொலிஸ் பகுதிகள் உள்ளன.

மற்ற அனைத்து தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளின் நிலை மேலும் அறிவிக்கப்படும் வரை தொடரும், என்றார்.

மேலும், கம்பஹா மாவட்டத்தில் களனி, ஜா-எல, நீர்கொழும்பு, ராகம, வத்தளை, பேலியகொட, கடவத்த பொலிஸ் பகுதிகளின் தனிமைப்படுத்தல் மறு அறிவித்தல் வரை தொடர்கிறது.

கம்பஹா மாவட்டத்தில் மீதமுள்ள தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள் இன்று அதிகாலை 5.00 மணி முதல் விடுவிக்கப்படும் என்று இராணுவ தளபதி மேலும் தெரிவித்தார். (ம-03)

## துறைமுக நடவடிக்கையை மேற்கொள்ள
# கடமைக்கு சமுகமளிக்குமாறு ஊழியர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஊழியர்கள் சிலர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள நிலையில், துறைமுகத்தின் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்காக கடமைக்கு சமுகமளிக்குமாறு துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வுபெற்ற ஜெனரல் தயா ரத்னாயக்க, துறைமுக ஊழியர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு துறைமுகத்தில் சுமார் 40 ஆயிரம் கொள்கலன்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

துறைமுக வளாகத்தினுள் 61 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதுடன், நாளாந்தம் 2 ஆயிரத்து 500 முதல் 3 ஆயிரம் பேர் வரையில் கடமைக்கு சமுகமளிக்கின்றனர்.

இதனால் நாளாந்த நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு ஓய்வுபெற்ற ஊழியர்கள் 60 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜய கொள்கலன் முனையத்தின் 30 வீதமான ஊழியர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக துறைமுக அதிகார சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், கொழும்பு துறைமுகத்தில் பொருட்களுடன் உள்ள கொள்கலன்களை விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இதனால், துறைமுக ஊழியர்கள், சுங்க ஊழியர்கள் மற்றும் ஏனைய ஒருங்கிணைந்த ஊழியர்கள் அனைவரையும் தமது கடமைகளை நிறைவேற்ற சேவைக்கு சமுகமளிக்குமாறு வேண்டுகோள் விடுப்பதாக தயா ரத்னாயக்க குறிப்பிட்டார்.

அவர்களின் கடமையிலேயே முழு நாட்டின்தும் வளர்ச்சி தங்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ம-03)


**மாபிள் வேலை**

உங்கள் வீட்டிற்கு தரமான முறையில் மாபிள் பதித்துத் தரப்படும். ஒரு சதுரடி 45 /=.

தொடர்பு : 077 334 1281 (C-691)

**காணிகள் தேவை**

யாழ்ப்பாண மாநகர சபைக்கு உட்பட்டது,
கோப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது;
மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்டது,
பத்து பரப்புக்கு மேலே உள்ள காணிகள் தேவை.
( தரகர் தேவையில்லை )

076 221 2037 (4649)

**பணிப்பெண் தேவை**

யாழ். நல்லூரில் வீட்டில் தங்கிநின்று பணி புரிவதற்கு 40 வயதிற்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.

சம்பளம் - 25,000/= - 35,000/=

தொடர்பு : 077 355 4648 (4622)

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் >> 1150/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-655)
லண்டன் » 1050/= இத்தாலி » 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | மலையாளபுரம் மல்லாவி துணுக்காய்

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம்
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
(C-505)

**குங்குமம் திருமாங்கல்ய சேவை**

எங்கள் குங்குமம் திருமாங்கல்ய சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

077 572 9724, 076 788 9697 (C-689)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், ராச வீதியில் 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்துக் கொடுக்கப்படும்.
கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் 1 1/2 பரப்புக் காணி உண்டு.
( தரகர் தேவையில்லை. )

077 288 0152
074 075 4204 (4643)

**காணி விற்பனைக்கு**
**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், மானிப்பாய், உடுவில் றோட்டுடன் ஆனந்த வைரவர் கோவில் சந்திக்கு அருகாமையில் ஆறு பரப்புக் காணி உள்ளது. 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
இரண்டு பரப்புக் காணியுடன் வீடும் உள்ளது.
( தரகர் தேவையில்லை. )

குரு : 077 805 1655
076 640 0974 (4643)

**ஜோதிடம் பார்த்தல்**

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு - 077 572 9724 (C-689)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 284

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2051 15.11.2020 தொலைபேசி : 021 222 3378

## அகப்பை பிடிப்பது எங்கட கை எண்டால்...






## சுழிபுரத்தில் பயங்கரம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். சமய, சமூகப் பொதுச் சேவையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என வாழ்ந்த யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டத்தைச் சேர்ந்த கோணையா தியாகராஜா அவர்கள் கடந்த 12 ஆம் திகதி காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரமடைகின்றோம்.

பிரதம தபால் அத்தியட்சகராக இருந்து ஓய்வு பெற்ற தியாகராஜா அவர்கள் கொய்யாத்தோட்டம் ஞான வைரவர் ஆலயத்தின் புனருத்தாரணப் பணிகளில் முன்னின்று உழைத்தவர். இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், AROD ஆகிய தொண்டு நிறுவனங்களில் இணைந்து தியாகராஜா ஆற்றிய பணி என்றும் மறப்பதற்குரியதன்று.

அவரின் ஆத்ம சாந்திக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனப் பண்டிதர் கூற,

அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: அரச காணிகளுக்கு எங்கட இளைஞர்கள் கணிசமாக விண்ணப்பித்திருக்கினம். இது நல்லதொரு விடயம். இருந்தும் இன்னும் எங்கட இளைஞர்கள் விண்ணப்பங்களை அனுப்ப வேணும்.

கங்காணி: எங்கட இளைஞர்கள் இது தொடர்பில அக்கறையற்று இருக்கிறது தான் பெரும் கவலையாக இருக்குது.

மூப்பர்: கங்காணியார் எங்கட இளைஞர்கள் அக்கறையற்று இருக்கினம் என்பதை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டன்.

எங்கட இளைஞர்களுக்கு வழிகாட்ட இங்க ஆரு இருக்கினம். இளம் தொழில் முயற்சியாளர்கள், அரச காணிகளுக்கு விண்ணப்பிக்க முடியும் என்ற தகவல்களையே எங்கட அதிகாரிகள் பரப்புரை செய்யவில்லை. அப்படியெண்டால் என்னெண்டு இந்தத் தகவல்கள் வெளியில போய்ச் சேர்றது.

சிறாப்பர்: தெரியாமல் தான் கேட்கிறன் ஏன் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் அப்படிச் செய்தவியள்.

மூப்பர்: எல்லாருக்கும் தெரியப்படுத்தினால் ஏகப்பட்ட விண்ணப்பங்கள் வருமல்லோ. அதுவேலைப் பளுவைக் கூட்டும் தானே. அரச உத்தியோகம் எண்டால் சும்மா இருந்து போட்டு கன்ரீனில போய் ரீயும் ரோலும் சாப்பிட்டுவிட்டு போறதா இருக்க வேணும். இதை விட்டிட்டு வேலைப் பளுவைக் கூட்டினால் இடைஞ்சலல்லோ.

பண்டிதர்: என்ர கதிர் காமத்துக் கந்தா! எடுக்கிற சம்பளத்துக்கு ஏற்ற வேலை செய்யத்தானே வேணும். சும்மா இருந்து சம்பளம் எடுக்கலாம். ஆனால் கடவுளுக்குக் கணக்குக் காட்ட வேணும்.

விதானையார்: இஞ்ச கடவுளுக்குக் கணக்குக் காட்டுறது பற்றிய பயம் எதுவும் கிடையாது. ஓடிற்றுக்குக் கணக்குக் காட்டிற்றால் எல்லாம் சரியாகி விடும்.

வாத்தியார்: அதுதானே வவுனியா வடக்குக் கல்வி வலயத்தில ஒருத்தர் கணக்குக் காட்டி விட்டாரே.

விதானையார்: உண்மைதான். எத்தனை அதிகாரிகள், எத்தனை உத்தியோகத்தர்கள் இவர்களையெல்லாம் கடந்து சம்பள மோசடி நடந்திருக்குதெண்டால், அரச உத்தியோகத்தின் மகிமையைப் பாருங்களேன்.

உந்த நாசமறுந்த அரச உத்தியோகப் பேய் எங்கட தமிழ்ச் சனத்தைப் பிடிச்சதால உற்பத்தி, வர்த்தகம், விவசாயம், சுயதொழில் முயற்சி புதிய கண்டுபிடிப்பு என எங்களிட்ட ஒன்றும் இல்லாமல் போயிற்றுது.

அதாலதான் அரச காணிகளுக்கு விண்ணப்பிக்கிறதிலும் விருப்பமில்லை.

சிறாப்பர்: அதுசரி, அரச காணிகளுக்கு எங்கட பிள்ளைகள் விண்ணப்பிக்கினம். அந்த விண்ணப்பங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமோ?



## அரசாங்கக் காணி வழங்கலில் எங்கட அதிகாரிகள் உதவவேணும்

விதானையார்: சிறாப்பர் காணிக்கு விண்ணப்பிக்கிறது முதலில செய்வம். கிடைக்கிறது கிடைக்காதது இரண்டாம் கட்டம். எப்பவும் எந்த விடயத்திலும் விண்ணப்பிக்கிறதில நாங்கள் பின்னிற்கக்கூடாது.

விண்ணப்பத்தை உரிய காலத்திற்குள்ள அனுப்பிப் போட்டு பிறகு அதுபற்றி யோசிக்கலாம்.

வாத்தியார்: விதானையார் எங்கட சிறாப்பர் கேட்டதில இன்னுமொரு அர்த்தம் இருக்குது.

அதாவது வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில இருக்கிற முடிக்குரிய காணிகளை தென்பகுதி மக்களுக்கு வழங்குகிறதுக்கான ஒரு ஏற்பாடாக இது இருக்கலாமோ எண்ட சந்தேகத்தைச் சிறாப்பர் வெளிப்படுத்துகிறதாகத்தான் நான் பார்க்கிறன்.

விதானையார்: இது விடயத்தில தமிழ் மக்கள் விழிப்பாக இருந்தால் ஒருத்தரும் எதுவும் செய்ய முடியாது.

மூப்பர்: என்ன விதானையார் சொல்லுறியள். கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்களன்.

விதானையார்: அரச காணிகளை வழங்குகிறது என்ற விடயத்தில மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பன நேரடியாகத் தொடர்பு பட்டிருக்கு. இதைவிட மாவட்டக் காணி அலுவலகம், பிரதேச செயலக காணி அலுவலகம் என்பவற்றுக்குத் தெரியாமல் ஒரு அங்குல அரச நிலத்தைக்கூட எவருக்கும் வழங்க முடியாது.

சாத்திரியார்: அப்ப விதானையார் வடக்கு, கிழக்குத் தமிழர் தாயகத்தில இருக்கிற அரச காணியை சிங்கள மக்களுக்கு வழங்கிறதாக இருந்தால் அது எங்கட அதிகாரிகள் ஊடாகத்தான் நடக்க வேணும் எண்டு சொல்லுறியள்.

விதானையார்: இந்தா சாத்திரியார் சரியான பொயின்றுக்கு வந்திட்டார். எங்கட அதிகாரிகள் நினைச்சால் எங்கட தாயகத்து நிலங்களை எங்கட மக்களுக்கே வழங்க முடியும்.

இதில எங்கட அனைத்து அதிகாரிகளும் தமிழ்ப் பற்றோட செயற்பட்டால் எல்லாம் சரியாகிவிடும்.

கங்காணி: அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக இருக்கிறது தங்கட பதவி உயர்வுகளுக்கு உதவும் எண்டு நினைக்கிற அரச அதிகாரிகளும் எங்களிட்ட இருக்கினம் தானே.

விதானையார்: அது தான் சொல்லுறன் அரச கடமையை நாங்கள் சரியாச் செய்ய வேணும். அதே நேரம் இனவாத நோக்கத்தில அரசாங்கம் செயற்பட்டால், அதற்கு இம்மியும் இடம் கொடுக்காமல் எங்கட அரச அதிகாரிகள் இருக்க வேணும். அப்படிச் செய்தால் எங்கட இனத்தை ஒருத்தராலும் அசைக்க முடியாது.

இவ்வாறு விதானையார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# சிக்கெனப் பிடித்தே தீர்வைப் பெற்றிடுவோம்

“ தமிழருக்கான தீர்வை சர்வதேசம் பெற்றுத்தர வேண்டும் எனும் எண்ணமே தமிழர் மனங்களில் இழை ஓடிக் கொண்டிருக்கிறது. இவ்வேளையில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக ஒரு தமிழினப் பெண் தெரிவு செய்யப்பட்டது தமிழருக்கு இன்னும் நம்பிக்கையூட்டியிருக்கிறது. ”


உலக வல்லரசான அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தல் முடிவடைந்திருக்கிறது.

கொரோனாவின் கோரத்தாண்டவத்திற்கும் நடுவில் வரலாறு காணாதவாறு அதிக வாக்குகள் அளிக்கப்பட்ட தேர்தலாக இத்தேர்தல் பதிவு செய்யப்பட்டதுடன் ஆளும் கட்சியில் போட்டியிட்ட டொனால்ட் ட்ரம்ப் படுதோல்வி அடைந்ததுடன் ஜோ பிடன் அமோக வெற்றிபெற்று அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாக எதிர்வரும் ஜனவரி மாதம் பதவியேற்கவுள்ளார்.

துணை ஜனாதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹரிஸ் தெரிவு செய்யப்பட்டிருப்பது வரலாற்றில் இடம்பிடித்துள்ளது.

வல்லரசு நாடான அமெரிக்காவின் துணை ஜனாதிபதி தமிழ் வம்சாவளி பெண் என்பதில் தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமை கொள்ள வேண்டும்.

காலம் காலமாக இலங்கை பேரினவாத ஆட்சியாளர்கள் சிறுபான்மைத் தமிழர்களுக்கு உரிமைகள் தருவதாக வாக்குறுதிகள் வழங்கியது மட்டுமே நடந்தேறியதே தவிர அதில் ஒரு அங்குலம் கூட நடைமுறைப்படுத்தப்பட்டதாய் வரலாறு ஏதும் இல்லை என்பதே உண்மை.

தமிழ் தலைமைகள் ஒவ்வொரு ஆட்சியாளர்களையும் நம்பி ஏமாந்


ததுவே வரலாறு என்றளவில் உள்ளது.

உரிமை கேட்டு தமிழ் இளைஞர் ஆயுதம் ஏந்தினர். இருப்பினும் அது 2009 உடன் மௌனிக்கப்பட மீண்டும் தமிழருக்கு உரிமை தருவதாகக் கூறி ஏமாற்றும் படலம் ஆரம்பமானது.

இது இவ்வாறிருக்க இறுதி யுத்தத்தில் இலங்கை இராணுவம் போர்க்குற்றம் புரிந்தது என்ற குற்றச்சாட்டு உலகளாவிய ரீதியில் எழ ஆரம்பித்தது.

ஆனாலும் இல்லை, படையினர் பயங்கரவாதத்திற்கு எதிராகவே போர் நடத்தினர். அங்கு போர்க் குற்றங்கள் ஏதும் மீறப்படவில்லை என ஆட்சியாளர்கள் கூறிக்கொண்டார்கள்.

இருப்பினும் இறுதி யுத்தத்தில் நடந்ததாகக் கூறப்படும் போர்க் குற்றத்திற்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும் எனும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற முன்னின்று செயற்பட்டது அமெரிக்கா என்பது இங்கு மிக முக்கியமாகிறது.

இலங்கையில் இறுதி யுத்தத்தில் நடைபெற்ற மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் எனும் தீர்மானத்தை நிறைவேற்றிய அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இது தமிழர்களுக்கு சாதகமான விடயமாக அமையும் என்பதை எவரும் மறுத்துவிட முடியாது.

அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் சிறுபான்மைத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றம். அமெரிக்காவின் துணை ஜனாதிபதி தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த பெண்.

இதைச் சரியாக எம் தமிழ்த் தலைவர்கள் பயன்படுத்த வேண்டும்.

தமிழருக்கு நடந்த அநீதி அத்தனைக்கும் அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைக்க இதை விட்டால் வேறு எந்தச் சந்தர்ப்பமும் அமைந்துவிடாது என்பதை உணர்ந்து, சரியான முறையில் காய் நகர்த்தினால் தமிழர்களுக்கான உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அதைவிடுத்து மீண்டும் நல்லாட்சிக்கு முட்டுக்கொடுத்து சரியான சந்தர்ப்பத்தை நழுவ விட்டதைப் போல் செயற்படுவது இராஜதந்திரமாக அமையாது என்பதே உண்மை.

அமெரிக்க ஜனாதிபதி பதவியேற்பு எதிர்வரும் ஜனவரி மாதம் தானே. பதவி ஏற்ற பின்பு பார்த்துக்கொள்ளலாம் என்பதை விடுத்து இப்போதே அவருடனான தொடர்புகளை ஏற்படுத்தி ஒரு சிறந்த நல்லுறவை ஏற்படுத்துவது தற்போதைய தேவையாகும்.

சீனாவுடன் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் இலங்கை அரசின்மேல் அமெரிக்கா கொண்டுள்ள சினம் அமெரிக்காவுடன் தமிழ் தலைமை ஒட்டிக்கொள்ள வாய்ப்பாக அமையும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதைச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழர் விடயத்தில் நீதி கிடைக்க தமிழ் தலைமைகள் தயாராக வேண்டும்.

அழுகின்ற பிள்ளைக்கே பால் கிடைக்கும் என்று கூறுவார்கள். இதுபோலவே தமிழர் நிலையும் தற்போதுள்ளது. எனவே எமக்கான உரிமைகளை அமெரிக்கா பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை நாம் அவர்களின் காதில் போடுவதே சரியானது.

இல்லை, அது எல்லாம் அமெரிக்காவுக்குத் தெரியும். அவர்கள் எமக்கு நீதியைப் பெற்றுத்தருவார்கள் என நாம் வாய் பொத்தி நிற்போமாக இருந்தால் அதன் விளைவு பாரதூரமானதாக அமைந்துவிடும்.

உலக வல்லரசு நாட்டின் துணை ஜனாதிபதியாக ஒரு தமிழர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார் என்பது ஆட்சியாளர்களின் மனங்களில் எதை எதையோ தோற்றுவித்திருக்கும். ஆனாலும் அவர்கள் அதைக் காட்டிக் கொள்ளாமல் வாழ்த்துச் செய்தி அனுப்பி நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார்கள்.

சிறுபான்மைத் தமிழர்களாகிய எமக்கான உரிமைகளை ஆட்சியாளர்கள் தரமறுத்தார்கள். அறவழியில் போரிட்டோம். தோற்றோம். ஆயுத வழியில் போரிட்டோம். தோற்கடிக்கப்பட்டோம். மீண்டும் அறவழியில் போராடத் தொடங்கியுள்ளோம்.

இந்த அறவழிப்போராட்டம் எமக்கான உரிமைகளைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கை, அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக ஒரு தமிழ் பெண் தெரிவு செய்யப்பட்டார் என்ற செய்தி கிழக்கு வானில் தோன்றிய ஒளிக்கீற்றாய் தென்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தை நாம் சிக்கனப்பிடித்து ஐயகோ எமக்கிழைக்கப்பட்ட அநீதிக்கு நீதியினைப் பெற்றுத் தாருங்கள். எமது உரிமைகளைப் பெற்று நாம் சுதந்திரமாக வாழ வழி செய்யுங்கள். அதுவரை நாம் உங்கள் காலடியில் இருந்து எழ மாட்டோம் என ஒருமித்துக் குரல் கொடுப்போம்.

எல்லாம் நன்றாக நடக்கும். எமக்கு நீதி கிடைக்கும். எமக்கான உரிமைகள் எம்மிடம் வந்துசேரும். நாம் நாமாக வாழலாம். இது அனைத்தும் கனவாய் ஆகாமல் நிஜமாய் நடக்க வேண்டும் எனின் அதற்கான வழி எம் தமிழ்த் தலைமையின் கைகளிலேயே இருக்கிறது.

அபிமன்யு



# சிறுவர் அரங்கம்

## கிணற்றில் விழுந்த நரி

ஒருநாள் ஒரு நரி கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. விழுந்த அந்த நரி, யாராவது வந்து தன்னைக் காப்பாற்றுவார்கள் எனக் காத்திருந்தது. ஆனால், ஒருவரும் அந்தப் பக்கம் வரவேயில்லை.

அதனால், சாப்பிடவும் முடியாமல், தூங்கவும் முடியாமல்தண்ணீருக்குள்ளேயே தவித்துக் கொண்டிருந்தது நரி.

பத்து நாட்கள் கடந்து போனது. அன்றைக்கு அந்தப் பக்கமாக ஓர் ஆடு, மே... மே... என்று கத்திக்கொண்டே வந்தது.


உடனே நரி உஷாரானது. இந்த ஆட்டை வைத்து எப்படியாவது மேலே வந்து விட வேண்டும் என்று நரி நினைத்துக்கொண்டது. ஆடு அண்ணா, இங்கே வாயேன் என்று அன்போடு அழைத்தது நரி. கிணற்றில் இருந்து வந்த குரலைக் கேட்டதும், ஆடு எட்டிப் பார்த்தது. என்ன நரி யாரே... தவறி விழுந்துட்டியா? என்று கேட்டது ஆடு.

சே... சே... நானாவது விழுவதாவது. நான் வேணும்னு தான் கிணற்றுக்குள்ளே இறங்கினேன்.

இந்தக் கிணற்றுத் தண்ணீர் ரொம்ப சுவையாக இருக்கு. நீ வேணும்னா இறங்கி வந்து குடிச்சுப்பாரேன் என்றது நரி. ஆடு கொஞ்சமும் யோசிக்கவில்லை.

உடனே கிணற்றுக்குள் குதித்தது. நரியே... இந்தத் தண்ணீர் சுவையா ஒன்னும் இல்லையே... உன்னை நம்பி வந்தேன் பாரு... இப்போ எப்படி வெளியில போறது? என்று கேட்டது ஆடு.

முதல்ல உன் மேலே ஏறி நான் வெளியே போறேன்.



அப்புறம் கையை நீட்டறேன். கையைப் பிடிச்சிக்கிட்டு நீயும் வெளியே வந்துடு என்றது நரி. ஆடும் ஒப்புக்கொண்டது. ஆடு மீது ஏறி நரி வெளியே வந்தது. ம்... கையை கொடு... என்னைச் சீக்கிரமா காப்பாத்து... என்றது ஆடு. உன்னை நான் எப்படிக் காப்பாத்துறது? எதைச் செஞ்சாலும் விவேகமா, புத்திசாலித்தனத்தோட செய்யணும். இப்போவாவது புரிஞ்சுக்க.

நான் வரேன்னு சொல்லி விட்டு நரி கிளம்பியது. தன் முட்டாள்தனத்தை நினைத்து ஆடு வருந்தியது.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்




அன்றாடம் சமைக்கிற பொருட்களை அப்படி எரிகின்ற நெருப்புக்குச் சமர்ப்பணம் செய்துவிட்டுத்தான் சாப்பிடுவார்கள்.

மது அருந்துவதற்கு முன்னர் கூட இரண்டு சொட்டு மதுவை தரையில் பூமி தெய்வத்திற்கு அர்ப்பணித்து விட்டுத்தான் அருந்துவார்கள்.

தங்களுடைய மூதாதையர்கள் அக்னியின் வடிவத்தில் வைத்து வணங்குவது கிரேக்கர்களின் நம்பிக்கை. சாம்பிராணி போன்ற பூஜைப் பொருட்கள் எல்லாம் அவரவர் வசதிக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தப்படும்.

அரிஸ்ரோட்டில் சொல்லிக் கொண்டே போக, அலெக்சாண்டரின் மனதில் அடுத்த கேள்வி தயாராக இருந்தது. நிறையக் கடவுள்கள் இருக்கிறார்கள் என்று சொன்னாரே தந்தை அது உண்மையா?

ஆமாம் அலெக்சாண்டர். கிரேக்கர்களுக்கு கடவுள் நம்பிக்கை நிறைய உண்டு. ஒன்றல்ல, இரண்டல்ல ஏராளமான தெய்வங்கள் இருந்தன, இருக்கின்றன.

கிட்டத்தட்ட ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு தெய்வத்தை வணங்கும் அளவுக்கு ஏராளமான தெய்வங்கள். ஒவ்வொரு தெய்வத்திற்கும் தனித்தனியே ஆலயங்கள் இருக்கும்.

அத்தனையும் அந்தந்த நகரத்தில் இருப்பவர்கள் உருவாக்கியவை. அதைப்போலவே ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஆலயத்திற்கும் புராணங்கள், கதைகள் எல்லாம் உண்டு.

ராட்சதர்கள், மோகினிகள், பிசாசுகள், மந்திரம், சூனியம், குறி போன்ற சங்கதிகளில் கிரேக்கர்களுக்கு நாட்டம் அதிகம். நம்பிக்கையும் உண்டு.

அலெக்சாண்டரின் புருவங்கள் ஆச்சரியத்தால் உயர்ந்தன. கண்கள் படபடத்தன. தந்தை ஏதாவது ஒரு காரியத்தைச் செய்து கொண்டிருக்கும் போது தும்மினால் கோபம் கொள்கிறாரே, இதற்கு என்ன அர்த்தம்?

கிரேக்கர்களுக்கு இருக்கும் முக்கியமான நம்பிக்கைகளுள் தும்மலும் ஒன்று. இதை அபசகுனமாகக் கருதுவார்கள். அதேபோல வெளியில் செல்லும் போது பூனை குறுக்கே வந்து விட்டாலும் கெட்ட சகுனம் தான். உடனே தரையில் கிடக்கும் மூன்று கற்களை எடுத்து நடுத்தெருவில் போட்டுவிட்டுப் புறப்படுவார்கள்.

இரவு தூங்கும்போது கனவுகள் வருவது சகஜம். ஆனால் அதற்கும் சில அர்த்தங்களைப் பட்டியல் போட்டு வைத்திருப்பார்கள். அதன் பலன்கள் மீது அலாதியான நம்பிக்கை அவர்களுக்குண்டு.

(தொடரும்)



தமிழகத்தில் சிறுவர் உயிர் குடிக்கும் ஆழ்துளைக் கிணறுகள் இனியாவது மூடப்படுமா?






பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்வது சரியானதா?

**நிஷா** — யாழ்ப்பாணம்

தெற்கிற்கு செய்யும் சலுகை அனைத்தும் வடக்கு- கிழக்கிற்கும் வழங்கப்படுகிறது என்கிறதே அரசு உண்மையா?

ஒரு கோவிலில் நற்சிந்தனை நடக்கிறது. அந்த கோவிலில் இருக்கும் அத்தனை பேரும் அந்த நற்சிந்தனையினை கேட்கிறார்கள் எனும் முடிவுக்க வரமுடியுமா?

அரசு எது சொன்னாலும் சரி என்று எடுத்துக்கொள்வதும் இதைப் போன்றதுதான்.

இது மழை காலம். வெள்ள நீர் உட்புகுந்த குடிசைகளுக்குள் சென்று ஏதும் அரச உதவி கிடைத்ததா என்று கேட்டுப் பாருங்களேன்.

தெற்கிற்கும் வடக்கு-கிழக்கிற்கும் ஒரே சலுகை வழங்கப்படுகிறதா எனும் உண்மை புரிந்து விடும்.

**வருண்** — வடமராட்சி

பசித்த பிள்ளைதான் பாலுக்கு அழும் என்கிறார்களே?

உண்மை தான். அதுக்காக பிள்ளை அழவில்லைதானே அதனால் பிள்ளைக்கு பசிக்க வில்லை என தாய் பிள்ளைக்கு பால் கொடுக்காமல் இருப்பாராக இருந்தால் அது தாய்மை இல்லை.

வருண் சில விடயம் உபதேசத்திற்குப் பொருந்தும். உண்மை வாழ்விற்குப் பொருந்தாதப்பா.

**இந்து** — யாழ்ப்பாணம்

தீபாவளி சிறப்பாகப் போய்ச்சுதோ வியாசர் மாமா?

வாயிற்கு மாஸ்கட்டி வாழ்த்துச் சொல்லத் தடுத்தது. கை கொடுக்கத் தடை விதித்து தள்ளி நிற்கச் செய்தது.



கட்டி அணைக்கக் கூடாதென்று கண்டிசன் போட்டது. இது தானா சிறப்பு.

**தாரு** — சண்டிலிப்பாய்

இரக்க குணம் இல்லாத மனிதன் உலகத்தை ஆட்சி செய்தால்?

இப்போது அதுதானே நடக்கிறது. இதைப்பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியது தானே.

உலகையே அழிக்கவல்ல அணுகுண்டை தயாரித்து வைத்துக்கொண்டு நீ பெரிது, நான் பெரிது என மல்லுக் கட்டும் உலக வல்லரசுகளுக்குப் புரியவில்லை நாம் செய்யும் இக் கொடும் செயலில் இந்த உலகின் மனிதன் தவிர இதர உயிரினங்களும் அழியப் போகிறது என்பது.

இந்த உலகம் மனிதனுக்கு மட்டும் சொந்தமில்லை என்பதை புரியாதவரை அணுகுண்டுகளின் தயாரிப்பு நடந்து கொண்டுதான் இருக்கும்.

**சிறி** — மானிப்பாய்

பிரச்சினைக்கு முகம் கொடுக்க முடியாமல் தற்கொலை செய்வது சரியானதா?

மனம் விட்டுப் பேசுவதற்கு நம்பிக்கை உள்ள ஒருவர் இல்லையென்றால் சிறு பிரச்சினைகூட தலையில் இடியாய் இறங்கும்.

இதிலிருந்து என்னால் மீள முடியாது என்ற எண்ணம் மேலோங்கும்.

இனி நான் இருந்தென்ன பயன் என்ற முடிவுக்கு மனம்வரும்.

பிரச்சினைகளை மனம் விட்டுப் பேசினாலே அவை காணாமல் போய் விடும்.

மனிதனை மிஞ்சும் அளவிற்கு பிரச்சினைகள் ஒன்றும் அவ்வளவு பெரிதில்லையே. இதைப் புரிந்து கொண்டால் தற்கொலை எண்ணம் வரவே வராது.

**ஆகாஷ்** — எழுதுமட்டுவாழ்

தமிழகத்தில் சிறுவர் உயிர் குடிக்கும் ஆழ்துளைக் கிணறுகள் இனியாவது மூடப்படுமா?

ஆழ்துளைக்கிணறுகள் இந்தியாவிற்குக் கிடைத்த சாபம்.

இயற்கையை வஞ்சித்தால் அது எமக்கு அழிவையே தரும் என்பது மட்டும் உண்மை.

நீர், இந்த உலகை விட வேறெங்கும் கிடைக்காத அற்புதம். அதை அவமதிப்பு செய்தால் அதன் விளைவு விபரீதமாக இருக்கும்.

நீரைத்தேடிய மனிதனின் வேட்டை தோல்வியுறும் போது ஆழ்துளைகள் அகன்று கிடக்கிறது சிறுவர் உயிர் குடிக்கத் தயாராய்.

ஆழ்துளை எனும் சாபக்கேடு அழியும் வரை அழிவுகளை யாராலும் தடுக்க முடியாது.

**திவ்யா** — வதிரி

வாழ்க்கை ரம்ப போறிங்கா போகுதே வியாசரே என்ன செய்ய?

காலை புட்டு, மதியம் சோறு, இரவு மறுபடியும் புட்டு இப்படி ஒரேமாதிரியே போனா சலிப்பேறாமல் என்ன செய்யும்.

ஒருவன் பணம் சம்பாதிப்பது எப்படி என்ற புத்தகத்தை ஆவலாக வாங்கிப் பக்கத்தைப் புரட்டினான். வேலைக்குப் போடா முட்டாள் என்றிருந்தது அதில்.

**சுதன்** — குப்பிழான்

தமிழீழக் கனவை கைவிடச் சொல்கிறாரே நாமல்?

அந்தக் கனவைக் கலைத்தவர்கள் எனும் உரிமையுடன் கைவிடச் சொல்கிறார் போலும்.

கனவு என்பது கணத்தில் தோன்றி மறைவது. அது கனவாக இருந்தால் கைவிடுவதில் தவறேதும் இல்லை.

ஆழ்மனதின் பதிவுகளே கனவாக பிரதிபலிக்கின்றன என்றும் ஒரு கதை உண்டு.

தனி நாடு கேட்டு தமிழ் இளைஞர் ஏன் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதையும் இவ்விடத்தில் ஆட்சியாளர்கள் சிந்திக்க வேண்டும்.

**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## ஆசைகள் பல கோடி



தென்றலை வரச்சொல்லி
தெம்மாங்கு பாட்டிசைத்து
தேரினிலே பவனிவர
தேன் கனிந்த மனசுக்கு ஆசை

புன்னகை நதிகளாய்
புதுவழி தேடி ஓடிட
தவழ்ந்திடும்
பாதங்களுக்கு ஆசை


கவலைக் களைகளை
கட்டுக்களாய் அவிழ்த்து விட்டு
சந்தோச நீரை அருந்த
சந்திக்கும் விழிகளுக்கு ஆசை

குத்திக் கிழிக்கும்
குருதி உறிஞ்சா
வார்த்தைகளை நவின்றிட
நாவிற்கு ஆசை

கைமாறு கருதாது
கண்ணியத்துடன் அனைவர்க்கும்
உதவி வழங்கிட
கரங்களுக்கு ஆசை

*ரீ.மேரி சிந்துஜா, மிருசுவில்*

## அன்புள்ள கொரோனாவுக்கு!



அன்பிற்குரிய கொரோனாவே !,
மாவீரன் தான் நீ !
மக்கள் பலரை
மரணிக்கச் செய்த நீ !
மாவீரன் தான் !

கண்ணுக்கும் தெரியாமல்
காரணமும் சொல்லாமல்
கோடி உயிர்களை
கொல்லத் துணிந்த நீ!
மாவீரன் தான்!

உன்னைப் பற்றியே
ஊரெல்லாம் பேச்சு
உதிலெது உண்மையென
உண்மையாகத் தெரியவில்லை!

உன் ஆதி இன்னும்
முடிவாகவில்லை!
உன் ஆதிக்கத்திற்கு ஒரு
முடிவில்லை!
ஒரு வேளை நீயும் ஒரு
கடவுளோ!

ஆனால்
உன்னை அழிக்கத் துடித்த
உலகையே இப்போது
உன்னோடு வாழவைத்தாய்!
உன்னை பிடித்தது அதில்தான்.

மாவீரனே!,
இது போதும்.
இத்தோடு நிறுத்து!
உனக்கொரு இடம்
உலகில் கிடைத்துள்ளது!

தமக்கான இடத்துக்காய்
தளராது உழைப்பவர்கள்,
தனிமைப்படுத்தப்பட்டு
தளரக்கூடாதல்லவா?

உன் மரணத்தை
எதிர்பார்த்து,
என் மடலை
முடிக்கிறேன்.

இப்படிக்கு,
முடங்கிக் கிடக்கும்
ஒருவன்.

*நொச்சிமலை தமிழ்*

## வீட்டுக்குள்ளே இரு

சந்திரனில் கொடி நாட்டுவேன்
செவ்வாயில் குடியேறுவேன்
செயற்கைச் சூரியனால்
இரவைப் பகலாக்குவேன்
ஆளில்லாத விமானங்களால்
குண்டுமாரி பொழிவேன்
வேண்டுமானால் இந்த
உலகையே அழிப்பேன்
அப்போது ஓர் அதட்டல்
“ஏ! மனிதப் பூச்சியே
வீண் பிதற்றல் வேண்டாம்
வாயை முதலில் மூடு
துணியால் முகத்தை கட்டு
வீட்டுக்குள்ளே இரு
வெளியே வந்தால்...
தொலைத்துவிடுவேன்” என்றது
கொரோனா வைரஸ்

*பி.யதுர்சன், கொ.இ.க.*

## பயணம்

அவிரழகு வண்ணத்தியே!
உன் பயணம்
புதிய ஒளிக்கானதோ அன்றி
புவியின் ஒளிக்கானதோ?

## எழுவாயா கரமே?

வானம் தொட எழும் கரத்திற்கு
வழி மறிக்கும் சில முட்கள்
எழுவாயா கரமே?
உன் வெற்றி வினவுகிறேன்

*சி.துஷானி,*
*யா/ மெ.பெ.உ.பா*

## மௌனத்தின் தேடல்- 502



## தாயன்பு

அன்பெனும் சுனை நீரில்
ஆனந்தமாய் நீர் இருந்து
இல்லறம் எனும் நல்லறத்தில்
ஈந்து உவந்தளித்தீர் எமை நீர்
உன் உள்ளத்தால் என்பசி உணர்ந்து
உழுந்தரைத்து நீ தோசை சுட
உவகையுடன் நானிருக்க
ஊஞ்சலாடி உன் முதுகில்– தங்கை
ஊட்டிவிடு என உனை வேண்ட
என் வதனமதை
ஏந்திழையாய் ஏங்கி நீ பார்த்திருக்க
ஐயமில்லை அன்னையே
ஒன்றினைக் கொடுத்துவிடு தங்கைக்கு
ஒப்பாரும் மிக்காரும் யாருளர்
உன் அன்பிற்கு அன்னையே!

ச. செல்வறஞ்சனா
சுன்னாகம் கிழக்கு

## வாழ்க்கையின் வடிவமாய்

முத்தாய் இரண்டு குழந்தைகளைப் பெற்றெடுத்து
முத்தமிட்டு அன்புபொழியும் இந்தப் பெண்ணின்
வாழ்க்கை அடுப்பங்கரையிலேயே சாம்பலாகிறது
அவள் சுடுகின்ற தோசைக்கு வடிவம் உண்டு ஆனால்
அவளின் வாழ்க்கைக்கு வடிவமில்லை
என்பதை யாரறிவாரோ?

*ஆ.பாலமதுஜா*
*யா/ மெ.பெ.உ.பாடசாலை*

## அநாதையான அன்பு

அன்னையின் அரவணைப்பில்
ஆளுக்கு ஒரு தோசை
ஆசையாய் உண்டகாலம்
இப்போதெல்லாம்...
அன்பிற்கு அன்னையின்றி
அரவணைப்பிற்கு நேரமின்றி
அநாதையாய்... அர்த்தமின்றி
நகர்ந்து செல்கிறது...

ம.சங்கரி
கோகுலவீதி,
கோண்டாவில் வடக்கு.

## நல்ல தாய்

சிந்தித்துப் பார்த்து
சிக்கனமாய் வாழ்ந்து
தென்பை வாரித்தரும்
அன்பு பண்புடன்
சேமிப்பிலும் கவனத்தை
செலுத்தி வந்தால்
துன்ப துயரங்களருகில்
ஒருபோதும் நெருங்காது
நாளும் பொழுதுமென்றும்
நல்லதாய் நகரும்
ஊரு முலகுமுங்களின்
உறுதியை உணர்ந்து
போற்றும்

க.நாகராசா
நுணாவில்

## மௌனத்தின் தேடல் -503



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## உலகம் உயர எழும்

சுத்தம் சுகம் தரும் சூழல் அழகு தரும் அன்பு பரிவு தரும்
அம்மா தரும் அன்பு நிலைத்திருக்கும்
இறையின் அருளாகி நிலைத்திருக்கும்
உலகம் உயர எழும்

தவம், தாவடி

## இயற்கையோடு

குந்தியிருந்து குனிந்து அடுப்பூத
மூச்சுப் பெலக்கும் குந்தி எழும்ப
உடல் வளைந்து மூட்டு இயல்பாய்
இயங்கும் இயற்கையோடு இசைவோம்

*சிவன்மைந்தன், நல்லூர்.*

# புதிய விமானப்படை தளபதியின் இலக்கும் சிக்கலும்

புதிய விமானப் படைத் தளபதியாக பொறுப்பேற்றுள்ள எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, விமானப்படையை வலுப்படுத்துவதற்கான, நான்கு இலக்குகளை அறிவித்திருக்கிறார்.



முதலாவது, நாட்டின் இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில், விமானப் படையின் ஆற்றலைப் பலப்படுத்துவது.

இரண்டாவது, கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது. மூன்றாவது, ஆளில்லா விமானங்களின் அணியைப் பலப்படுத்துவது.

நான்காவது இயற்கை அனர்த்தங்களின்போது மீட்பு மற்றும் உதவி நடவடிக்கைகளில் ஈடுபடும் திறனை அதிகரிப்பது.

இவற்றில் முதல் மூன்றும், தேசிய பாதுகாப்புடனும், நான்காவது மீட்பு மற்றும் உதவி வழங்கலுடன் தொடர்புபட்ட விடயங்களாகும். அத்துடன் அவர் இன்னொரு விடயத்தை இந்தக் கூட்டத்தில் நினைவுபடுத்தியிருக்கிறார்.

விமானப்படையிடம் உள்ள போர் விமானங்கள், போக்குவரத்து விமானங்கள், ஹெலிகொப்டர்கள் என மூன்று வகையான விமானங்கள் இருக்கின்ற நிலையில், போர் விமானங்களின் அணி பலவீனமான மட்டத்தில் இருக்கிறது என்பதை அவர் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு முந்திய நிலையுடன் ஒப்பீடு செய்யும்போது இப்போது போர் விமானங்களின் அணி மிகவும் பலவீனமான நிலையில் இருக்கின்றது என்பதுதான் உண்மை. அதுவும் விமானப்படையின் 15 வகையான விமானங்களில் 3500 மணி நேரங்கள் பறப்பில் ஈடுபட்ட ஒரு விமானியின் தலைமையில் (எயார் மார்ஷல் சுமங்கல டயஸ்) இருந்து விமானப்படை விடுபட்டபோதுதான் இந்த நிலை காணப்படுகிறது.

1990களின் தொடக்கத்தில், போர் விமானங்களின் அணி உருவாக்கப்பட்டபோது எவ்-7 போர் விமானங்களை இயக்குவதற்காக அதில் உள்வாங்கப்பட்ட 6 விமானிகளில் ஒருவராக இருந்த விமானப்படையில் உள்ள எவ்-7, கிபிர், மிக் போர் விமானங்களை இயக்கிய அனுபவம் கொண்டவரின் கையில் இருந்து, விமானப் படைத் தளபதி பதவி கைமாறும் கட்டத்தில் தான் இந்த நிலை காணப்படுகிறது.

போர் உச்சநிலையில் இருந்த போது விமானப்படையிடம் போதிய போர் விமானங்கள் இருந்தன. ஆனால் போதியளவு, அனுபவம் கொண்ட விமானிகள் இருக்கவில்லை. இதனால் சில கட்டங்களில் ஓய்வின்றி விமானிகள் பணியாற்ற வேண் டிய நிலையும் காணப்பட்டது. இப் போது நிலைமை தலைகீழாக உள் ளது.

போர் விமானங்களை இயக்கக் கூடிய மிகத் திறமையான விமானிகள் போதுமானளவில் இருக்கின்றார்கள். ஆனால் போதியளவு போர் விமானங்கள் இல்லை என்று புதிய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன கூறியிருக்கிறார்.

முன்னர், கிபிர், மிக்-27, எவ்-7 என டசின் கணக்காக போர் விமானங்களைக் கொண்டிருந்த விமானப்படையிடம் இப்போது செயற்பாட்டு நிலையில் இருப்பது, வெறுமனே நான்கு போர் விமானங்கள் தான்.

ஒரு கிபிர் போர் விமானமும், மூன்று எவ்-7 போர் விமானங்களும் தான் இப்போது பயன்படுத்தக்கூடிய நிலையில் விமானப்படையிடம் இருக்கின்றன.

இப்போதைய சூழ்நிலையில், புற எதிரிகள் என யாரும் இல்லாத சூழலில் விமானப்படைக்கு போர் விமானங்கள் அவசியமில்லை.

ஆனால் ஒரு நாடு என்று பார்க்கும் போது அதற்கான அடிப்படைத் தேவையான போர் விமானங்களில் வலுவைக் கொண்டிருக்க வேண்டும்.

அவ்வாறான குறைந்தபட்ச பலத்தைக்கூட இலங்கை கொண்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் பல துல்லியமான தாக்குதல்களை நடத்திய திறமையான விமானிகளைக் கொண்டிருந்தபோதும் அவர்களுக்குத் தீனி போடக்கூடிய வகையில் போர் விமானங்கள் இல்லை என்பதே உண்மை.

இந்த நிலைமைக்கு முக்கியமான காரணம், பிராந்திய அதிகாரத்துவ மோதல்கள் தான்.

சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை விமானப்படையின் போர் விமான அணியைப் பலப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

அப்போது சீனாவின் தொழில் நுட்பத்தில் பாகிஸ்தான் தயாரிக்கும் **JF17 Thunder** விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப் பட்டது.

8 தொடக்கம் 12 வரையான இந்த வகை விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவையின் ஒப்புதலும் பெறப்பட்டு இதற்கான உடன்பாட்டில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் கொழும்பில் கையெழுத்திடவும் திட்டமிட்டிருந்தார்.

ஆனால் கடைசி நேரத்தில் அந்த உடன்பாடு பாகிஸ்தானிடம் இருந்து கைநழுவிப் போனது. அதற்கு முழுக் காரணம் இந்தியாதான்.

இந்தியா அந்தப் போர் விமான உடன்பாட்டை எதிர்த்தது.

இலங்கை விமானப்படைக்கு பாகிஸ்தானிடம் இருந்து போர் விமானங்கள் கொள்வனவு செய்யப்படுவதை டில்லி விரும்பவில்லை.

இராஜதந்திர அழுத்தங்களின் மூலம் அந்த உடன்பாடு தடுத்து நிறுத்தப்பட்டது.

அப்போது, இலங்கைக்கு அச்சுறுத்தல் இல்லாதநிலையில், இவ்வாறான போர் விமானங்கள் அவசியமில்லை. தேவைப்படும்போது இந்தியா உதவும் என்றொரு காரணம் டில்லி தரப்பில் முன்வைக்கப்பட்டது.

அதாவது போர் விமானங்களின் தேவைக்காக அதன் பாதுகாப்புக்காக இந்தியாவை நம்பியிருக்கும் நிலைக்கு இலங்கையை தள்ளுவது டில்லியின் ஒரு நோக்கமாக தென்பட்டது.

இன்னொன்று **JF17 Thunder** போர் விமானங்களுக்கு இணையாக இந்தியா தயாரிக்கின்ற தேஜஸ் போர் விமானங்களை இலங்கைக்கு விற்பனை செய்வது, இதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டிருந்தன.

ஆனால் தேஜஸ் போர் விமானங்களின் சில தொழில்நுட்ப முன்னேற்றங்கள் போதுமானளவில் இல்லாததால் அவற்றைக் கொள்வனவு செய்ய இலங்கை விமானப்படை தயங்கியது.

ஆனால் இப்போது தேஜஸ் போர் விமானங்களில் கூடுதல் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த நிலையில் புதிய போர் விமானங்களைக் கொள்வனவு செய்வது விமானப்படைத் தளபதியின் இலக் காக இருந்தாலும் அதனை எவ்வாறு செயற்படுத்துவது என்ற குழப்பம் உள்ளது.

இந்தியாவின் போர் விமானங்களைப் புறக்கணித்து பாகிஸ்தானிடம் அவற்றை வாங்கமுடியாது. அதுபோல சீனாவிடம் சென்றாலும் தற்போதைய நிலையில் முரண்பாடுகள் தீவிரமாகும்.

இவை எல்லாவற்றையும் விட்டுவிட்டு தற்போதைய அரசாங்கத்தின் முக்கிய புள்ளிகளுக்கு நெருக்கமான உக்ரேன், ரஷ்ய நிறுவனங்களின் பக்கமும் திரும்ப முற்படலாம். ஆனால் அதற்குத் தேவையான நிதி இப்போது அரசாங்கத்திடம் இல்லை.

தற்போதுள்ள நெருக்கடியான சூழலில் போர் விமானங்களின் கொள்வனவுக்காக நிதியை பெருமளவில் ஒதுக்க முடியாமல் இருக்கிறது அரசாங்கம்.

அதுபோன்றே, ஆளில்லா விமானங்களின் அணியைப் பலப்படுத்தும் திட்டமும் தற்போதைய விமானப்படைத் தளபதியிடம் உள்ளது. இறுதிக் கட்டப் போரில் போர் விமானங்களின் பங்கைவிட ஆளில்லா விமானங்களின் பங்குதான் முக்கியமானதாக இருந்தது.

அவற்றில் இருந்து கிடைத்துக் கொண்டிருந்த மெய்நிகர் படங்களின் மூலம்தான், இராணுவ அணிகள் நகர்த்தப்பட்டன. ஆட்டிலறிகள், மோட்டார்கள் ஒருங்கிணைக்கப்பட்டன. புலிகளின் வியூகங்கள் உடைக்கப்பட்டன. தற்போது போர் இல்லாவிட்டாலும், இலங்கைக்கு பெரியதொரு பாதுகாப் புச் சவால் உள்ளது.

இலங்கையின் பரப்பளவை விட 60 மடங்கு பெரிய கடல் எல்லை இலங்கையிடம் உள்ளது. அதனைப் பாதுகாக்க, ஏனைய கண்காணிப்பு விமானங்களை விட, ஆளில்லா விமானங்கள் அதிகம் பயனளிக்கக் கூடியவை. வாங்குவதற்கும் அவற்றை இயக்குவதற்கும் செலவுகள் குறைவு. எனவே ஆளில்லா விமானங்களைக் கொண்டு பாதுகாப்பை உறுதிப்படுத்த விமானப்படைத் தளபதி திட்டமிட்டிருக்கலாம்.

ஆனாலும் இதேநிலை நீடிக்குமானால் இன்னும் சில ஆண்டுகளில் இப்போதுள்ள போர் விமானங்களும் ஓய்வுநிலைக்கு சென்றுவிடும். அப்போது போர் விமானங்களின் விமானிகள் வேலையே இல்லாமல் போய்விடும். ஓய்வின்றி மின்னல் வேகத்தில் பறந்தவர்கள், விமானத் தில் படுத்துக் கிடக்கும் நிலை வந்து விடும்.

**சுபத்ரா**

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் கடைசி நிமிட சுவாரசியங்கள்

“உலகின் அனைத்து ஊடகங்களும் அமெரிக்கத் தேர்தல் முடிவுகளை எதிர்பார்த்திருந்த சூழலில், அமெரிக்காவின் 46 ஆவது ஜனாதிபதியாகத் தேர்வாகியிருக்கிறார் ஜனநாயகக் கட்சியின் ஜோ பிடன். துணை ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த கமலா ஹாரிஸ், அமெரிக்காவின் ‘முதல் பெண் துணை ஜனாதிபதி’, ‘கறுப்பினத்தைச் சேர்ந்த முதல் பெண் துணை ஜனாதிபதி’ எனப் பல ‘முதல்’ சாதனைகளுக்குச் சொந்தக்காரர் ஆகியிருக்கிறார். தேர்தல் குறித்த செய்தித்துளிகள் சில ...

❖ அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், இதுவரை இல்லாத அளவு 148 மில்லியன் வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. இவற்றில், 75 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளை ஜோ பிடன் பெற்றிருக்கிறார். ஜனாதிபதி வேட்பாளர் ஒருவர் பெற்றிருக்கும் அதிகபட்ச வாக்குகள் இதுதான். அதேபோல், ட்ரம்ப்புக்கு 70 மில்லியனுக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்துள்ளன. இது 2008 இல் ஒபாமா பெற்ற வாக்குகளை விட அதிகம்.

❖ முன்னெப்போதும் இல்லாத வகையில், 100 மில்லியனுக்கும் அதிகமானோர் தபால் வாக்குகளைப் பதிவு செய்தனர். இந்தத் தபால் வாக்குகளில் முறைகேடுகள் நடைபெற்றதாகவே தொடக்கம் முதல் ட்ரம்ப் கூறிவருகிறார்.

❖ 2016, 2020 என இரண்டு முறையுமே, தனது இறுதிப் பிரசாரக் கூட்டத்தை ட்ரம்ப் நடத்திய மிச்சிகன் மாகாணத்தில், கடந்த தேர்தலில் அவர் வென்ற கென்ட் கவுண்ட்டி உட்பட 42 இடங்களில், ஜோ பிடன் வென்றிருக்கிறார். அதேநேரம், 2016 இல் ஜனநாயகக் கட்சியின் ஹிலாரி கிளின்டன் வென்ற ஏழு இடங்களை ட்ரம்ப் கைப்பற்றியிருக்கிறார்.

❖ ஜனநாயகக் கட்சியின் முந்தைய ஜனாதிபதியான பராக் ஒபாமாவுடன் துணை ஜனாதிபதியாக எட்டு ஆண்டுகள் பணியாற்றிய ஜோ பிடன், தனது மூன்றாவது முயற்சியில் வெற்றிபெற்றிருக்கிறார். இதற்கு முன்பாக 1988, 2008 என இரண்டு முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டும் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

❖ குடியரசுக் கட்சியின் கோட்டையாகக் கருதப்படும் ஜோர்ஜியா மாகாணத்தை, இந்தமுறை வென்றெடுத்திருக்கிறார் ஜனநாயகக் கட்சியின் ஜோ பிடன். இதற்கு முன்பு 1992 இல் ஜனநாயகக் கட்சியின் பில் கிளின்டன் வெற்றிபெற்றார். கடந்த 30 ஆண்டுகளில் இது இரண்டாவது முறை.

❖ நவம்பர் 8 ஆம் திகதி நிலவரப்படி, “அரிசோனா, பென்சில்வேனியா உள்ளிட்ட 10 மாகாணங்களில் தேர்தலில் முறைகேடு, “வாக்கு எண்ணிக்கையை நிறுத்த வேண்டும்” ஆகிய கோரிக்கைகளோடு ட்ரம்ப் தரப்பு தாக்கல் செய்த அத்தனை வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.

❖ பிரதிநிதிகள் அவை மற்றும் செனட் அவையின் கூட்டுக் கூட்டம் ஜனவரி 6ஆம் திகதி கூட்டப்பட்டு, நாடு முழுவதுமிருந்து அனுப்பப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும். அவற்றில், பெரும்பான்மைக்குத் தேவையான 270 வாக்குகளை ஒருவர் பெறும்பட்சத்தில், செனட் அவையின் தற்போதைய தலைவரான துணை ஜனாதிபதி மைக் பென்ஸ், தேர்தலில் வெற்றிபெற்றவரை அறிவிப்பார். அமெரிக்க ஜனாதிபதி, துணை ஜனாதிபதி ஆகியோர் ஜனவரி 20இல் பதவியேற்பார்கள்.

❖ தேர்வு செய்யப்பட்ட மாகாணங்களின் பிரதிநிதிகள், டிசெம்பர் 14 ஆம் திகதி ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்காக வாக்குச்சீட்டு முறையில் வாக்களிப்பார்கள். அந்த வாக்குகள் எண்ணப்பட்டு, அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு டிசெம்பர் 23 ஆம் திகதிக்குள் முடிவுகள் அளிக்கப்படும்.



❖ அமெரிக்காவில் தேர்தல் விதிமுறைகள், மாகாணத்துக்கு மாகாணம் மாறுபடும். ஆனால், டிசெம்பர் 8 ஆம் திகதிக்குள் முடிவுகளை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டும் என்பது பொதுவான விதி. ட்ரம்ப், தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத நிலையில், டிசெம்பர் 8 ஆம் திகதி வரை பொறுத்திருக்க வேண்டிய நிலை ஏற்படலாம்.

❖ கடந்த 2013இல் துணை ஜனாதிபதியாக இந்தியச் சுற்றுப்பயணம் வந்த ஜோ பிடன், மும்பை நிகழ்ச்சியில் பேசுகையில், “1972இல் நான் செனட்டராகத் தேர்வு செய்யப்பட்டபோது, “மும்பையிலிருந்து பிடன்” என்ற பெயருடன் எனக்கு ஒரு கடிதம் வந்தது. மும்பையில் ஐந்து பிடன்கள் இருக்கிறார்கள். ஐந்து தலைமுறைகளுக்கு முன்னர் என் தாத்தா கிழக்கிந்திய கம்பனியில் வேலை செய்தார். பணி ஓய்வுக்குப் பின்னர் அவர் இந்தியப் பெண் ஒருவரை மணந்துகொண்டார். எனக்கு வந்த அந்தக் கடிதம் குறித்து விசாரிக்காமல் விட்டதற்காக இப்போதுவரை வருத்தப்படுகிறேன்” என்று கூறியிருந்தார். ஆனால், பிடனின் உறவினர் என இந்தியாவில் இதுவரை யாரும் உரிமை கோரவில்லை.

❖ தேர்தலில் ஜோ பிடன் வென்றதாக அமெரிக்க ஊடகங்கள் நவம்பர் 7ஆம் திகதி அறிவித்தன. சொந்த ஊரான டெலாவரின் வில்மிங்டனில் ஜோ பிடன் பேசுகையில், “ஒன்றிணைந்த அமெரிக்காவைக் கட்டமைக்க வேண்டிய நேரமிது. ட்ரம்ப் ஜனாதிபதியாக வேண்டுமென வாக்களித்த 70 மில்லியன் பேருக்கும் சேர்த்து, அமெரிக்கர்கள் அனைவருக்குமான ஜனாதிபதியாகப் பணியாற்றுவேன்” என்றார்.

❖ அவருக்கு முன்னதாகப் பேசிய கமலா ஹாரிஸ், “துணை ஜனாதிபதியாகப் பதவியேற்க இருக்கும் முதல் பெண்ணாக நான் இருக்கலாம். ஆனால், கடைசிப் பெண் அல்ல. இன்று ரீ.வியில் பார்த்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு சிறுமிக்கும் இது புதிய வாய்ப்புகளை அளிக்கும் நாடு என்பது புரியும்” என்றார்.

❖ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட பிறகு, நவம்பர் 8 ஆம் திகதி டெலாவரிலுள்ள செயின்ட் ஜோசப் சர்ச்சுக்கு தன் மகள், பேரன் ஆகியோருடன் ஜோ பிடன் சென்றார். அதேநேரம், வோஷிங்டன் புறநகரிலுள்ள தனது கோல்ஃப் கிரவுண்டில் கோல்ஃப் விளையாடிக்கொண்டிருந்தார் ட்ரம்ப்.

❖ ஜோ பிடனின் வெற்றியை ஏற்றுக் கொள்ள ட்ரம்ப் மறுத்துவரும் நிலையில், தோல்வியை ஏற்றுக்கொள்ளுமாறு அவரின் மருமகனும், ஆலோசகருமான ஜேர்ட் குஷ்னர், மனைவி மெலனியா ஆகியோர் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

# கடல் புறா
## சீன சோதிடம்




தவிர முகப்பில் சிறியதாயிருந்த வீடு உள்ளே போகப் போகக் கட்டுக்குக் கட்டு விரிந்து நான்காவது கட்டு மிகப் பெரியதாயிருந்தபடியாலும், முதல் மூன்று கட்டுகளில் சதா அடிமைகளின் நடமாட்டம் இருந்தாலும் நான்காவது கட்டில் எது நடந்தாலும் கண்காணிப்பது நடவாத காரியமென்பதையும் தெரிந்து கொண்ட கருணாகர பல்லவன், 'இந்த அமீரின் நட்பு அநபாயருக்கு எப்படிக் கிடைத்தது?" என்று தனக்குள் எண்ணமிட்டான்.

அந்த எண்ணச்சூழலில் சிக்கிய வண்ணமே அமீர் காட்டிய மஞ்சமொன்றில் அமர்ந்து புதிதாக வந்த மனிதனை நோக்கித் தன் கண்களை உயர்த்தினான்.

அந்த மனிதனின் சின்னஞ்சிறிய கண்களும், தட்டை முகமும் சப்பை மூக்கும் அகன்று தடித்த உதடுகளும் லேசாக மஞ்சளோடிய சரும நிறமும், 'ப' என்ற எழுத்தைக் கவிழ்த்து எழுதியதுபோல தெரிந்த மீசையும் அவன் சீன நாட்டவன் என்பதைத் தெளிவுபடுத்தின.

சீன இனத்தைச் சேர்ந்ததால் மிகவும் குள்ளமாக இருக்க வேண்டிய அந்தமனிதன் அதிகக் குள்ளமாயிராமல் சுமாரான உயரத்துடனிருந்ததால் சில சமயங்களில் புகாருக்கு வரும் வட சீனாவின் மங்கோல் ஜாதியும் சீனமும் இணைந்த இரட்டை ஜாதி வகையைச் சேர்ந்தவனாயிருக்கலாம் என்று நிர்ணயம் செய்தான் இளைய பல்லவன்.

வந்த மனிதன் கைகள், பார்வைக்கு மெல்லியவையாயிருந்தாலும் எலும்புகளும், நரம்புகளும் வைரம் பாய்ந்த நல்ல உறுதியையும் பலத்தையும் காட்டியதைக் கண்டு அந்த மனிதன் பெரு வீரனாயிருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து கொண்டான்.

எல்லாவற்றையும் விட இளைய பல்லவன் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தவை அந்த மனிதனின் சின்னஞ்சிறிய கண்கள், மஞ்சள் நிறக் கன்னத்துக்கு நேரே மேலே தெரிந்த அந்த இரு சிறு கண்களும் மிகக் கூர்மையான ஈட்டி முனைகளைப் போல் பளிச்சிட்டதன்றிப் பார்ப்பதற்கு அழகாகவும் இருந்தன. ஆனால் கண்களில் துளிர்த்த அழகு பயங்கர அழகாயிருந்தது. நம்பகத்தகாத அளவுக்கு வஞ்சம் கலந்த அழகாகத் தோன்றியது இளைய பல்லவனுக்கு.

இத்தனைக்கும் அந்த மனிதனின் ஆராய்ச்சி இளைய பல்லவன் ஆராய்ச்சியைப்போல் நீண்ட நேரம் பிடிக்காமல் விநாடி நேரத்தில் முடிந்துவிட்டதையும், சற்றே அப்புறமும் இப்புறமும் திரும்பி உள்ளே நுழைந்தவர்கள் அனைவரையும் அந்தக் கண்கள் அளவெடுத்து ஒரு முடிவுக்கு வந்து விட்டதையும் அநபாயன் கவனித்தான். அந்தப் புது மனிதன் அதிகமாக நம்பத் தகுந்தவன் இல்லையென்றாலும் தங்களைப் பாலூர்ப் பெருந்துறையிலிருந்து வெளியேற்ற அவனைவிடச் சிறந்த ஒரு மனிதனைக் கண்டு பிடிப்பது கஷ்டமென்பதையும் புரிந்து கொண்ட அநபாயன், அந்தச் சீனனைவிடத் துரிதமாகத் தனது ஆராய்ச்சியை முடித்துக்கொண்டு அமீரை ஏறெடுத்து நோக்கினான்.

தன்னுடன் வந்த மூவரையும் உட்காரச் சொல்லிவிட்டு சீனனையும் அமரச் சொன்ன அமீர், தான் மட்டும் ஆசனத்தில் அமராமல் மற்றவர் முகங்களை உற்று நோக்கி அவர்கள் உள்ளத்தில் ஓடிய எண்ணங்களைப் புரிந்து கொண்டானானாலும் அதை வெளிக்குக் காட்டாமல், அநபாயனை நோக்கி, "அநபாயரே! இவரை நீங்கள் அறியமாட்டீர்கள். இவர் என் குருநாதர்" என்று அந்தச் சீனனுக்கும் தனக்குமுள்ள உறவை விளக்கினான்.

இதைக் கேட்ட அந்த சீனன் தன் முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் தலை தாழ்த்தி அநபாயனுக்கு வணக்கம் செலுத்தினான். அநபாயனும் பதிலுக்குத் தலை தாழ்த்தி வணங்கினானாலும் அவன் முகத்தில் வியப்பின் குறி பெரிதும் படரலாயிற்று.

வந்த மனிதன் எத்தனை அசகாய சூரனாயிருந்தாலும் அவன் வயதில் தன்னையும் கருணாகரனையும் விடக் கொஞ்சமே அதிகமென்பதையும் அப்படியிருக்கப் பாதி வயதைத் தாண்டியுள்ள அமீருக்கு அவன் எந்தவிதத்தில் குருவாயிருக்க முடியுமென்பதையும் அறியாததால் அந்த வியப்பு குரலிலும் பாயக் கேட்டான் "இவர் உன் குருவா?" என்று.

அநபாயன் வியப்பைக் கவனிக்கத் தவறாத அமீர் "வியப்படையக் காரணமிருக்கிறது அநபாயரே! இந்த வாலிபர் எப்படி எனக்கு குருவாயிருக்க முடியும் என்று எண்ணுகிறீர்கள். வயதைக் கண்டு இவரை எடை போடாதீர்கள். முதிர்ச்சி அனுபத்திலிருக்கிறது" என்றான்.

"எதில் அனுபவம் இருக்கு?" என்று சம்பாஷணைக்குள் புகுந்தான் கருணாகர பல்லவன்.

"மரக்கலப் போரில் இவரிடம் தான் நான் மரக்கலம் ஓட்டும் பயிற்சியையும், மரக்கலங்களைப் போரில் நடத்தும் முறைகளையும் பயின்றேன்" என்றான் அமீர்.

"எப்பொழுது பயின்றாய் அமீர்?" என்று அநபாயன் வினவினான்.

"சீன நாட்டில் அடிமையாயிருந்த போது" என்று பதிலளித்தான் அமீர்.

"இவருக்கு அப்பொழுது வயது என்ன இருக்கும்?" இப்படி எழுந்தது கருணாகர பல்லவனின் கேள்வி.

"சுமார் பதினைந்து இருக்கலாம்" அமீரின் பதில் திட்டமாக வெளிவந்தது.

"அமீர் உண்மையைத்தான் சொல்லுகிறானா? அல்லது ஏதாவது கதை திரிக்கிறானா? பதினைந்து வயது சிறுவனாவது, மரக்கலம் நடத்துவதாவது! நடக்கிற காரியமா?" என்று உள்ளுக்குள்ளேயே எண்ணமிட்ட அநபாயனின் முகத்திலிருந்தே விடயத்தைப் புரிந்து கொண்ட அமீர், தொடர்ந்து சொன்னான்: "அநபாயரே! இந்த வாலிபன் இந்த இளவயதில் மரக்கலத்தை நடத்தும் திறமை வாய்ந்திருப்பதைக் கண்டு பிரமிக்க வேண்டாம்.

சின்னஞ்சிறு வயதிலிருந்தே சீனத்துக் குழந்தைகள் நாட்டுக்குத் தேவையான தொழில்களிலெல்லாம் பயிற்சியளிக்கப்படுகிறார்கள். வயது வந்த மாலுமிகள் எட்டு பத்து வயதுச் சிறுவர்களைத் தங்களுடன் படகுகளில் ஏற்றிக்கொண்டு பெரும் அலைகளும் சூழல்களும் உள்ள சீனக்கடலில் ஓடுவதை நீங்கள் இன்றும் பார்க்கலாம்.

அந்தச் சிறுவர்கள் படகுகளைச் செலுத்துவதும் சீனக் கடலில் சர்வசாதாரணக் காட்சி இருபது வயதுக்குள் திறமையுள்ள மாலுமிகளாகத் திகழும் கடலோடிகள் சீனாவில் மிக அதிகம். அத்தகைய மாலுமிகளில் தலை சிறந்தவர் என் நண்பர். பத்து வருடங்களுக்கு முன்பு நான் சீன நாட்டு வர்த்தகனிடத்தில் அடிமையாயிருந்த போது என்னை விலைக்கு வாங்கியதன்றி, தமது மரக்கலத்தில் என்னை ஏற்றிச் சென்று மரக்கலமோட்டும் பயிற்சியையும் அளித்தார்.

இந்த வயதிற்குள் அவர் செய்துள்ள வாணிபம் பலத்தது. இவர் செய்துள்ள கடற்போர்கள் பல. இந்த அடிமை அவற்றில் பங்கு கொண்டிருக்கிறேன். இவர் பெயரை அறியாத கடலோடி அரபு நாட்டிலிருந்து சீனம் வரை யாருமே இல்லை."

இந்த வார்த்தைகளை உணர்ச்சி ததும்பப் பேசினான் அமீர். அந்தச் சீனநாட்டவன் கதையை அவன் சொல்லிக்கொண்டுபோன சமயத்தில் அவன் பயங்கரமான விழிகள் கிட்டத்தட்ட கண்ணீர் மல்கும் நிலையை அடைந்து விட்டதையும் குரல்கூடஅதிகம் தழுதழுத்து விட்டதையும் கவனித்த அநபாயனும், கருணாகர பல்லவனும், காஞ்சனா தேவியும்கூட அவன் உள்ள நெகிழ்ச்சியையும், சீன நாட்டவனிடம் அவனுக்கிருந்த பக்தியையும் கண்டு பிரமிப்படைந்தார்கள்.

இத்தனைக்கும் அந்தச் சீனத்தான் முகத்தில் மட்டும் உணர்ச்சி ஏதுமில்லை. ஏதோ சாதாரண விடயம் பேசப்படுவதுபோல அதைப் பற்றிச் சிறிதும் சட்டை செய்யாத அந்த முகத்திலிருந்த சிறிய கண்கள் மட்டும் விஷமத்துடன் இருமுறை அசைந்தன. மிக மெல்லியதாய் இருக்கிறதோ அல்லவோ வென்று சந்தேகப்படும்படியாய் இருந்த அவன் புருவங்களிரண்டும் சிறிது சுருங்கின.


மேற்கொண்டு ஏதோ சொல்லப்போன அவரை ஏதும் பேச வேண்டாமென்பதற்கு அறிகுறியாக அவன் மெல்லிய வலது கரம் எழுந்து தடை செய்தது. "என் புராணம் போதும் அமீர். நாம் செய்ய வேண்டியது என்னவென்பதைப் புரிந்துகொள்வோம்" என்று அதிகாரத் தோரணையில் சொற்களை அவன் உதடுகள் உதிர்த்தன.

அதற்கு மேலும் பேசாதிருப்பது மரியாதைக்கு அறிகுறியாகாது என்று நினைத்த அநபாயன், "சீனத்தில் இந்த வயதில் இத்தனை சிறந்த மாலுமியிருப்பது மகிழ்ச்சியைத் தருகிறது. தங்கள் புராணத்தை அமீர் சொன்னதில் தவறு இல்லை. புராணம் சுவையாகத்தானிருக்கிறது" என்றான்.

(தொடரும்...)

# விஜய் அரசியல்

## தந்தை–மகன் உறவில் விரிசல்



**பொ**துவாக தீபாவளிக்கு விஜயின் படங்கள்தான் பட்டாசு கிளப்பும். இந்தத் தீபாவளிக்கு அவர் குடும்ப விவகாரம் வெடித்துக் கிளம்பியிருக்கிறது. தேர்தல் ஆணையத்தில், 'அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம்' என்று எஸ்.ஏ.சி.கட்சியைப் பதிவு செய்ததை யாருமே எதிர்பார்க்கவில்லை. தகவல் வெளியானதுமே இதைக் கடுமையாக ஆட்சேபித்து, 'எனக்கும் என் தந்தை பதிவு செய்திருக்கும் கட்சிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை' என்று சீறினார் விஜய். இன்னொரு பக்கம் விஜயின் தாய் ஷோபா, 'என்னைக் கட்டாயப்படுத்தி, ஏமாற்றி கையெழுத்து வாங்கிவிட்டார்' என்று கண்களைக் கசக்க பஞ்சாயத்து நீண்டு கொண்டிருக்கிறது.

### அரசியலின் ஆரம்பப்புள்ளி!

"விஜயின் ஆரம்பகால சினிமா பயணம், சந்திரசேகரின் கடின உழைப்பாலேயே தொடக்கி வைக்கப்பட்டது. 1992இல் வெளியான 'நாளைய தீர்ப்பு' படத்தில் ஆரம்பித்து, 1995இல் வெளியான 'விஷ்ணு' வரை, ஐந்து படங்களை மகனுக்காக இயக்கி, விஜயின் முகத்தை தமிழக மக்களின் மனதில் பதியவைத்தார் சந்திரசேகர். 'நாளைய தீர்ப்பு' வெளியானவுடன், ஈரோட்டைச் சேர்ந்த மோகன்ராஜ் என்பவர் தான் முதன்முதலில் விஜய் நற்பணிமன்றத்தை ஈரோட்டில் தொடங்கினார்.

சாலி கிராமத்தில் இசையமைப்பாளர் விஜய் ஆண்டனி தற்போது குடியிருக்கும் சந்திரசேகருக்குச் சொந்தமான் வீட்டில்தான் வாரம்தோறும் ரசிகர் சந்திப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாவட்ட வாரியாக ரசிகர்களைச் சந்தித்து விஜய் பேசுவார். அவர்களுடன் உணவருந்துவார், போட்டோ எடுத்துக் கொள்வார். விஜயின் பிறந்த நாளுக்கு இலவச கொப்பி, புத்தகங்களை மாணவர்களுக்கு வழங்கச் சொல்வார் சந்திரசேகர். அவரது எதிர்கால அரசியல் திட்டத்தின் ஆரம்பப் புள்ளியும் இங்குதான் தொடங்கியது.

2006இல் தி. மு.க. ஆட்சி அமைந்த பிறகு திரையுலகம் கருணாநிதியின் குடும்பக் கட்டுப்பாட்டுக்குச் சென்றது. சன் பிக்சர்ஸ், ரெட் ஜெயிண்ட் மூவிஸ், க்ளவுட் நைன் மூவிஸ் என்று தி.மு.க வாரிசுகள் துறையை ஆக்கிரமித்திருந்தார்கள். 'போக்கிரி' படத்துக்குப் பிறகு பெரிய வெற்றியைப் பெறாமல் விஜய் துவண்டிருந்தபோது 2008, நவம்பரில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக சென்னை சேப்பாக்கத்தில் அடையாள உண்ணாவிரதத்தை விஜயை வைத்து நடத்தினார் சந்திரசேகர்.

### தி.மு.கவுடன் மோதிய எஸ்.ஏ.சி!

2009ஆம் ஆண்டு, சென்னை தீவுத்திடலில் பெரிய மாநாடு நடத்தி, விஜயை அரசியலுக்குள் அழைத்து வரத் தயாரானார் சந்திரசேகர். தீவுத்திடலுக்கான அட்வான்ஸ் பணமும் செலுத்தப்பட்டது. மாநாட்டு ஏற்பாடுகளை மன்றத்தின் மாநிலத் தலைவர் ஜெயசீலன் செய்தார். எங்கேயிருந்து வந்த அழுத்தமோ, திடீரென மாநாடு இரத்தானது. இதற்கிடையே விஜயை வைத்து தி.மு.க. குடும்பம் தயாரித்த 'வேட்டைக்காரன்', 'சுறா', 'குருவி' ஆகிய படங்களும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இருதரப்புக்கும் உரசல்கள் எழுத் தொடங்கின.

அந்தக் காலகட்டத்தில் சினிமா தியேட்டர்களையும் கட்டுப்படுத்தி வந்த தி.மு.க. தலைவரின் குடும்பம், 2011, ஜனவரியில் 'காவலன்' படத்தை வெளியிடுவதற்கு 170 இற்கும் குறைவான தியேட்டர்களையே ஒதுக்கியது. கொதித்துப் போனார் சந்திரசேகர்.

### கைமாறிய அதிகாரங்கள்!

"2011ஆம் ஆண்டுவரை, மன்றம் தொடர்பாக விஜயை யார் சந்திக்க வந்தாலும், 'அப்பாவைப்பாருங்க...' என்று கூறிய விஜய், பிறகு 'புஸ்ஸி ஆனந்தைப் பாருங்க...,'என்று சொல்லத் தொடங்கினார். 'சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. ஜெயித்ததே விஜய் மன்றத்தால் தான்' என்கிற ரீதியில் சந்திரசேகர் கூறியது ஜெயலலிதாவை உஷ்ணமாக்கியது. இதனால், விஜயின் படங்களுக்குப் பிரச்சினைகள் முளைக்கத் தொடங்கின.

'இத்தனை பிரச்சினைகளுக்கும் அப்பாதான் காரணம். அவர் அப்படிப் பேட்டி கொடுத்ததால்தான் உங்கள் படத்தை எதிர்க்கிறாங்க' என்று சிலர் விஜயிடம் கூறினர். இது அப்பா - மகன் உறவில் விரிசலை அதிகப்படுத்தியது. விஜயின் கால்ஷீட், சம்பளம் உள்ளிட்டவை சந்திரசேகரிடமிருந்து விஜயின் மேலாளர்கள், உறவினர் சேவியர் பிரிட்டோ உள்ளிட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பனையூரிலுள்ள விஜய் வீட்டுக்கு சந்திர்சேகர் சென்றால்கூட, தனது அறையிலிருந்து வெளியே வராமல் இருப்பாராம் விஜய். இரண்டு மணிநேரத்துக்கும் மேலாகக் காத்திருந்து விட்டு, மகனைச் சந்திக்க முடியாமலேயே திரும்பி வந்த சம்பவங்களும் நடந்திருக்கின்றன. இதற்கிடையே, சந்திரசேகருக்கு நெருக்கமானவர்கள் பலரும் மன்றத்திலிருந்து ஓரங்கட்டப்பட்டனர்

ஒன்றரை மாதத்துக்கு முன்பு, கன்னியாகுமரியிலுள்ள ஒரு தனியார் ஹோட்டலில் மன்றத்திலிருந்து நீக்கப்பட்ட சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் ஒன்றுகூடி ரகசியக் கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். தனிக்கட்சி தொடங்குவது குறித்து அந்தக்கூட்டத்தில் தீவிரமாக விவாதிக்கப்பட்டிருக்கிறது. வீடியோ கோல் மூலமாக கூட்டத்தில் கலந்து கொண்ட சந்திரசேகர், கட்சியைக் கட்டமைக்கும் பணியை ஒவ்வொரு மாவட்டத்திலும் செய்யச் சொல்லியிருக்கிறார். இந்த விடயத்தைக் கேள்விப்பட்டு ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று விட்டாராம் விஜய்.

### விஜய் டார்கெட் 2026!

ஆனால், விஜயின் கணக்கோ வேறு மாதிரியாக இருக்கிறது. தற்போது ஒரு படத்துக்கு சுமார் 70-80 கோடி ரூபாய் சம்பளமாகப் பெறுகிறார் விஜய். வருடத்துக்கு இரண்டு படங்கள். இது தவிர ஏரியா உரிமை உள்ளிட்ட சில பல வருமானங்கள், இதர பிசினஸ்கள். இவற்றையெல்லாம் கணக்கிட்டால் ஐந்து ஆண்டுகளில் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் வருகிறது. இந்த வருமானத்தைக் கெடுத்துக் கொள்ள வேண்டுமா? என்பதுதான் விஜயின் கேள்வி.

விஜய்க்கு அரசியல் ரீதியாக ஆலோசனை அளிக்க ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி, வருமான வரித்துறையின் முன்னாள் அதிகாரி உள்ளிட்டோரைக் கொண்ட டீம் ஒன்று இருக்கிறது. இந்த டீமில் விஜய்க்கு நெருக்கமான நண்பர்கள் சிலரும் இருக்கிறார்கள். "தனது மகனைச் சுற்றி நால்வர் அணி விஷமாகச் செயற்படுகிறது" என்று சந்திரசேகர் குறிப்பிட்டது புஸ்ஸி ஆனந்த் உள்ளிட்ட இந்த டீமை மையப்படுத்தித்தானாம்.

இந்த டீம் தான் விஜயிடம், "தமிழ் சினிமாவில் இன்று நீங்கள்தான் நம்பர்வன். ரஜினியும் ஆக்டிவ்வா இல்லாததால், குறைந்தது ஐந்து வருடத்தில் இன்னும் நீங்க டொப்ல போகலாம். இப்போ அரசியலுக்கு வந்தால் உங்களால வாக்குகளைத் தான்பிரிக்க முடியுமே தவிர, ஜெயிக்க முடியாது. தி.மு.க., அ.தி.மு.க. மாதிரி தமிழ்நாடு முழுவதும் உறுதியான கட்டமைப்பும் உங்களுக்குக் கிடையாது. இப்போது அரசியலில் இறங்கினால், இதுவரை சம்பாதித்த பணத்தையெல்லாம் வாரி இறைத்து வீணாப் போயிடும். தவிர, அரசியல் சாயம் ஏறினாலே, சினிமா சான்ஸ் குறைஞ்சுடும். வருமானமும் கையைவிட்டுப் போய்விடும்.

வருகிற அஞ்சு வருஷத்துல சினிமா படங்கள் மூலம் அரசியலுக்கான பேஸ்மென்ட்டை வலுவாக்கிக்கிட்டு, மாநிலம் முழுக்க ஒரு கிராமம் விடாமல் இயக்கத்தின் கட்டமைப்பையும் பலப்படுத்திவிட்டு, 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு அரசியல்ல நுழையலாம்" என்று அட்வைஸ் செய்திருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான், சந்திரசேகர் ஆரம்பித்துள்ள கட்சிக்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று காட்டமான அறிக்கை விஜயிடமிருந்து வெளிவந்திருக்கிறது.

### கட்சிப் பதிவு வாபஸ்?

இதற்கிடையே நவம்பர் 8 ஆம் திகதி, சந்திரசேகரும் விஜயும் வீடியோ காலில் பேசினார்கள் என்று கூறப்படுகிறது. இதற்கான ஏற்பாட்டை ஷோபா செய்தாராம். அப்போது, தேர்தல் ஆணையத்தில் சமர்ப்பித்துள்ள விண்ணப்பத்தை வாபஸ் வாங்கும்படி விஜய் கூறினாராம். அதற்கு சந்திரசேகர், "வாபஸ் வாங்குகிறேன். அதற்கு முன்பு ஆனந்த் உட்பட சிலரைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். பழையவர்களுக்கு மீண்டும் பொறுப்பு தரப்பட வேண்டும்" என்று கண்டிஷன் வைத்திருக்கிறார். டென்ஷனான விஜய், "முதலில் வாபஸ் வாங்குங்கள். பிறகு பார்க்கலாம்" என்று சொல்லியிருக்கிறார்.

விஜய் எனும் பெரும் பிம்பத்தை படிப்படியாகக் கட்டமைத்தவர், அரசியல் அறுவடைக்கு ஆசைப்படுகிறார். ரத்தமும் சதையுமாக, பாசமும் நேசமுமாக இருந்த எத்தனையோ உறவுகளை கூறு போட்ட வரலாறு கொண்டது தமிழக அரசியல்.


எஸ்.ஏ.சி-யும் விஜயும் மட்டும் விதிவிலக்கா என்ன?

**ஜூனியர் விகடன்**

# செவ்வாய் கிரகத்தின் அதிசய சிறுவன்!

ரஷ்யாவின் 'வொல்கோகிராட்' (Volgograd) என்னும் ஊரில் வசிக்கும், 'கிப்ரியானோவிச்' (Kipriyanovich) தம்பதியருக்கு, 1996 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி, 'பொரிஸ்கா' (Boriska) பிறந்தான். பெற்றோர் இருவரும் படித்த, வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பொரிஸ்காவின் தாய் 'நடேஷ்டா' (Nadezhda) ஒரு மருத்துவர். குழந்தை பிறந்ததில் மகிழ்ச்சியாக உணர்ந்தனர்.

**செவ்வாயின் மேற்பரப்பில் யாரும் வாழ முடியாத நிலை ஏற்பட்டதால், தரையின் கீழே நகரங்களை அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பூமியில் பிறப்பதற்காக நான் அனுப்பி வைக்கப்பட்டேன். நான் மட்டுமல்ல, என் போன்ற பலர் பூமியில் பிறந்திருக்கிறார்கள்**



பிறந்து மிகச் சரியாகப் பதினைந்தாம் நாள், ஆச்சர்யமொன்று நடந்தது. மேலே பார்த்த படி நிமிர்ந்து படுத்திருந்த குழந்தை, திடீரென வயிற்றுப் புறமாக உடம்பைப் புரட்டி, தலையை உயர்த்தித் தாயைப் பார்த்தது. மிரண்டே போனார் நடேஷ்டா. பதினைந்து நாள் குழந்தையால் அப்படித் திரும்பவோ, தலையை நிமிர்த்தவோ முடியாது. அதைப் போட்டோவாக எடுத்துக் கொண்டார். பின்னர், 'இது தற்செயலாக நடந்திருக்கிறது' என்றே நினைத்தார். ஆனால், 'செவ்வாயிலிருந்து வந்தசிறுவன்' என்று உலகம் முழுவதும் தன் குழந்தை அறியப்படப் போகிறானென்பது அன்று அவருக்குத் தெரிந்திருக்கவில்லை.

குழந்தை பொரிஸ்கா வளர ஆரம்பித்தான். 'சாதாரணக் குழந்தைகளிடம் இல்லாதவை இவனிடம் இருக்கின்றன' என்று பெற்றோருக்குத் தோன்றும் படியாக அவன் நடவடிக்கைகள் இருந்தன. நான்காவது மாதத்தில் அடுத்த பிரமிப்பை ஏற்படுத்தினான் பொரிஸ்கா. 'அப்பா' என்று ரஷ்ய மொழியில் அர்த்தம் தரும் 'பாபா' (Baba) எனத் தந்தையைப் பார்த்து அழைத்தான். அவரால் அதை நம்பவே முடியவில்லை.

நான்கு மாதக் குழந்தை சொற்களை உச்சரிக்கு மென்று அவர் கேள்விப்பட்டதே இல்லை. பொரிஸ்காவின் நடவடிக்கைகள் இது போலவே தொடர்ந்தன. விதவிதமாக ஆச்சர்யப்படுத்தினான். வொல்கோகிராட் நகரெங்கும் பொரிஸ்கா பற்றிய பேச்சுகள் பரவின. அடுத்ததாகத் தன் எட்டாவது மாதத்தில் முழு வசனமொன்றைப் பேசினான். சுவரில் அறையப்பட்டிருந்த ஆணியைப் பார்த்த படி, "எனக்கு அந்த ஆணி வேண்டும்" என்று கூறினான்.

எட்டு மாதக் குழந்தையால் இப்படிப்பேச முடியாது. ஆணி எனும் சொல் அவன் கேட்டே அறியாதது. இவன் சாதாரணமான குழந்தையே கிடையாது. 'இவன வேற மாதிரி' என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள். அன்றிலிருந்து பொரிஸ்காவின் ஆட்டங்கள் அட்டகாசமாக ஆரம்பமாகின. ஒரு வயதில் செய்தித் தாள்களைப் படித்தான். இரண்டு வயதில் ரஷ்ய மொழியைப் பேசவும், எழுதவும் முடிந்தது. சித்திரங்களையும் வரைந்தான். மூன்று வயதில் சூரியக் குடும்பக் கோள்களையும், அவற்றின் விபரங்களையும் சொல்ல ஆரம்பித்தான். இந்த இடத்தில் நீங்கள் ஒன்றை கவனிக்க வேண்டும்.

சூரியக் குடும்பக் கோள்களின் விவரங்களை, பொரிஸ்காவுடன் யாரும் பேசியதுமில்லை, எங்கும் அவன் படித்ததுமில்லை. அந்த விபரங்களைப் பெற்றுக் கொள்ளும் வயதும் அவனுக்கு இருக்கவில்லை. புத்தகங்களைப் படிக்கக் கொடுத்தோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தோ இப்படிப் பேசுவதாகவுமில்லை. எப்படியோ அந்த விவரங்களை அறிந்து வைத்திருந்தான்.

அது எப்படி? பொரிஸ்காவின் பெற்றோருக்கு ஒன்றும் புரியவில்லை. தங்கள் மகன் ஒரு விசேஷக் குழந்தை என்பதைத் திடமாக நம்பினார்கள். பொரிஸ்காவின் புகழ் சுற்றுப் புறமெங்கும் பரவியது. உச்சிக் கோபுரத்தில் கலசம் வைத்தாற் போல் அந்தச் சம்பவமும் நடந்தது.

2003 ஆம் ஆண்டு பொரிஸ்காவின் குடும்பமும், உறவினர்களும் காட்டு வெளியொன்றில் கூடாரம் அமைத்துத் தங்குவதற்குச் சென்றார்கள். அப்போது பொரிஸ்காவுக்கு வயது ஏழு. கூடாரங்களுக்கு நடுவே, கதகதப்புக்காக எரிய விடப்பட்ட நெருப்பைச் சுற்றி அனைவரும் அமர்ந்திருந்தார்கள். அப்போது திடீரென எழுந்த பொரிஸ்கா, எல்லோரையும் அமைதியாக இருக்கும் படி கூறினான். முகத்தில் இறுக்கமும் கடுமையும் காணப்பட்டன.

அனைவரும் அமைதியானார்கள். பொரிஸ்கா பேச ஆரம்பித்தான். "போன பிறப்பில் நான் செவ்வாய்க் கோளில் வாழ்ந்தேன். அங்கு நடந்த அணுவாயுதப் போரால் செவ்வாய்க் கோள் முழுவதும் அழிந்து போனது. உயிர்கள் வாழ முடியாதவாறு மாறியது. இப்போதும் செவ்வாயில் அவர்கள் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். கதிர் வீச்சால் செவ்வாயின் மேற்பரப்பில் யாரும் வாழ முடியாத நிலை ஏற்பட்டதால், தரையின் கீழே நகரங்களை அமைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பூமியில் பிறப்பதற்காக நான் அனுப்பி வைக்கப்பட்டேன். நான் மட்டுமல்ல, என் போன்ற பலர் பூமியில் பிறந்திருக்கிறார்கள்" என்று பேச்சை நிறுத்திக் கொண்டான்.

அங்கிருந்தவர்கள் எவருக்கும் பேச்சு வரவில்லை. இந்த ஏழு வயதுச் சிறுவன் சொல்வதை எப்படி எடுத்துக் கொள்வது... எந்த அடிப்படையில் இவன் இப்படிப் பேசுகிறான்... செவ்வாய்க் கோளை எப்படி அறிந்து கொண்டான்... இத்தனை விபரங்களை எப்படிச் சொல்கிறான்... கனவு கண்டானா... யாரும் இவனுக்குச் சொன்னார்களா.. பாலர் வகுப்பின் ஆசிரியர்கள் பேசியதைக் கேட்டானா... எதுவும் புரியவில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். 'செவ்வாய் சம்பந்தமான எந்த விபரத்தையும், எந்த வழியிலும் பொரிஸ்கா தெரிந்திருக்கச் சாத்தியமே இல்லை' என்பது தான் அது.

உயிரினமே வாழ முடியாத செவ்வாய்க் கோளின் சூழலை இந்தச் சிறுவன் எப்படி அறிந்திருக்க முடியும்? அழுத்தம் திருத்தமாக இவ்வளவையும் சொல்கிறானே! இவன் சொல்வதில் உண்மை இருக்கலாமோ? அனைவரின் மனத்திலும் பலவித சந்தேகங்கள் தோன்றின. பொரிஸ்கா சிறப்பம்சம் கொண்ட சிறுவனாக உருவெடுத்தான். ரஷ்யாவெங்கும் அவனைப் பற்றிய பேச்சு பரவத் தொடங்கியது.

பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள் என அனைத்து ஊடகங்களும் பொரிஸ்கா வீடு நோக்கி வரிசை கட்டின. பேராசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும் கேள்விகளால் அவனைத்துளைத் தெடுத்தனர். ஒவ்வொருவருக்கும் தலை குனிந்து வெட்கச் சிரிப்புடன் பதில் சொன்னான் பொரிஸ்கா.

செவ்வாய்க் கோளில் வசித்தவர்கள் 35 வரை வயதாகி, பின்னர் வயதேயாகாமல் நின்று விடுகிறார்கள். அப்புறம் என்றும் 35 வயது தான். பூமியின் மனிதர் போல உருவ அமைப்பு இருந்தாலும், நிறையவே வேற்றுமைகள் இருந்தன. ஏழடிக்கு மேல் உயரமானவர்கள். ஒட்சிசனை சுவாசிப்பதில்லை. பதிலாக, காபனீரொட்சைட்டை சுவாசிப்பார்கள். அறிவு, தொழில்நுட்பம், ஆற்றல் அனைத்திலும் சிறந்தவர்கள். பயணம் செய்வதற்கு மூன்று வித விண்கலங்களைப் பயன்படுத்தினார்கள். விமானங்கள் போலவும், முக்கோண வடிவிலும், கோள வடிவிலும் அவை இருந்தன. பிறகோள்களுக்கும், காலக்ஸிகளுக்கும் விண்கலங்கள் மூலம் பயணம் செய்வார்கள். பிளாஸ்மா சக்தியால் அவை இயங்கின. நானும் விண்கலம் செலுத்தும் விமானியாகவே இருந்தேன்.

இவையெல்லாம் பொரிஸ்கா ஊடகங்களுக்குக் கொடுத்த தகவல்கள். "செவ்வாய்க் கோளில் வசித்தவர்கள் அறிவாளிகளாக இருந்தும் போரால் அழிந்தார்கள். செவ்வாய்க் கோளையும் அழிவுக்குள்ளாக்கினார்கள். அது போல பூமியையும் அழியாமல் காப்பாற்றவே எங்களை இங்கு அனுப்பினார்கள்" என்கிறான் பொரிஸ்கா.

"பூமியின் மனிதர்களும், செவ்வாய் வாசிகள் போலத் தப்புப் பண்ணுகிறார்களா?" என்று கேட்ட போது, "யாரையும் தப்பாகப் பேசக் கூடாது" என்று தலை குனிந்த படி சொல்கிறான். "அப்படியென்றால் பூமியில் நாங்கள் என்ன தான் செய்ய வேண்டும்?" என்று கேட்ட போது, "எகிப்திலிருக்கும் பிரமாண்டமான ஸ்பிங்க்ஸ் (Sphinx) சிலையின் காதின் பின்னால் திறக்கக் கூடிய பொறிமுறை ஒன்று உள்ளது. அதைத் திறந்து பார்த்தால், மனித இனத்துக்கான விடிவு கிடைத்து விடும்" என்கிறான். இந்தச் சிறுவனுக்கு எப்படி ஸ்பிங்க்ஸ் சிலையைத் தெரியும் என்று பிரமித்த படி உறைந்து போயின ஊடகங்கள். "இவையெல்லாம் உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்கவும் செய்தார்கள். அதற்கு அவன் கூறிய பதில் அதிர்ச்சிகரமானது.

செவ்வாயிலிருந்து பல தடவை பூமிக்குத் தான் வந்ததாகவும், அப்படி வரும் போது எகிப்தின் பிரமிடுகள் கட்டப்பட்டதாகவும் சொன்னான். பூமியில் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் லெமூரியா எனும் நிலப்பரப்பு இருந்ததாகவும், அது நீரில் மூழ்கி விட்டதாகவும், லெமூரியாவில் தனக்கொரு நண்பன் இருந்தானென்றும், தன் கண் முன்னே அவன் கொல்லப்பட்டதாகவும் சொல்லித் திகைக்க வைக்கிறான் பொரிஸ்கா.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதான லெமூரியாவுக்கும், சில. ஆயிரம் ஆண்டுகள் வயதுடைய பிரமிடுகளுக்கும் அவன் பயணம் செய்திருப்பது பெரும் குழப்பத்தைத் தரும்.

அவ்வளவு ஆண்டுகள் அவன் செவ்வாயில் வாழ்ந் திருக்கிறானா அல்லது காலத்துக்கான அவர்கள் கணிப்பே வேறானதா? இப் போது உங்களுக்கு, 'இது உளறலின் உச்சம்' என்பதாகத் தான் தோன்றும். 'ஒரு சிறுவன் மூலம் சிலர் ஆடும் மலின நாடகத்தை, எப்படி நம்புவது?' என்று கேட்பீர்கள். ஆனால், பொரிஸ் காவை உலகம் முழுவதும் அறியும்.

பலர் பல விதங்களில் அவனைப் பரிசோதித்திருக்கிறார்கள். 'லைடிடெக்டர்' கூடப்பயன்படுத்தப்பட்டது. ஆனால் பொரிஸ்கா உண்மையைப் பேசுவதா கவே முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.

இதைக் கேட்டுக் கேலி செய்பவர்களும் இல்லாம லில்லை. 'என்ன ஒளிந்திருக்கிறது அங்கே?' என்பது மட்டும் சரியாகத் தெரியவில்லை.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : படிக்காத மேதை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : கே.வி.மகாதேவன்
பாடியவர்கள்: ரி.எம்.சௌந்தரராஜன், சூலமங்களம் ராஜலஷ்மி



ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா
ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா
ஒரே ஒரு ராஜாவுக்கு ஒரே ஒரு ராணி
ஒரே ஒரு ராஜாவுக்கு ஒரே ஒரு ராணி
ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

ஒரே ஒரு ராணி பெற்றால் ஒன்பது பிள்ளை
ஒரே ஒரு ராணி பெற்றால் ஒன்பது பிள்ளை
அந்த ஒன்பதிலே ஒன்று கூட உருப்படியில்லை
அந்த ஒன்பதிலே ஒன்று கூட
உருப்படியில்லை... உருப்படியில்லை

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

படிச்சிருந்தும் தந்தை தாயை மதிக்க மறந்தான்
ஒருவன் படுக்கையிலே முள்ளைவச்சி பார்த்து மகிழ்ந்தான்
படிச்சிருந்தும் தந்தை தாயை மதிக்க மறந்தான்
ஒருவன் படுக்கையிலே முள்ளைவச்சி பார்த்து மகிழ்ந்தான்
பிடிச்ச முயல் அத்தனைக்கும் மூன்று காலென்றான்
பிடிச்ச முயல் அத்தனைக்கும் மூன்று காலென்றான்
ஒருவன் பெண்டாட்டியின் கால்களுக்கு
காவலிருந்தான்... காவலிருந்தான்

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா
ஒரே ஒரு ராஜாவுக்கு ஒரே ஒரு ராணி
ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்
அதை பிள்ளைக்குமேல் கண்களைப்போல் காத்து வளர்த்தார்
பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்
அதை பிள்ளைக்குமேல் கண்களைப்போல் காத்து வளர்த்தார்

உண்மை அன்பு சேவை என்ற மூன்றும் கொடுத்தார்
உண்மை அன்பு சேவை என்ற மூன்றும் கொடுத்தார்
அதன் உள்ளத்திலே வீடு கட்டி தானும் இருந்தார்
அதன் உள்ளத்திலே வீடு கட்டி
தானும் இருந்தார்... தானும் இருந்தார்
ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

சொந்தம் என்று வந்ததெல்லாம் சொந்தமும் இல்லை
ஒரு துணையில்லாமல் வந்ததெல்லாம் பாரமும் இல்லை
சொந்தம் என்று வந்ததெல்லாம் சொந்தமும் இல்லை
ஒரு துணையில்லாமல் வந்ததெல்லாம் பாரமும் இல்லை
நன்றியுள்ள உயிர்களெல்லாம் பிள்ளைதானடா
நன்றியுள்ள உயிர்களெல்லாம் பிள்ளைதானடா
தம்பி நன்றிகெட்ட மகனை விட நாய்கள் மேலடா
நன்றிகெட்ட மகனை விட நாய்கள் மேலடா... நாய்கள் மேலடா

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா
ஒரே ஒரு ராஜாவுக்கு ஒரே ஒரு ராணி
ஒரே ஒரு ராணி பெற்றால் ஒன்பது பிள்ளை
அந்த ஒன்பதிலே ஒன்று கூட
உருப்படியில்லை... உருப்படியில்லை

ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

# "நான் கொரோனா பேசுகிறேன்"


நான் தான் கொரோனா, கொவிட்-19.

ஏ அகந்தை மனிதா! பூமி அழிவின் விளிம்பிற்குச் சென்று கொண்டிருக்கிறது.

இதை உன் காதுக்குள் சொன்னேன். உனக்கு அது கேட்கவில்லை, பூமி உரத்துச் சொல்லிற்று, அதையும் நீ கேட்கவில்லை. பூமி கதறியது.

அதற்கும் நீ மசியவில்லை. ஆகவே நான் கொவிட்-19, பிறப்பெடுத்துள்ளேன்.

நான் பிறந்தது உன்னைத் தண்டிக்க வல்ல, உன்னை விழிப்படையச் செய்யவே.




நான் பிறந்தேன் கேள்! பூமி உதவி கேட்டு கதறியது. பெரும் வெள்ளப் பெருக்குகள்.

நீ கண்டு கொள்ளவில்லை. பெரும் தீப்பிழம்புகள்.

அதையும் நீ கண்டு கொள்ளவில்லை. ஆபத்தான புயல் காற்றுக்கள்.

அதையும் நீ கண்டு கொள்ளவில்லை. அழிவைத் தரும் சுழல் காற்றுகள்.

நீ அதையும் கண்டு கொள்ளவில்லை. சமுத்திரம் வாழ் மிருகங்கள்.

அசுத்த நீரால் செத்து மடிகின்றன. பனிப்பாறைகள் பயங்கர வேகத்தில் உருகி அழிகின்றன. கடும் வரட்சி, மழையின்மை.

இவைகளைக் கண்டும் நீ கருத்தில் எடுக்கவில்லை. உன் சுய நலமே உனக்கு பெரிதாகத் தெரிந்தது.

எனவே நான் இப்போ தோன்றியுள்ளேன். உலகையே அதன் பாதையில் செல்ல முடியாமல் நிறுத்தி விட்டேன். நான் சொல்வதை நீ கேட்கும்படி செய்து விட்டேன்.

என்னிடம் நீ சரணடைந்து விட்டாய். ஆடம்பரங்களையும் பொருட்களையும் குவிக்க வேண்டும் என்ற உன் அவாவை நிறுத்தி விட்டேன்.

இப்போ பூமி வருந்துவதைப்போல் நீயும் வருந்துகிறாய், அழுகிறாய், கதறுகிறாய்.

நீ இப்போ உயிர் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனையில் இருக்கிறாய் மனிதா!

நிலைமை எப்படி இருக்கிறது பார்த்தாயா? பூமியில் காடுகள் எரியும் பொழுது உனக்கு காய்ச்சலை தந்தேன். சுற்றாடல் மாசடையும் பொழுது நான் உனக்கு சுவாசக் கோளாறைத் தந்தேன்.

ஒவ்வொரு நாளும் பூமி அழிந்து கொண்டிருக்கும் பொழுது நான் உனது ஆற்றல்களை இழக்கச் செய்தேன்.

நான் உனது சௌகரியங்களையும் ஆடம்பரங்களையும் சுற்றுலாக்களையும் பறித்தேன். இவைகள் தானே உன்னை பூமியையும் அதன் வேதனையையும் மறக்கச் செய்தவை.

மூட மனதா! இந்தப் பூமி உனக்கு மட்டும் சொந்தமல்ல. இந்த மண்ணில் தோன்றிய எல்லா உயிரினங்களுக்கும் எல்லாத் தோற்றங்களுக்கும் சொந்தமானவை.

நீயும் வாழ் மற்ற உயிரினங்களையும் வாழ விடு.

இப்போ உலக நாடுகளில் காற்று மாசடைவதில்லை. தொழிற்சாலைகள் நச்சுக் காற்றை கக்குவதில்லை.

மனிதா உன் வாழ்க்கைக்கு முக்கியமானது எது? ஆறுதலாக, பொறுமையாக இருந்து ஆழ்ந்து யோசி.

மீண்டும் சொல்கிறேன். நான் உன்னைத் தண்டிக்க வரவில்லை, விழிப்படையச் செய்யவே வந்தேன்.

அணுவைப் பிரித்து அணுகுண்டைப் படைத்தாய், விண்ணுக்குச் சென்றாய், விண்ணில் ஆய்வுகூடம் அமைத்தாய், சந்திரனில் கால் பதித்தாய், செவ்வாய்க் கிரகத்துக்கு விண்கலனை அனுப்பினாய். என்னத்தைக் கண்டாய் மனிதா!

என்னதான் கண்டாய்? மக்களை நேசி, இயற்கையை நேசி, பூமியையும் அதன் உயிரினங்களையும் நேசி. பூமியில் தோற்றம் பெற்ற யாவற்றையும் நேசி. ஞாபகப் படுத்திக்கொள்

மனிதனின் தலையீடு இல்லையென்றால் இவைகள் தன்பாட்டில் செழிப்படைந்து இன்புற்று இருக்கும்.

இயற்கையின் நீ ஒரு பகுதியாக இரு. உனக்குத் தான் பூமி சொந்தம் என்ற மமதையை விட்டு விடு. நான் மீண்டும் வருவேன். மிகவும் வீரியத்துடன் வருவேன்.

மூலம் : விவியென் (ஸ்பெயின்)
தமிழாக்கம் : ந.பாஸ்கரன்-நெல்லியடி.

# மூக்குத்தி அம்மன் திரைவிமர்சனம்..



பத்திரிகையாளராக கடவுள் மீது கோபம் காட்டும் ஆர்.ஜெ. பாலாஜி, நிஜத்தில் தனக்காக கடவுள் ஏதாவது நல்ல விடயத்தை செய்து விட மாட்டாரா என்று துடிக்கிறார். தன் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்க திருப்பதி சென்றுவரவேண்டும் என்று நினைக்கிறார் நடிகை ஊர்வசி. ஆனால் திருப்பதி செல்ல முயற்சிக்கும் ஒவ்வொரு நேரத்திலும் பல நகைச்சுவையான தடைகள் ஏற்படுகிறது.

இதனால் முதலில் குலதெய்வத்தின் கோவிலுக்கு சென்று ஒரு நாள் இரவு தங்கினால் அனைத்து பிரச்சினைகளும் விலகிவிடும் என்று குடும்பத்துடன் மூக்குத்தி அம்மன் கோவிலுக்கு செல்கிறார் ஆர்.ஜெ. பாலாஜி.

குலதெய்வ கோயிலில் அம்மன் சிலையை பார்த்து, என் வாழ்க்கையில் நடக்கும் பிரச்சினைகளை தீர்த்துவை தாயே என ஆர்.ஜெ. பாலாஜி அம்மனிடம் கண்கலங்கி மன்றாடி கேட்கிறார்.

அன்றிரவே ஆர்.ஜெ. பாலாஜி கேட்டதுபோல் மூக்குத்தி அம்மனாக நயன்தாரா நேரில் வந்து வரம் தருகிறார். வரத்தை தந்துவிட்டு அதன்பின் தன்னை உலகம் முழுவதும் பிரபலமாக்க வேண்டும் என்று ஆர்.ஜெ. பாலாஜியிடம் உத்தரவு போடுகிறார் மூக்குத்தி அம்மன்.

அதன்படி ஆர். ஜெ. பாலாஜி செய்து முடிக்கும் நேரத்தில் கடவுள்களை வைத்து பணம் சம்பாதிக்கும் வில்லன் சாமியாரின் என்ட்ரி. இதன்பின் வில்லன் சாமியாருக்கும், மூக்குத்தி அம்மனுக்கும் இடையே நடக்கும் அரசியல் கலந்த கடவுள் யுத்தம் தான் மூக்குத்தி அம்மனின் மீதிக் கதை.

**படத்தை பற்றிய அலசல்**

ஆர்.ஜெ. பாலாஜியின் மிகவும் நகைச்சுவையான யதார்த்தமான நடிப்பு மனதில் நிற்கிறது. மூக்குத்தி அம்மனாக திரையுலகிற்கு காட்சியளித்துள்ள நயன்தாராவின் நடிப்பு பாராட்டுக்குரியது.

மக்கள் கடவுள்களை பக்தியுடன் கும்பிடவில்லை என்றும், தான் செய்யும் தப்பை மறைக்கவும், மன்னிக்கும் இடமாக தான் கோவிலையும், தெய்வத்தையும் பார்க்கிறார்கள் என்றும் கூறுகிறார் மூக்குத்தி அம்மன்.

நயன்தாராவிற்கு போட்டியாக ஆர். ஜெ. பாலாஜி மற்றும் ஆர்.ஜெ. பாலாஜிக்கு போட்டியாக ஊர்வசி நடிக்கும் காட்சிகள் படத்தை விறுவிறுப்பாக எடுத்துச் செல்லுகிறது.

வில்லன் கதாபாத்திரத்தில் நடித்துள்ளவர் போலி சாமியார்களின் கதாபாத்திரமாக மாறி நடித்துள்ளது. ஒரு பக்கம் நகைச்சுவையாக இருந்தாலும் மறுபக்கம் இவர்களை மக்கள் இனிமேல் நம்ப வேண்டாம் என்று எடுத்துக்காட்டப்பட ஊர்வசி, ஆர்.ஜெ. பாலாஜியின் 3 தங்கைகள் மற்றும் இயக்குநர் மௌலி என அனைவரின் நிறைவான நடிப்பு அழகான வடிவமைப்பை படத்திற்கு கொடுத்துள்ளது.

ஆர். ஜெ. பாலாஜி மற்றும் என்.ஜெ. சரவணனின் இயக்கம், வசனம், திரைக்கதை மற்றும் இசை என அனைத்திலும் மூக்குத்தி அம்மன் நமக்கு சிறப்பான வரத்தை அளித்துள்ளார்.

இப்படி நகைச்சுவை கலந்த அரசியல் பேசும் மூக்குத்தி அம்மன் திரைப்படத்தில் அம்மன் வரும் ஓரிரு இடங்கள் ஓவராக இருக்கிறது.





தீப ஒளியின் ஆசியுடன்
அனைவரினது வாழ்விலும் இருள் நீங்கட்டும்!

இத் தீபத்திருநாளிலே ஏற்றப்படும் தீபங்களின் ஆசியுடன்
அனைவரினது வாழ்விலும் துயர் மறைந்து இருள் நீங்கி
இன்பம் பொங்கிட நல்வாழ்த்து கூறுகின்றோம்.

இத் தீபாவளி நன்னாளில் தேசத்தின் வங்கியாளர் இலங்கை
வங்கியின் பிரார்த்தனை அதுவேயாகும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk

**தலைமை அலுவலகம்:** இலங்கை வங்கி சதுக்கம்,
இல.01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

# கெத்து காட்டிய மும்பை

டாஸ் வென்ற டில்லி அணியின் கப்டன் ஷ்ரேயாஸ், "கடைசி மட்ச் முதல் பட்டிங் ஆடிதான் ஜெயிச்சோம். இந்த மட்சும் அதைத்தான் பண்ணப் போறோம்" என பூப்பாதையைத் தேர்ந்தெடுத்தார். மும்பை அணியில் ராகுல் சஹாருக்குப் பதிலாக, ஜெயந்த் அணிக்குள் நுழைந்தார். டில்லி அணியில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. டில்லியின் ஓப்பனிங் பட்ஸ்மனுக்கும் டக் அவுட்டுக்கும் தொட்டுத் தொடர்ந்து வந்த முட்டைப் பாரம்பரியம், கடைசி மட்சில் தான் முடிவுக்கு வந்தது. அதனால், ஸ்டொய்னிஸ் - தவான் ஜோடியையே மீண்டும் இறக்கிவிட்டார் ஷ்ரேயாஸ். இந்தப் பக்கம் முதல் ஓவரை வீசவந்தார் "கேனான்" போல்ட்.

ஆட்டத்தின் முதல் பந்து. மீண்டும் அந்த முட்டைப் பாரம்பரியம் டெல்லி




> "புள்ளிப்பட்டியலில் முதல் இரண்டு இடங்களைப் பிடித்த மும்பை – டில்லி அணிகளே, இறுதிச் சுற்றிலும் ஜோடி போட்டுப் பார்க்க, ஐ.பி.எல். வரலாற்றின் பெரும் ஐயிட்டங்காரனான மும்பையே மீண்டும் கப் அடிக்குமா, அல்லது இளம் ரத்தமான டில்லி புது வரலாறு படைக்குமா எனும் ஆவலுக்கு மத்தியில் ஆர்ப்பரிப்போடு தொடங்கியது மட்ச்.

ரசிகர்களின் முகத்தில் முள்ளை வைத்து சாத்தியது. ஸ்டொய்னிஸ், தங்க வாத்தாக மாறினார். "அதான் ஓப்பனிங் இறங்கினாலே நமக்கு டக் அவுட் ஆகுற வியாதி இருக்குனு தெரியுதுல்ல. நார்க்கியாவையும் ரபாடவையும் இறக்கிவிட வேண்டியதுதானே" என டென்ஷன் ஆனார்கள் டெல்லி ரசிகர்கள். அறுபது பிரம்படிகள் கொடுத்துவிடும் கோபத்தில் கடுகடு வென அமர்ந்திருந்தார் பொன்டிங் டீச்சர். ஓவரின் நான்காவது பந்து, மிட் விக்கெட் திசையில் ஒரு பவுண்டரியைத் தட்டினார் தவான். முதல் ஓவரின் முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 5 ஓட்டங்கள் என சிறப்பான தொடக்கத்தைத் தந்தது மும்பை அணி.

2 ஆவது ஓவரை வீசவந்தார் பூம் பூம் பும்ரா. தேர்ட் மேன் திசைக்கு ஒரு பவுண்டரியைத் திருப்பிவிட்டார் தவான். மீண்டும் வந்தார் போல்ட். கவர் திசையில் ஒரு பவுண்டரியை விரட்டிவிட்டார் கப்பார். ஓவரின் 4 ஆவது பந்து, ரஹானேவின் பட்டை உரசிச்சென்று டி கொக்கின் கைகளில் தஞ்சம் புகுந்தது. "அவுட்" என ஒற்றைக் கையைத் தூக்கி னார் அம்பயர். சில டில்லி வாலாக்கள் கண்ணீர் வடித்தார்கள்.

ஜெயந்த் தனது கடைசி ஓவரை வீச வந்தார். லொங் ஆஃப் திசையில் ஒரு பவுண்டரியைக் கடாசினார் ஹெட்மயர். பும்ரா வீசிய 17 ஆவது ஓவரில், மிட் ஓபில் ஒன்று, பொயின்ட்டில் ஒன்று என இரு பவுண்டரிகளை அடித்திருந்த ஷ்ரேயாஸ், இந்த இன்னிங்ஸில் அரை சதத்தையும் சீசனில் 500 ஆவது ஓட்டங்களையும் கடந்திருந்தார். "ஹெட்மயர், ஹிட்மயரா மாறு" என டில்லி ரசிகர்கள் வேண்டிக்கொண்டிருந்த காப்பில், போல்ட் அவரை அவுட் செய்திருந்தார். "ஏலேய் போல்ட்டு... என் வயிறு எரியுதுலே" என துடித்தனர். அடுத்து அக்ஸர் வந்தார். தேர்ட் மனில் ஒரு பவுண்டரியைப் போட்டார். பும்ரா வீசிய 19 ஆவது ஓவரிலும் 6 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தன. இதில் இன்னும் கொடுமையாக கடைசி ஓவரை வீசவந்த கூல்டர் நைல், அக்ஸர் மற்றும் ரபடா இருவரின் விக் கெட்களையும் கழட்டினார். இரண்டு விக்கெட்களுக்கு மத்தியில் ஒரேயொரு சிக்ஸரை அடித்தார் கப்டன் ஷ்ரேயாஸ். 20 ஓவரின் முடிவில், 156/7 என சுமாரான ஸ்கோரை அடித்திருந்தது டில்லி.

"இன்னைக்கு தலைவன் ரோ-ப்ரோ சதம் அடிக்கணும்னு காத்திருந்தோம். ஒரு 200 ஓட்டங்களாவது அடிச்சுருக்கலாம் இந்த டில்லி. எல்லாத்துக்கும் போல்ட் பயதான் காரணம்" என மும்பை ரசிகர்கள் வேறுமாதிரியான சோகத்தில் இருந்தனர். ரோஹித்தும் டி கொக்கும் மும்பை எக்ஸ்பிரஸை ஸ்டார்ட் செய்ய, முதல் ஓவரை வீசவந்தார் ரவிச்சந்திரன் அஷ்வின். ஓவரின் 3 ஆவது பந்து, லாங் ஓன் திசையில் ஒரு சிக்ஸரைப் பறக்க விட்டார் ரோஹித். அடுத்த ஓவரை வீசவந்தார் ஊதாக்கலரு தொப்பி ரபடா. 2 ஆவது பந்து, எக்ஸ்ட்ரா கவரில் ஒரு பவுண்டரியைத் தட்டி ஆரம்பித்தார் டி கொக். 3 ஆவது பந்து லெக் பைஸில் 4 ஓட்டங்கள். 5 ஆவது பந்து, மிட் விக்கெட்டுக்கு மேல் ஒரு சிக்ஸரை பறக்கவிட்டார். கடைசிப் பந்தில், பொயின்ட் திசை மேல் ஒரு பவுண்டரியை வெளுத்து சரவெடி கொளுத்தினார் டி கொக்.

பவர்ப்ளேயின் முடிவில் 61/1 என கெத்தாக ஆடிக்கொண்டிருந்தது மும்பை. அக்ஸர் வீசிய 6 ஆவது ஓவரில் 3 ஓட்டங்களும், துபே வீசிய 7 ஆவது ஓவரில் 4 ஓட்டங்கள் மட்டுமே கிடைத்தன. இன்னும் சிறப்பாக 8 ஆவது ஓவரில் வெறும் 2 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்தார் அக்ஸர். ஆனால், அடுத்த ஓவரில் 2 சிக்ஸர்களையே கொடுத்தார் துபே. லோங் ஓபில் ஒன்று, லோங் ஓனில் ஒன்று என விளாசினார் ரோஹித். அக்ஸர் வீசிய அடுத்த ஓவரில், ஃபைன் லெக் திசையில் ஒரு பவுண்டரியும் கிடைத்தது கப்டனுக்கு. அஸ்வின் வீசிய 11 ஆவது ஓவரின் 5 ஆவது பந்தை எக்ஸ்ட்ரா கவர் திசையில் தட்டிவிட்டு, ரோஹித் சிங்கிள் ஓட முயன்றார். வேண்டாம் என சூர்யகுமார் எவ்வளவோ சொல்லியும் ரோஹித் ஓடிவந்ததால் விக்கெட்டைத் தியாகம் செய்தார். அவரின் தியாக உணர்வைப் பாராட்டி, கரகோஷங்கள் எழுப்பி பெவிலியனுக்கு வரவேற்றார்கள் மும்பை அணியினர்.

ரபடா வீசிய 12 ஆவது ஓவரில், டபுள் பவுண்டரிகளை விரட்டி தனது அரை சதத்தை நிறைவு செய்தார் ரோஹித். அஷ்வின் வீசிய 13 ஆவது ஓவரிலும், ரோஹித்துக்கு ஒரு பவுண்டரி கிடைத்தது. 15 ஆவது ஓவரை வீசவந்த ஸ்டொய்னிஸ்க்கு லோங் ஓப் திசையில் ஒரு சிக்ஸரை தீபாவளி பரிசாக கொடுத்து அனுப்பினார் கிஷன்.

24 பந்துகளில் 20 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்கிற நிலை. நார்க்கியா வீசிய 17 ஆவது ஓவரில் தனது விக்கெட்டை இழந்தார் ரோஹித். சப்ஸ்டிட்யூட் வீரரான லலித் அற்புதமான கட்ச் ஒன்றைப் பிடித்து, அருமையான இன்னிங்ஸை முடிவுக்கு கொண்டு வந்தார்.

அப்போதும், மும்பையின் ஆட்டத்தில் வேகம் குறையவில்லை. பொல்லார்டு, தொடர்ந்து இரண்டு பவுண்டரிகளை பொளந்தார். 18 பந்துகளில் 10 ஓட்டங்கள் மட்டுமே தேவை. ரபடா வீசிய 18 ஆவது ஓவரில் அநியாயமாக அவுட் ஆனார் பொல்லார்டு. "ஏம்பா அவசரம்" என பதறினார்கள் மும்பை வாசிகள். இன்னும் ஒரு ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி எனும் நிலை. அப்போது அவுட்டானார் ஹர்திக். "அட போங்கப்பா" என பல்தான்கள் சந்தோஷமாக நொந்துகொண்டார்கள். அடுத்து அவரது சகோதரர் க்ருணால் ஒரு சிங்கிளைத் தட்ட, மும்பை கோப்பையைத் தட்டியது!


டில்லியின் கோட்டையை தனியாளாக தகர்த்தெறிந்த போல்ட்டுக்கு ஆட்ட நாயகன் விருது வழங்கப்பட்டது.

ஆர்.சி.பி.அணியின் அட்டகாசமான பட்ஸ்மேன் தேவ்தத் படிக்கல்லுக்கு இந்த சீசனின் சிறப்பாக வளர்ந்துவரும் வீரருக்கான விருது வழங்கப்பட்டது. படிக்கல்லின் பயணத்தில் முக்கியமான மைல்கல்! கோப்பை மட்டுமல்ல, பேர்ப்ளே விருதும் மும்பைக்குத்தான். ஜோசிய ஆர்ச்சருக்கு இந்தத் தொடரின் மதிப்புமிக்க வீரருக்கான விருது வழங்கப்பட்டது. "பொன்ட்டிங் மாதிரி ஒரு கோச் கிடைக்க நாங்க கொடுத்து வெச்சிருக்கணும். இவ்வளவு தூரம் நாங்க வந்ததுக்கே ரொம்ப சந்தோஷம் அடையுறோம். மும்பை மாதிரியான ஒரு அணிக்கு எதிரா, ஐ.பி.எல்.மாதிரியான ஒரு தொடரின் இறுதிப்போட்டியில் எதிர்த்து விளையாடுறதே பெரிய விடயம். அடுத்த சீசன்ல இன்னும் கெத்தா வருவோம்" என்றார் ஷ்ரேயாஸ்.

"எல்லோரும் சிறப்பா விளையாடினோம். இப்போ கப் ஜெயிச்சுருக்கோம். ஆரம்பத்துல இருந்தே ஜெயிக்குறதை ஒரு வழக்கமா மாத்திக்கணும்னு முடிவு பண்ணோம். அந்த மனநிலைதான் எங்களை வெற்றியாளர்களா மாத்தியிருக்கு. இந்த வெற்றிக்கு காரணமான அனைத்து நல் உள்ளங்களுக்கும் மனதார நன்றி சொல்லிக்குறேன். நன்றி வணக்கம்" என முடித்தார் கப்டன் ரோஹித்!

# காதலின் சின்னம் பாபிலோனின் தொங்கும் தோட்டம்

பண்டைய உலக அதிசயங்களில் இரண்டாவது அதிசயமாகச் சொல்லப்படுகிறது பாபிலோனின் தொங்கும் தோட்டம்.



இது இன்றைய ஈரான் தேசத்தில் பக்தாத்திலிருந்து ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் யூப்ரடீஸ் நதிக்கரையில் அமைந்திருக்கும் அல் ஹில்லாவுக்கு அருகே இருந்ததாகக் கூறப்படுகிறது.

பாபிலோனிய தொங்கு தோட்டத்தை கி.மு.600 ஆம் ஆண்டில் அமைத்தவர் மன்னர் இரண்டாம் நெபுகத் நாசர். இவர் பாபிலோனிய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்தி சிறந்த முறையில் ஆட்சி புரிந்தவர். பாபிலோனிய வம்சத்தின் குறிப்பிடத்தக்க மன்னனாக விளங்கினார் இரண்டாம் நெபுகத் நாசர்.

பாபிலோனிய அரசர்கள் வாழ்ந்து வந்த அரண்மனையைச் சுற்றிலும் பாதுகாப்பிற்காக மிக நீளமான சுவர் ஒன்று கட்டப்பட்டது.

வரலாற்று அறிஞர் ஹிரோடோட்டஸ் அந்த சுவர் பற்றி குறிப்பிடும் போது சுமார் 56 மைல்கள் நீளமும் 320 அடி உயரமும் கொண்டதாகக் கூறியுள்ளார். அதனால் தான் ஆன்டிபாட்டரின் முதல் உலக அதிசயப் பட்டியலில் பாபிலோனியப் பெருஞ்சுவர் மற்றும் தொங்கும் தோட்டம் என்று சேர்த்தே பதிவு செய்திருந்தார்.

ஆனால் அகழ்வாராய்ச்சியாளர்களின் தொடர்ந்த ஆய்வுகளில் கிடைத்த சான்றுகள்படி பார்த்தால் அதிகபட்சம் அந்த சுவரின் நீளம் 10 மைல்கள்தான் என்றும் ஹிரோடோட்டஸ் குறிப்பிட்டதுபோல அத்தனை உயரமும் இருக்க வாய்ப்பில்லை என்பது உறுதியானது.

ஹிரோடோட்டஸ் பாபிலோன் நகரம் அதன் காலத்தில் வேறெந்த நகரையும் விட இணையற்ற வனப்புடன் கூடிய நகராக விளங்கியதாகக் குறிப்பிடுகிறார்.

பாபெல் தேசத்தை நிம்ரோத் எனும் மன்னன் நிர்மாணித்தான்.

வேதாகமக் குறிப்புகள்படி நிம்ரோத் தான் உலகின் முதல் அரசாட்சியை நிறுவிய மன்னன்.

"பாபெல்" என்ற சொல்லுக்கு "கடவுளின் நுழைவாயில்" என்று பொருள். பின்னர் அது கிரேக்கப் பதமான "பாபிலோன்" என்ற சொல்லால் அழைக்கப்பட்டது.

நியோபாபிலோனிய வம்சத்தின் அரசன் நெபுபோல்சாரின் மறைவுக்குப் பிறகு கி.மு.605 இல் முடி சூட்டிக் கொண்ட நெபுகத் நாசர், தனது தீரம் மிக்க போர்த்திறனால் பாபிலோனிய சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்திக் கொண்டே சென்றான்.

நெபுகத் நாசர் என்பதற்கு "ஞானத்தின் முதல் மகனைக் காப்பவன்" என்று பொருள். பாபிலோனின் காக்கும் கடவுளான மர்தூத்தின் மகன் என்றும் புகழப்படுகிறார்.

நெபுகத் நாசருக்கு "விதிகளை வென்றவன்" என்ற பொருள்படும் படியான "பகத் நாசர்" என்ற பெயரும் உண்டு.

யூதர்களின் அரசனாகிய யோயாக்கீமை தோற்கடித்து அவனைக் கப்பம் கட்ட வைத்தான். ஆனால் சில மாதங்களிலேயே அவன் கலகம் செய்த காரணத்தினால் அவனைக் கொன்று விட்டு அவனது மகன் யோயாக்கீனை யூத அரசனாக முடி சூட வைத்தான்.

அவனும் சில வருடங்கள் கழித்து நாசரை எதிர்த்து கலகம் செய்ததனால் அவனைக் கொன்று விட்டு அவனது சித்தப்பா சிதேக்கியாவை அரசனாக்கினான். (தொடரும்)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2163

### திருச்செல்வம்





### மோசஸ்




### கீர்த்தனா




### சங்கரன்




### அஜந்தன்




### றுசாந்த்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 230

## மழை நீரே குடிப்பதற்கு அதிசிறந்த நீர்

சூரியக்கடவுளின் சத்தியினால் சுத்திகரிக்கப்பட்டு எங்கும் பொழியும் மழை நீரே குடிப்பதற்கு அதி சிறந்த நீர் என உலகில் நடத்தப்பட்ட எல்லா ஆராய்ச்சிகளும் உறுதி செய்து வருகின்றன.

கிணற்றுநீர், ஆற்றுநீர், போத்தலில் அடைக்கப்பட்டு வரும் நீர், சாதாரண கொதித்து ஆறிய நீர் என எல்லா வகையான நீருடனும் ஒப்பிடும் பொழுது மழை நீரே குடிப்பதற்கு அதி கூடிய பாதுகாப்பான நீர் என்பது ஐயம் திரிபுற நிரூபிக்கப்பட்டிருக்கிறது.


நீரில் கரைந்திருக்கும் பல இரசாயனப் பதார்த்தங்களும் கனி உப்புக்களும் பல ஆபத்தான நோய்களுக்குக் காரணமாக அமைகின்றன. மழை நீரில் இவ்வாறான ஆபத்தான இரசாயனப் பொருட்களோ கனியுப்புக்களோ இல்லை. எனவே மழைநீரை அருந்துவதன் மூலம் பல சிறுநீரகம் சம்பந்தமான நோய்கள், புற்றுநோய்கள், தொற்று நோய்கள், குடல் சம்பந்தமான நோய்கள் போன்ற பல கொடிய நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். நீரை கொதிக்க வைப்பதன் மூலம் நீரில் கரைந்துள்ள இரசாயனப் பொருட்களையோ கனியுப்புக்களையோ அகற்ற முடியாது. வடிகட்டும் செயன்முறை மூலமும் இவற்றை முற்றாக அகற்றிவிட முடியாது. எனவே நாம் மழை நீரைச் சேமித்துக் குடிநீராகப் பாவிக்கும் நடைமுறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

மழை நீரைக் குடிநீராகப் பாவிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்குப் பலதரப்பினாலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த முயற்சிகளுக்கு மக்களிடையே கிடைக்கும் ஆதரவும் ஊக்கமும் போதுமானதாக இல்லை. இதற்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டும். இது சம்பந்தமான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட வேண்டும்.

வீடுகளிலும் பொது இடங்களிலும் பாடசாலைகளிலும் மழைநீர் சேமிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து இதனைக் குடிநீராகப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

## எமது பழக்கவழக்கங்களும் உணவு முறைகளுமே வாய்ப்புற்று நோய்க்குக் காரணங்கள்



புற்றுநோயில் புற்றுநோய்க் கலங்கள் ஒட்டுமொத்த வெளிப்புறத் தோற்றம் கால்களை விரித்திருக்கும் நண்டின் தோற்றத்தை ஒத்திருப்பதால் அதற்கு கான்சர் (Can – ccr) என மருத்துவ ஆய்வாளர்கள் பெயரிட்டார்கள்.

உலக சுகாதார ஸ்தாபனம் மனித உயிர்களைப் பலி கொள்ளும் முக்கிய பத்துக் காரணிகளில் புற்றுநோயும் முக்கியமானது என இனங்காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆண் புற்றுநோயாளர்களில் வாய்ப் புற்றுநோயே அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையில் கூடுதலாக 50 வயதிற்கு மேற்பட்டவர்களில் ஆண்களில் 29.45 வீதமும் பெண்களில் 10 வீதமும் காணப்படுவதாக அண்மைத்தரவுகள் சுட்டிக்காட்டப்படுகின்றன.

எமது பழக்கவழக்கங்களும் உணவு முறையுமே வாய்ப் புற்றுநோய்க்கு காரணங்களாக அமைகின்றன. இந்தப் பாதகமான காரணிகள் ஒன்று அல்லது பலவோ சேர்ந்து செயற்படுவதன் பிரதிபலனாக வாய்ப்புற்று நோய் ஏற்படுகின்றது. புகையிலை, சிகரெட், பீடி, சுருட்டு என்ற வகையிலே அல்லது வெற்றிலையுடன் சேர்த்துப் பாவித்தல், வாசனைப்பாக்கைத் தனியாக பாவித்தல், சாராயம், கள்ளு, கசிப்பு என்பன குடித்தல், HIV தொற்று நீண்ட காலமாகவுள்ள மாறத புண், போசாக்கின்மை, வாய்ச்சுகாதாரமின்மை போன்றவை முக்கியமாகும்.

புற்று நோய்க்கான எச்சரிக்கை அறிகுறிகள் எவையென பார்ப்போமானாயின் வாய் உள்ள மேலணி நாக்கு அல்லது உதட்டில் உள்ள மாறாத புண் புற்றுநோய் முன்னிலைகளான உரிக்க முடியாத வெண்படலம், உணவு விழுங்குவதில் அல்லது அரைத்தலில் கடினமாக இருப்பது, வாய் திறப்பது அல்லது நாக்கை வெளியில் நீட்டுவது படிப்படியாக குறைவடைதல், வாய் அல்லது கன்னத்தில் குறுகிய காலத்தில் அசாதாரண வளர்ச்சியடையும் கட்டி, வாயில் இருந்து இரத்தம் வடிதல், வாய்ப் பகுதியில் உணர்ச்சி அற்று போதல், உறைப்பு உண்ணும் போது அதிக எரிவுகளாகும்.

புற்றுநோயை எவ்வாறு தவிர்க்கலாம் என நோக்கினால் மேற்கூறப்பட்ட பாதகமான காரணிகளை அறிந்து கொண்டு உங்கள் பழக்கவழக்கங்களை மாற்றி அப்பாதகமான காரணிகளை தவிர்க்க வேண்டும். உணவுப் பழக்க வழக்கத்தைக் கருத்தில் கொண்டால் நாம் பாரம்பரிய உணவு முறைகளைத் தவிர்த்து மேலைத்தேய உணவு முறைகளுக்கு பழக்கப்பட்டு எண்ணெய் கூடிய ஆகாரம், இறைச்சி போன்றவற்றை அதிகமாக உண்டு கொழுப்புச்சத்து கூடி உடல் பருமனும் கூடுகின்றது. அதிக கொழுப்பு அடங்கிய உணவு, அதிக உப்பிட்ட உணவு, அதிக உறைப்புச் சேர்த்த உணவு,பொரித்த கருகிய உணவு, பொரித்த எண்ணெயை திரும்பத்திரும்ப உபயோகிப்பது, நிறமூட்டி உணவு இறைச்சி வகைகளை திரும்பத் திரும்ப சூடாக்கி உண்ணும் பழக்கம் போன்றவற்றையும் சில வகைப் புற்று நோய் காரணமாக அமைகின்றது.

புற்றுநோய்க்கு நார்த்தன்மை கூடிய தானிய வகைகள், பச்சையிலைக் கறி வகைகள், மஞ்சள் பழ வகைகள் அதிகமாக உண்ண வேண்டும். பச்சையிலைக்கறி, மஞ்சள் பழங்களில் விற்றமின் A,C அதிகமாகக் காணப்படுகிறது.

புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டு பிடித்தால் முற்றாக குணப்படுத்தலாம். புற்றுநோய்ச்சிகிச்சை முறைகளை ஆராய்வோமானால் மூன்று வகையான சிகிச்சை முறைகள் கையாளப்படுகின்றன.

அறுவைச் சிகிச்சைமுறை (Surgery), கதிர்வீச்சுமுறை (Radiation), புற்றுநோய் எதிர்ப்பு மருந்து (Chemotherapy). புற்றுநோய் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் இருக்குமானால் அறுவைச்சிகிச்சை மூலம் அப்பகுதியை வெட்டி அகற்றிவிடலாம்.

கதிர்வீச்சு முறையில் புற்றுநோய்க்கலங்கள் கொல்லப்படுகின்றன. அல்லது செயலிழக்கப்படுகின்றன. இதனால் புற்றுநோய்க்கலங்கள் மேலும் பிரிவது தடுக்கப்படுகின்றது. கதிர்வீச்சு மருத்துவம் ஆரம்ப நிலையில் கட்டுப்படுத்தவும் செய்கின்றது. புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளிலுள்ள கல நச்சு புற்றுநோய்க் கலங்களை கொல்லும் அல்லது செயலிழக்கச் செய்யும்.

புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகள் வாயால் அல்லது ஊசியால் வழங்கப்படுவதால் இரத்தத்தில் கலந்து வெவ்வேறு பகுதிகளுக்கு எடுத்துச் செல்லக்கூடியவை. இவை இரத்தப் புற்றுநோய் அல்லது பரவும் தன்மையுள்ள புற்றுநோய்களுக்கு அதிகம் பாவிக்கப்படுகிறது.

வெவ்வேறு வகையான புற்றுநோய்கள் இச்சிகிச்சை முறையில் ஏதாவதொன்றிற்கு அதிகமாக அழிக்கப்படும் தன்மை வாய்ந்தது. சிலவகைப் புற்றுநோய்கள் இச்சிகிச்சை முறைகளை இணைத்துச் செய்யும் போது விரைவாக அழிக்கப்படக் கூடியவை.

புற்றுநோய்க்கும் மனதுக்கும் சம்பந்தம் உண்டு. புற்றுநோய் என்று கண்டுபிடித்து வெளிப்படுத்துவதிலிருந்து சிகிச்சை முறைகள் கையாளப்படும் வரைக்கும் நோய் மனதைப்பாதித்து மனச்சிதைவிற்கு ஆளாகாமலிருக்க ஆலோசனை முறைகளும் மனநல மருத்துவமும் உள்ளன. புற்றுநோயிலிருந்து மீள வெறும் சிகிச்சை மட்டும் போதாது. அன்பு, அரவணைப்பும் அவசியம்.

Dr.வ.தேவானந்தம்
பல் மருத்துவர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்